வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.



மில்க்வைற் நீலசோப் பிரகாசமாய் சலவை செய்கிறது
மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1994 வைகாசி திங்கள் 5-ம் நாள் (19—5—1963) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 24 | இதழ் 51

# திரு. நடேசனுக்கு மந்திரிபதவி கிடைக்காது

## ஆட்சிக் குழுவினரின் கடும் ஆட்சேபனை

ஸ்ரீனுவில் இலங்கைத் தூதராகக் கடமையாற்றி இலங்கைக்குத் திரும்பியுள்ள திரு ஏ. பி. பெரேராவும், அரசாங்கத்தால் அண்மையில் செனட்டராக நியமிக்கப்பட்டுள்ள திரு. சு. நடேசனும் மந்திரிகளாக நியமிக்கப்படலாம் என்றும் யாழ்ப்பாண எம். பி. திரு. துரையப்பா உதவி மந்திரியாக நியமிக்கப்படலாமென்றும் பலத்த வதந்திகள் நிலவியதெனினும், அரசாங்கப் பாராளுமன்றக் குழுவில் ஒரு சாராரின் பலத்த எதிர்ப்பின் காரணமாக அவர்களுக்கு மந்திரி பதவி கிடைப்பது சாத்தியமில்லையென்று கூறப்படுகிறது.

திரு. ஏ. பி. பெரேரா நிதி மந்திரியாக நியமிக்கப்படுவாரெனத் தெரிகிறது. செனட்டர் திரு. சு. நடேசனும் ஒரு மந்திரிப் பதவியை எதிர்பார்க்கிருரென்றும் பேச்சுகள் அடிபடுகின்றன. திரு. ஏ. பி. பெரேராவோ திரு. நடேசனோ திரு. துரையப்பாவோ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களல்ல. கட்சி உறுப்பினரல்லாதோருக்கு மந்திரி பதவிகளோ, உதவி மந்திரி பதவிகளோ கொடுக்கக் கூடாதென்று அரசாங்கப் பாராளுமன்றக் குழுவினரிற் சிலர் புரட்சி செய்யத் தொடங்கியுள்ளனர்.

அடுத்த வாரம் அலரி மாளிகையில் நடைபெறவிருக்கும் அரசாங்கப் பாராளுமன்றக் குழுவில் இதுபற்றிக் காரசாரமான விவாதம் நடைபெறுமென்

(9-ம் பக்கம் பார்க்க)

## திருப்பி அனுப்புங்கள்

கொழும்பில் உள்ள தமிழ் பேசும் வாக்காளர்களுக்கு தேர்தல் அதிகாரியால் அனுப்பி வைக்கப்படும், 62ம் ஆண்டுக்குரிய தேர்தல் இடாப்புக்கள் திருத்தம் பற்றிய கடிதங்கள் அனைத்தும் தனிச் சிங்களத்திலேயே உள்ளன.

இவ்வித கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ள சிலர் அவற்றைத் தேர்தல் அதிகாரிக்கே திருப்பி அனுப்பி வைத்துள்ளார்கள். இதுவரை அவற்றைத் திருப்பி அனுப்பாதவர்கள், உடனடியாக அந்தக் கடிதத்தைத் திருப்பி அனுப்பி, தமிழ் மொழிக் கடிதங்களைக் கோருமாறு தமிழரசுக் கட்சியும் எல்லாம் தமிழ் இயக்கத்தினரும் கொழும்பு வாழ் தமிழ் பேசும் மக்களை வேண்டியுள்ளனர்.

## வடகிழக்கின் உற்பத்திகளை வினியோகிக்கும் திட்டம்

### கொழும்பு தமிழரசுக் கிளை தீவிரமான ஏற்பாடுகள்

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள சுதேசியப் பொருட்களைக் கொழும்பில் வினியோகம் செய்வதற்கு தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளை வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறது.

கடந்த வாரம் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை மேற்கண்ட முடிவைச் செய்திருப்பதாக கொழும்புக் கிளைச் செயலாளர் திரு. கை. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்புப் பகுதிகளில் செய்யப்படும் பாய்கள் மற்றும் பொருட்கள் உட்பட, யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள கைத்தறி ஆடைகள், பனம் பொருட்கள் இதே போன்று மன்னர், திருமலை, வவுனியா மாவட்டங்களில் உள்ள சுதேசியப் பொருட்கள் அனைத்தையும் கொழும்பில் விற்பதற்கு விரிவான முறையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொழும்பு வாழ் மக்கள் இப்பொருட்களை உபயோகித்து இம்முயற்சிக்குக் கை கொடுக்க வேண்டும் என்றும், தமிழ்ப் பிரதேசங்களில் உள்ளோர் தங்கள் பொருட்களை விற்பனை செய்வது பற்றிக் கொழும்புக் கிளையுடன் தொடர்பு கொள்ளும்படியும் செயலாளர் வேண்டியுள்ளார்.

#### மன்னரில் செயற்குழு

மன்னர் மாவட்டத்தில் எல்லாம் தமிழ் இயக்கம் இவ்வாரத்தில் ஆரம்பமாகிறது. 18-ம் திகதி நடைபெறும் தமிழரசுக் கட்சியின் செயற்குழுவைத் தொடர்ந்து 20-ம் திகதி வரை பொதுக் கூட்டங்கள் நடைபெறும் என்று தெரிகிறது. தமிழரசுத் தலைவர்கள் அனைவரும் சனிக்கிழமை முதல் மன்னர் மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கான ஏற்பாடுகளை மன்னர் தமிழரசுக் கிளை கவனித்துவருகிறது.

# 'சர்வாதிகார' பிக்குவுக்கு செல்வாக்கு குறையவில்லை

## ஆதரவு மென்மேலும் வளருகிறது

ஒரு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதன்மூலமே இந்நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்தலாம் என்று அறிக்கை விடுத்த ஞானசீக தேரோவின் தொடர்பை துண்டித்துக் கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தும் கூட, அரசாங்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் தேரோவுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளதாக நம்பப்படுகிறது. அரசாங்க முக்கியத்துவம் வாய்ந்த மேடைகளில் இன்னும் அவர் பிரமுகராகவே கருதப்படுகிருர்.

ஆளும் கட்சியைச்சேர்ந்தவர்கள் பலர் இந்த அறிக்கையைப் பகிரங்கமாகக் கண்டித்தார்களெனினும், மறைமுகமாக அரசாங்க மேலிடத்தின் ஆதரவு ஞானசீக தேரோவின் அறிக்கைக்கு ஆதரவாக இருக்கிறது என்று நம்பப்படுகிறது. அரசாங்கக் கட்சிக்குள் மறைமுகமான திட்டங்களைத் தீட்டும் பலருடைய இரகசிய வேலைகளில் ஒன்ருன இச் செய்தியை தேரோ பகிரங்கமாக வெளியிட்டுவிட்டார் என்றே பலரும் கருதுவதாகத் தெரிகிறது.

ஆளும் கட்சி பாராளுமன்றக் குழுவினர் ஏகோபித்துத் தீர்மானித்தபடி ஞானசீக தேரோவை அரசாங்கக் கட்சி மேலிடம் ஒதுக்குவதாகவும் தெரியவில்லை.

அண்மையில் துறைமுக ஆணைக் குழுவினரால் நடாத்தப்பட்ட ஒரு பொதுக் கூட்டத்தில், மகா தேசாதிபதி,

(8-ம் பக்கம் பார்க்க)

## எழுத்தாளர் மன்றம் நடத்தும் கருத்தரங்கம்

கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் சார்பில் 19-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஐந்து மணிக்கு கொழும்பு விவேகானந்தா சபை மண்டபத்தில் ஒரு கருத்தரங்கம் நடைபெறவிருக்கிறது.

'தமிழ் மொழியின் வாழ்வில் எழுத்தாளர் கடமை' என்ற தலைப்பில் நடைபெறவிருக்கும் இந்தக் கருத்தரங்கத்திற்கு, பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமை தாங்குவார்.

திருவாளர்கள் கலாநிதி ஆ. சதாசிவம், பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு. வே.) க. கைலாசபதி, இ. இரத்தினம், கா. சிவத்தம்பி, ஈழத்து இரத்தினம், ச. வ. பீற்றர்பிள்ளை, சில்லையூர் செல்வராஜன், செல்வி சற்சொருபவதி நாதன் ஆகியோர் கருத்தரங்கில் கலந்துகொள்ளுகிருர்கள்.

**தமிழ் பேசும் இளைஞர்களே!**

அடுத்த வாரம்

**இதே இடத்தைப் பாருங்கள்**



சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பாடிய

# யாழ்ப்பாணத்துச் சாமியார் பருத்தித்துறையைச் சேர்ந்தவரே

## அறியாதோர் தெரிந்துகொள்ள வரலாறு இதோ

பருத்தித்துறையிலே முற்போக்கு வாதிகள் என்ற போர்வையிலே பாரதியாரின் ஞானகுருவை நினைந்து ஓர் நிகழ்ச்சி நடத்தினால் நமக்கேதும் கவலையில்லை. என்னவோ சாயம் வெளுத்த பேர் வழிகள் யாரோ ஒரு பெரியவரைக் கொண்டாடி விட்டுப் போகட்டும் என நாம் பாராமுகமாயிருந்தோம்.

ஆனால், சுதந்திரன் இதழில் பாரதியாரின் ஞான குருவைப்பற்றிஓர் கட்டுரை எழுதப்பட்டிருப்பதைக் கண்ணுற்றேன். அதில் பாரதியாரின். ஞான குருவைப் பற்றிப் பழித்து எழுதப்பட்டிருந்தது. அது கண்டு ஆத்திரமுற்றேன். அதில் "எவனோ ஒரு ஊர் பேர் தெரியாத ஆளுடைய சமாதியை" பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சாமியினது என்று மயங்க வேண்டாமென எழுதியிருந்தது.

> இலக்கியத்தின் பெயரால் தமிழ் மொழியை இழித்துப் பழித்துப் பிழைத்து வரும் 'எழுத்தாளர்களும்' அவர்களது நோக்கங்களையும் அலசியாராய முற்பட்ட பண்டிதர் பா. பரசுராமமூர்த்தி, யாழ்ப்பாணத்துச் சாமியார் பற்றிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளார். யாழ்ப்பாணத்துச் சாமியார் பற்றிப்பண்டிதர். பா. பரசுராமமூர்த்தி தெரிவித்த கருத்தை வேண்டிய வரலாற்றுக் குறிப்புக்களுடன் மறுத்து துன்னாலை தெற்கைச் சேர்ந்த திரு. க. ஞானபாஸ்கரன் இக் கட்டுரையை வரைந்துள்ளார். இது போன்று ஏனையோரும் தக்க சான்றுகளுடன் ஆதரித்தோ, எதிர்த்தோ, எழுதலாம். தகுதியானவை பிரசுரமாகும்.

ஆனால் அவரைப் பற்றிய வரலாறு பின் வருமாறு:— 'யாழ்ப்பாணத்துச் சாமி' என்று மகாகவி பாரதியார் பாடிய தவசிரேஷ்ட மகான். இலங்கையில் யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு வியாபாரி மூலை என்னும் இடத்தில் உத்தம வேளாள குலத்தில் பிறந்தவர். இவர் தந்தை சின்னையா. வேலுப்பிள்ளை. இவர் தந்தை முதல்தாரமாக செல்லம் என்னும் பெண்ணை விவாகம் செய்துகொண்டார். அவர்களுக்குக் காமாட்சி அம்மாள் என்னும் பெண் குழந்தை பிறந்தது. செல்லம் காலமான பின் கரவெட்டி வடக்கு வதிரிக் குறிச்சி வேளாண்மையைச் சேர்ந்த ஆறுமுகத்தின் மகள் லட்சுமியை மணந்து பெற்ற பிள்ளைகள் அருளம்பலம், பொன்னுச்சி என்னும் இருவர். இந்த அருளம்பலத்தைத்தான் யாழ்ப்பாணத்துச் சாமி என்று பாரதியார் புகழ்ந்து பாடியுள்ளார்.

1878-ம் ஆண்டு இவர் அவதரித்தார். மேலைப் புலோலி சைவ வித்தியாசாலை எனப்படும் தம்பசட்டிப் பள்ளியில் கல்வி பயின்றார். அக் காலத்தில் மகா வித்துவ சிரோமணியாய சதாவதானம் நா. கதிரவேற்பிள்ளை அக்காலத்தில் சாதாரண உபாத்தியாயராக

**க. ஞானபாஸ்கரன்**

இருந்தார். இவருக்கும் கதிரவேற்பிள்ளைக்கும் நட்பு உண்டாயிற்று.

பாடசாலையில் படிப்பு முடிவடைந்த பின் பாட்டி காளியம்மை இவரை வளர்த்து வந்தார். தம் உறவினரான பரமப் பிள்ளையுடன் கம்பளையில் உள்ள கடையில் தங்கியிருந்தார். பின் கம்பளையிலிருந்து வியாபாரிமூலை சென்றார்.

ஊரில் உள்ள தம் காணியை விற்றும் ஈடாகவும் பணம் திரட்டி மட்டக்களப்பு சென்றார். அங்கே ஒரு கடை வைத்தார். அதில் மிகவும் நஷ்டம் ஏற்பட தல யாத்திரை செய்வாரானார்.

அவர் ஓர் உன்மத்தனாக மாறினார். 1910-ம் ஆண்டு சிதம்பரம் செல்வதாகப் பருத்தித் துறையில் தோணி யேறினார்.

நாகபட்டணம் சென்றார். அங்கு நீலலோசனி அம்மாள் எனப்படுபவரிடம் ஞான நிஷ்டை கற்றுத் தேர்ச்சியடைந்தார். நாலு வருடகாலமாக நீலலோசனி அம்மன் கோவிலில் நிஷ்டையில் கிடந்தார்.

அவர் அங்கே இருப்பது அவரின் மைத்துனர் தம்பிப் பிள்ளைக்குத் தெரிந்தது. தம்பிப்பிள்ளையும் வேறு சிலரும் அங்கே சென்று, அவரைச் சந்தித்தனர்.

நாகப்பட்டினத்தில் சில காலம் தங்கியிருந்து வேதாரண்யம், அகத்தியாம்பள்ளி, மாயவரம், காரைக்குடி போன்ற இடங்களுக்குச் சென்றார்.

(15-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### பொய்யர்களின் புரட்டு வாதம் இனிச் செல்லுபடியாகாது

எந்தவகையாலும் தங்கள் வயிற்றை வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு, கேவலமான இழிதொழில் புரியும் சில சுயநலமிகள் இன்று பத்திரிகையும் நடாத்த முற்பட்டுள்ளனர். இப்பத்திரிகையாளர்கள், கண்மூடித்தனமாக வெறும் பொய்யையும் கட்டுக் கதைகளையும் புனைந்துரைத்து தமிழ் பேசும் மக்களைத் தங்கள் பால் கவர்ந்திழுத்து விடலாம் என்று கருதுகின்றனர்போலும்.

கடந்த 21—4—63ல் பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த செட்டிபாளையம் என்னும் கிராமத்தில் மிக விமரிசையான முறையில் எல்லாம் தமிழியக்கக் கூட்டம் நடைபெற்றது. தந்தை செல்வநாயகம், திரு. வி. ஏ. கந்தையா, திரு. சி. மூ. இராசமாணிக்கம், திரு. செ. இராசதுரை, ஜனாப் மசூர் மௌலானா போன்ற தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்துக்கு முன்னர் குருக்கள் மடம் செட்டிபாளையம் எல்லையிலிருந்து தலைவர்கள் ஊர்வலமாக, கூட்டம் நடைபெற்ற கி. மு. சங்கக் கட்டிடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இல்லங்கள் தோறும் பூரண கும்பங்கள் வைத்து தலைவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றனர் மக்கள். தந்தை செல்வாவின் கால்களிலே, வயோதிபப் பெண்கள் கண்ணீர் சிந்தி விழுந்து கும்பிட்டனர். இந்த முறையினைத் தடுக்குமுகமாக தந்தை குனிந்து தன்னைக் கும்பிட வேண்டாம் என்று கூறிய போது உண்டான நெஞ்சுருக்கும் சம்பவங்களை எழுத்தால் வர்ணிக்க முடியாது. மனமுருகித் தங்கள் நிலையிழந்து உணர்ச்சி வசப்பட்ட மக்கள் உருக்கமான வரவேற்பைத் தலைவர்களுக்கு அளித்தனர்.

செட்டி பாளையத்து இளைஞர்களிடத்திலே இப்பொழுது ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியின் காரணமாக அழியும் நிலையிலிருந்த பிள்ளையார் கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் கும்பாபிஷேகமும் நடைபெற விருக்கிறது. கிராமத்தை முன்னேற்றும் பணியில், எம்போன்ற உணர்ச்சியுள்ள இளைஞர்கள் கூடி பெரு முயற்சி எடுத்து வருகிறோம். எங்கள் முற்போக்கையும், கிராமச் சீர்திருத்தப் பணிகளையும் விரும்பாத, ஊர் மக்களைச் சுரண்டி, அகப்பட்டதைச் சுருட்டி, ஏமாற்று வேலைகள் புரிந்து வரும் சில பழையவர்கள், சுயநலமிகள் இன்று தங்கள் குழந்தைகளான எங்களையே பகைத்துக் கொண்டுள்ளனர். இது உள்ளூர் பிரச்சினை இன்றிருக்கும், நாளை எம் தந்தையர் எம்மை அணைத்துக் கொள்ளுவர்.

இது இவ்வாறிருக்கு இலங்கையில் தனது ஒன்பதாவது வகுப்பை சித்தியடைய முடியாத ஒரு தன்மானமற்று, சுயநல வேட்டையாடும் 'தமிழறிஞ'ரின் மகன்-இந்தியாவிலேயே கீழ்த்தரமான கல்லூரிகளில் முதன்மையான இடம் பெறும் ஒரு கல்லூரியில், எட்டப்பர் எதிர்மன்னரின் துணையுடன் சென்று பட்டம் பெற்றவர் எங்களூர்ப் பிரச்சினைகளில் மூண்டியடித்து முன்னேறி வருகிறார். தன் சொந்த ஊரிலேயே ஒரு சிறுவனிடம்

(15-ம் பக்கம் பார்க்க)


# ஆனந்தா லேகியம்

**இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.**

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.


பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


'நமக்குள்ளே நடப்பவை' என்ற இந்தப் பகுதியில் வெளியாகும் உண்மைச் செய்திகள், தங்களை முற்போக்கு எழுத்தாளர்கள் என்று தமுக்கடித்துத் திரியும் வெத்துவேட்டு வீரர்களின் அடிவயிற்றில் புளியைக் கரைத்துவிடுகின்றன. நான் எழுதுவது அத்தனையும் உண்மை எபைதை நிரூபிப்பதற்கு நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் தயாராயிருக்கிறேன். ஒரு துளி பொய் கூட இந்தச் செய்தியில் இல்லை.

முதுகு சொறிவாலும் வெறும் பிரசாரத்தினாலும் தாங்கள் வெகு கஷ்டப்பட்டுக் கட்டியெழுப்பிய ஒரு "பிரமைக் கோட்டை"யை நான் எழுதிவரும் மறுக்க

> **பண்டிதர் பரசுராம மூர்த்தியின் கட்டுரை இடமின்மையால் இம்முறை இடம் பெறவில்லை. அடுத்தவாரம் வெளிவரும்.**

முடியாத, பச்சை உண்மைகள் இடித்து நொருக்கத் தொடங்கியதைக் கண்டு செய்வதறியாமல் திகைத்து நிற்கிறார்களாம் முற்போக்கு தம்பிரான்கள்! இப்பொழுது நான் யார் என்பதை அறிவதற்கும், எப்படியாவது என்னைத் தங்கள் வலையில் சிக்க வைப்பதற்கும் முயற்சித்து வருகிறார்கள் அவர்கள்.

யாராவது இரண்டு முற்போக்கு எழுத்தாளர்கள் கூடிப் பேசினால், இந்தப் பகுதியைப் பற்றித்தான் பேசுவார்களாம்! எழுத்தாளரும் பேச்சாளருமான ஒருவருடைய பெயரும், யாழ்ப்பாணத்து மாதப் பத்திரிகை ஆசிரியரின் பெயரும், மட்டக்களப்பில் குடிபுகுந்த ஒரு எழுத்தாளரின் பெயரும், பத்திரிகை வட்டாரத்தில் செல்வாக்குடைய ஒரு முஸ்லிம் எழுத்தாளருடைய பெயரும், பல்கலைக் கழக மாணவர்கள் இருவரின் பெயரும், முற்போக்காளருடன் ஒட்டிக்கொண்டு திரியும் ஒரு இரண்டுங் கெட்டானின் பெயரும், அடிக்கடி அடிபடுகின்றனவாம், என்ன பரிதாபம்!

ஐயா! முற்போக்கரே! உம்முடைய ஊகம் நூற்றுக்கு நூறு வீதம் பிழை என்பதை இப்போதே சொல்லி வைக்கிறேன். ஒன்றுமறியாத அப்பாவிகளை வீணாகச் சந்தேகித்து அவர்களுக்கு எதிராக உங்கள் பரம்பரைத் தொழிலான நிழல் போராட்டத்தை நிகழ்த்தி, முடிவில் மண் கவ்வ வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்போக்கு எழுத்தாளர்களின் நிலையைக் கண்டு நான் பரிதாபப்படுகிறேன். வேறு பத்திரிகையானால் அவர்கள் "பெட்டீசம்" போட்டு இந்தப் பகுதியை நிறுத்தச் செய்து விடுவார்கள். உண்மைக்கும் நேர்மைக்கும் மதிப்பளிக்கும் சுதந்திரனைப் பொறுத்தவரையில் அந்தப் பாச்சா பலிக்காது. இப்படியான ஒரு பகுதியைத் தங்களுடைய ஊதுகுழலில் தொடங்கலாமா என்று யோசித்தார்களாம். ஆனால், கலப்பற்ற உண்மைகளுக்கு எதிராக எதை, எப்படி எழுதுவது? என்ற தடுமாற்றத்தினால் அந்த யோசனையையும் கைவிட்டு விட்டார்கள்.

இப்பொழுது, என்னை எப்படியாவது கண்டுபிடித்து, "தாஜா" பண்ணித் தம் பக்கம் இழுப்பதற்கு வலை வீசுகிறார்கள். ஐந்தாந்தரக் குறுநாவல் ஒன்றை எழுதிவிட்டு, ஆசிரியரை இரந்தும் பணிந்தும், கெஞ்சியும், பயமுறுத்தியும் அடிக்கடி தொலைபேசி மூலம் கரைச்சல் கொடுத்தும் அதை அச்சேற்றிவிட்டு, கடைசியில் தன்னுடைய ஊர் மக்களுக்கு நன்றி தெரிவிக்கப் போய் அவர்களுடைய மானத்தையும் கப்பலேற்றிய ஒரு 'அரை வேக்காடு' என்னைக் கையும் மெய்யுமாகக் கண்டுபிடிப்பதாகச் சபதம் செய்திருக்கிறதாம். என்னை நோக்கி வலைவீசினால் அந்தக் குறுமுனியின் மானம் மேலும் அம்பலமாகும் என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நான் முன்பு ஒரு முறை எழுதியதைப் போல், இந்த முற்போக்கு எழுத்தாளர்கள் கீழ்த்தர வேலைகளிலும், திருடி எழுதுவதிலும், முதுகு சொறிவதிலும் ஈடுபடாமல், சுயமாக எழுதினால் என் பேனைக்கு வேலையிராது என்று மீண்டும் சொல்ல விரும்புகின்றேன்.

### எழுதுவினைஞர்சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்குரிய முன்னறிவித்தல் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொதுச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. யூன் மாதம் 15-ம் திகதி நடைபெற விருக்கும் பொதுக் கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படுமெனத் தெரிகிறது.

பொதுக்கூட்டத்தில் ஆராயப்பட வேண்டிய விடயங்கள், தீர்மானங்கள், பதவியாளர் நியமனப் பத்திரங்கள் அனைத்தும் இம்மாதம் 25-ம் திகதிக்கு முன்னர் பொதுச் செயலாளருக்குக் கிடைத்தல் வேண்டும் என்றும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வே. நடராசா, பளை**

கே: ஆனைப்பந்தியடிக் காங்கிரஸ் கட்சிக்கும், அடுப்படி முன்னணிக்கும் உள்ள அடிப்படை ஒன்றுபட்ட நோக்கம் யாதோ?

ப: தங்கள் பதவிகளைப் பெற குறுக்கே நிற்கும் தமிழரசாரை ஒழித்துவிட வேண்டுமென்பதே!

கே: நேரு அரசாங்கத்தின் இந்தித்திணிப்பு மொழிக் கொள்கைக்கும், சிறீமா அரசாங்கத்தின் சிங்களத் திணிப்பு மொழிக் கொள்கைக்கும் மூலாதாரக் கனவு யாது?

ப: அடிப்படை ஒன்றே! ஆட்சி முறை வேறுபட்டிருப்பதால் திணிக்கும் முறையிற் பல வேறுபாடுகள் உண்டு. இதில் நேரு சற்று நிதானத்தைக் கடைப்பிடிக்கிறார்.

ஃ

**க. சுந்தரராஜா, கொழும்பு-10**

கே: காதல் என்பது எது வரை? அரசியல் என்பது எது வரை?

ப: காதல் சிலருக்குக் கல்யாணம் வரை, சிலருக்குத் தற்கொலை வரை. அரசியல் சிலருக்குப் பதவி வரை, சிலருக்குச் சுடுகாடு வரை.

ஃ

**தருமலிங்கம் மல்லிகா, நமுனுகுல**

கே: நாங்கள் ஒருவருக்கு நன்மை செய்கிறோம், அவர் எங்களுக்குத் தீமைச் செய்கிறார். இவரைத் திருத்த வழி உண்டா?

ப: அவருக்குத் தொடர்ந்து நன்மையே செய்யுங்கள்; திருந்திவிடுவார்.

ஃ

**இரா. வெ. அழகர்சாமி, பண்டாரவளை**

கே: தமிழினத்தில் எட்டப்பர் கூட்டங்களை ஒழிப்பது எப்படி?

ப: அவர்களைத் தோலுரித்து மக்கள் முன் நிறுத்துங்கள். (தோலுரித்தல்: துரோகங்களை அம்பலப்படுத்துதல்)

ஃ

**சம். தருமகுலவீரசிங்கம், புலோலி தெற்கு**

கே: எகிப்திய தலைவர் நாசரின் செல்வாக்கு வளரக் காரணம் யாது?

ப: அவரது சமஷ்டி ஆட்சிக் கொள்கையும், அக்கொள்கையைச் செயல்படுத்துவதில் அவர் கொண்டுள்ள தளராத முயற்சியுமே காரணமாகும்.

ஃ

**எஸ். கே. சண்முகநாதன், வண்ணார்பண்ணை**

கே: 'மொழிப்பிரச்சினை' பற்றி எல்லோரும் அறிக்கை விட்ட போது 'வவுனியாச் சுந்தரர்' மட்டும் பேசாமலிருப்பதன் மர்மம் என்ன?

ப: அவர் அறிக்கைகளை விட்டுவிட்டு களைப்படைந்து ஓய்ந்து போனார். அறிக்கைகளுக்கு மவிசு கிடையாதென்பது அவருக்கும் தெரிந்துவிட்டதுபோலும்!

கே: யாழ் நகரில் நடந்த இடதுசாரிகளின் மே தினக் கூட்டம் தொழிலாளர் தினமென்பதற்காகக் கூட்டப்பட்டதல்ல...அது தமிழரசுக் கட்சியைத் திட்டுவதற்காக வைக்கப்பட்டதென்கிறேன். தாங்கள்...?

ப: 'வாழ்க' என்பதை விட 'ஒழிக' என்பதில்தான் அவர்களுக்கு ஆர்வம் அதிகம். அவர்கள் வாழ, வேறு எந்தக் கட்சியாவது ஒழிய வேண்டும். மே தினத்தன்றுதான் ஒழிப்புப்படலத்தில் தீவிரமாக இறங்குவார்கள்.

ஃ

**'மலையரசு' மடக்கொம்பரதெற்கு வட்டக்கொடை**

கே: 'தமிழரசுக்கட்சி மலைநாட்டில் காலடி எடுத்து வைத்தால் தந்தையும் அவர் தனையர்களும் தங்களின் பிரேதங்கள் மேல் நின்றுதான் அதைப் பரப்ப வேண்டும்' என்று கூறிய சிறிமா அம்மையார் இப்பொழுது கழக வளர்ச்சியைப் பற்றி என்ன சொல்வார்?

ப: திரு. தொண்டமான் எதைச் சொல்லிக் கொடுக்கிறாரோ அதைச் சொல்லுவார்.

ஃ

**'மன்னார் ஜீவன்' மன்னார்**

கே: மன்னார் மக்களாகிய நாம் விழித்துவிட்டோம். இனியும் எங்களை ஏமாற்ற முடியாது என்று, ஒவ்வொரு தமிழ் இளைஞர்களும் ஆவேசத்துடன் திரிகிறார்கள் என்பதைக் காட்டி உங்களை எச்சரிக்கிறேன்?

ப: என்னை ஏன் எச்சரிக்கின்றீர்? அந்த விழிப்பையும் வீரத்தையும் வரவேற்பவனாயிற்றே நான்!

ஃ

**சோ. சோதிலிங்கம், திருகோணமலை**

கே: ஐக்கியதேசியக் கட்சியின் இன்றைய நிலை என்ன?

ப: அடுத்த தேர்தலில் அரசாங்கத்தைக் கைப்பற்ற என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்கிறது இந்தக் கட்சி. ஆனால் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டு விடுமோ என்னவோ!

ஃ

**கு. தியாகமணி, மாவனல்லை**

கே: இலங்கைத் தமிழர் நிலை பற்றி இங்கிலாந்து மகாராணியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மகஜரைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அதை அவர் இலங்கை கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பி வைக்கக்கூடும். அவ்வளவுதான்.

ஃ

**சி. சிவசுப்பிரமணியன், ஆலிஎல.**

கே: தலைப்பாத் தமிழர் திரு. சு. நடேசனின் பெயர் இப்பவெல்லாம் பத்திரிகைகளில் அதிகம் அடிபடுகிறதே!

ப: ஒரு "காக்காய்" பத்திரிகை அவர் மூலம் அரசாங்க ஆதரவைப் பெறலாமென்று கருதி அவரைக் "காக்காய் பிடிக்கவே" தொடங்கி விட்டது போங்கள்!

கே: இனி எதை அரசாங்கம் தன் உடைமையாக்கப்போகிறது?

ப: இனி அரசாங்கம் எதையும் தன் உடைமையாக்கிக்கொள்ள முன்பு, அரசாங்கத்தையே தங்கள் உடைமையாக்கிக் கொள்ளச் சிலர் சூழ்ச்சி செய்வதாக ஒரே வதந்தியாயிருக்கிறது!

ஃ

**தமிழரசு அபிமானி, இராமநாதபுரம்.**

கே: தமிழ் அரசாங்க ஊழியர் சகல தொடர்புகளையும் அன்னிய பாஷையில் நடத்தக் காரணமென்ன?

ப: பழக்க தோஷம்—தன்மானம் கொஞ்சம் இருந்தால் சரியாய்ப்போய்விடும்!

ஃ

**எஸ். ஆர். பொன்முடியன், திருமலை.**

கே: நீங்கள் பிறந்திருக்காவிட்டால்...?

ப: இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டிருக்க மாட்டீர்கள்.

கே: ராஜினி என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: ஏதோ நாட்டிய நாடகம் நடித்துக் கொண்டிருக்கிறாராம். இப்போது அவரது கவனமெல்லாம் இந்திப் பட உலகில் தான். அதனால் தமிழ்ப் பட உலகம் ஒன்றும் நஷ்டப்படப்போவதில்லை!

ஃ

**தி. தர்மபாலன், பண்டத்தரிப்பு.**

கே: இருபது வயதில் அறுவது வயது அனுபவம் பேசுகிறார்களே, இவர்கள் அறுபதாவது வயதில் என்ன செய்வார்கள் என்று நீர் எண்ணுகின்றீர்?

ப: 180 வயது அனுபவம் பேசுவார்கள்.

கே: சதா மற்றவர்கள் விடயங்களில் தலையிட்டு குழப்பம் செய்பவர்களைப் பற்றி என்ன எண்ணுகின்றீர், இவர்கள் நாட்டுக்குத் தேவையில்லாதவர்கள் தானே?

ப: அவர்கள் தத்தம் சொந்த விடயங்களில் தலையிடும் நல்லவர்கள்! மற்றவர்கள் விடயங்களில் கூட தலையிட முடியாதவன் தன் சொந்த விடயங்களில் எப்படித் தலையிட முடியும்?

கே: இலங்கைத் தி. மு. க. வைக் கண்டு ஏன் சிலர் கிலி பிடித்தாடுகின்றார்கள்?

ப: அவர்கள் உண்மையில் அஞ்சுவது இந்திய தி. மு. க. வைக் கண்டுதான்-இலங்கை தி. மு. க. வைக் கண்டல்ல. இதுவும் அதுபோல வளர்ந்துவிடுமோ என்ற பீதி!

ஃ

**ஞானசௌந்தரி தேவப்பிரகாசம், கொழும்பு-12**

கே: ஒரு மனிதன் நன்மை செய்யப் புறப்பட்டு, இறுதியில் எல்லோராலும் தாழ்த்தப்படுகின்றானே, என்ன காரணம்?

ப: நன்மை செய்யப் புறப்பட்டது சரி, அத்துடன் நன்மை செய்வதைப் போல பாசாங்கு செய்து சற்று நடித்திருக்கவும் வேண்டும். அவன் உண்மையிலேயே நன்மை செய்துவிட்டான் போலும்! அதனால்தான் தாழ்த்தப்படுகிறான்.

ஃ

**வி. எஸ். மணியம், பூரடிதோட்டம், அக்கரப்பத்தன**

கே: இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் கூட்டம் மலைநாட்டில் நடைபெறும் இடமெல்லாம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் தொடர்ந்து கூட்டம் போடுகின்றனரே! இதன் மர்மம் என்ன?

ப: இ. தொ. கழகக் கூட்டங்களுக்கு வரும் தொழிலாளர் கூட்டத்தைத் தன் பக்கம் இழுத்து விடலாம் என்ற நரித்தந்திரம்! விழிப்படைந்த தொழிலாளரிடம் பலிக்குமா இந்தப் பாச்சா!

ஃ

**சி. பொ. ஈழத்துமணி, யாழ்ப்பாணம்**

கே: ஒரு பௌத்த துறவியான திரு. ஞானசிக தேரோ சர்வாதிகார ஆட்சியை விரும்புகிறாரே—இதுதான் பஞ்சசீலத்தின் மூலக் கொள்கையா?

ப: அவர் பௌத்தத்தைத் துறந்த துறவிதான். அவர் கூற்றில் வேடிக்கை என்னவெனில், தனது சர்வாதிகாரக் கொள்கைக்குப் பௌத்தத்தையே மேற்கோள் காட்ட முயற்சி செய்வதுதான்.

ஃ

**எம். ஏசையா செல்லப்பா, பசறை**

கே: குயுக்தியாரே, உமக்குப் பற்கள் இல்லையே, எப்படி எலும்புகளைக் கடிப்பீர்?

ப: எலும்பு பொறுக்கும் கும்பலைச் சேர்ந்தவனல்ல நான்.

ஃ

**மா. செல்வவினாயகம், தெல்லிப்பளை**

கே: தமிழரசு என்று கூக்குரலிடும் தாங்களும் சிங்களம் படிப்பதாக ஒரு வதந்தி! இது உண்மையோ?

ப: வதந்திகளை நம்பாதீர்கள்! சிங்களம் படிக்கவேண்டிய அவசியமே எனக்குக் கிடையாது.

ஃ

**நா. ஜெயசீலன், கான்கேசன்துறை**

கே: 'முற்போக்கு எழுத்தாளர்' என்று கூறித் திரியும் பிற்போக்குவாதிகளைப் பற்றி ஒரு வார்த்தை கூறுவீர்களா?

ப: ஓர் எழுத்தாளன் தன்னை 'முற்போக்கு எழுத்தாளன்' என்று கூறிக்கொள்வதானால், உண்மையில் முற்போக்கு எதுவும் அவனிடம் கிடையாதோ என்ற சந்தேகம் தோன்றிவிடுகிறது.

ஃ

**ச. யோகரெட்னம், பெரிய கல்லாறு**

கே: கிராமச் சங்கத்தாரால் தமிழ்ப் பகுதிகளிலே சிறிய பாதைகளில் பஸ், லொறி போகக்கூடாது என்று ஆங்கிலத்தில் எழுதிப் போடப்பட்ட அறிவிப்புப் பலகைகள் அதிகமாகக் களவு போகின்றன, ஏன்?

ப: அந்தப் பாதையிற் செல்லும் பஸ் லொறிகள் தங்களின் பிரயாண வசதிக்காகப் பலகைகளைக் கையோடு கொண்டு செல்லுகின்றன போலும்!

---

**திருவாளர்**

**குயுக்தியார்**

மே/பா சுதந்திரன்

தபால் பெட்டி இல. 1183

கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

---

# கலங்க வேண்டாம்!

—எருவில் மூர்த்தி—

உடலோடும் பொருளோடும் உயிரும் நல்கி
உனைக்காக்க மலைபோல உறுதிபூண்டு
திடமான நெஞ்சோடும் தியாகவாழ்வே
தித்திப்பு என்றெண்ணுஞ் சிந்தையோடும்
கடல்போலத் திரள்கிறது தமிழர்கூட்டம்;
கலங்காதே தமிழ்த்தாயே! உனதுவாட்டம்
திடமாகத் திரும்நாள் நெருங்கலாச்சு
நினைவெல்லாம் உன்மீதே நிலைக்கலாச்சு!

***

காதலிதான் இவள்நல்ல கரும்பின்சாறு
கலையெதிலும் மேம்பட்ட கவின்சேர்மாது
மோதுகிறாள் மார்போடு முளரிப்பூபோல்
முகத்தருகே குவிக்கின்றாள் இதழைஅன்புச்
சோதனைதான்! இனிஇந்தச் சுவர்க்கம் வேண்டேன்
சொல்லவொணாத் துயர்நாக்கும்
உன்னைக்காக்கும்
சாதனைதான் இனிவேண்டும் சபதங்கூறிச்
சமர்க்களத்தே பாய்கின்றேன்
கலங்கவேண்டாம்!

***

கல்தோன்றி மண்தோன்றாக் காலந்தொட்டே
கட்டழகிற் குன்றாத கன்னியாக
வில்லேந்திக் கயல்ஏந்தி வேங்கைஏந்தி
விறலேந்திப் புவிஆண்ட வீரத்தாயே
அல்தோன்றி உனைமூட ஆமாம்!நாங்கள்
அசடர்களாய் வாழ்வோமா அறப்போரீட்ட
பொல்லூன்றுங் கிழவர்முதல் பாலர்ஈறாய்ப்
புறப்பட்டோம் தமிழ்த்தாயே கலங்க
வேண்டாம்!

---


## உங்கள் வியாதி எதுவானாலும் தீர்த்துத் தருகிறோம்



நரம்பு பெலவீனம், பெலக்குறைவு, குண்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் பண்புறைகள், பற்றுகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்றுவலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த காமாலை, சோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சீழ்மூலம், வெளி மூலம், பெண்களுக்கு ஏற்படும சூதகக் கோளாறுகள், கெர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் MD. MS. (H) Cal. அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செல்வாக்குத் தேடிப் புறப்பட்ட பட்டாளம்

## சிகப்புக்கள் சேர்க்கையால் சிறிதளவும் நன்மையில்லை

### ஐக்கிய மேதின விழா வர்ணனைகள்

**தங்கள் வரட்டுக் கூச்சல்கள் மக்கள் செவியில் ஏறப் போவதில்லை என்பதனை நன்கு உணர்ந்து கொண்ட இடதுசாரிக் கட்சிகள் கூட்டுச் சேர்ந்துள்ளனர். இவர்களினுல் தமிழ் பேசும் மக்கள் எள்ளளவு பயனும் அடையப்போவதில்லை என்பதைக் கடந்த மேதின விழா நிரூபித்துவிட்டது.**

கொழும்பு மாநகரசபைத் தேர்தலிலே மண் கவ்வி, மூலையிலே முக்காடிட்டு முனகிக் கொண்டிருந்த இடதுசாரிகள்—அரசாங்கத்தின் தீர்க்கமற்ற போக்கினுல் அமெரிக்கா இலங்கைக்கு அளித்து வந்த உதவியை நிறுத்தியபோது, அமெரிக்கா போர் முரசம் ஆர்த்து படைகொண்டு இலங்கையைத் தாக்க வருவதைப் போல அலறிப்புடைத்து "அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து நாட்டின் சுதந்திரத்தையும் — சுயமரியாதையும் காப்போம்" என்று கொக்கரித்து விட்டு, தங்கள் கொக்கரிப்புக்குப் பலன் கிடைக்காதது கண்டு மக்கள் முகத்தில் விழிக்க வெட்கப்பட்டுக்கொண்டிருந்தவர்கள்—ஒருவாறு மக்கள் மன்றத்துக்கு மீண்டும் வந்துள்ளார்கள்.

இந்த இடதுசாரி ஐக்கிய முன்னணி குறிப்பாக திரு. பிலிப் குணவர்த்தனுவின் சூழ்ச்சிக்கும் கொம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் சூழ்ச்சிக்கும்தான் வெற்றியைத் தந்துள்ளது என்று சொல்லலாம். காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் மக்கள் ஐக்கிய முன்னணியிலே தனது முக்கிய மார்க்சீயக் கொள்கையை விட்டுக் கொடுத்து இரண்டாந்தரத் தலைமைப் பதவியையே ஏற்றுக்கொண்ட திரு. பிலிப்

**—செங்கோன்—**

குணவர்த்தனு, தனது கொள்கைகளை அப்படியே ஏற்றுத் தனக்கும் சரியாசனம் தரும் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் முன்னேடியாக நிற்பதில் வியப்பொன்றுமில்லை. அதேபோல சுயமாக இயங்க வக்கில்லாத கொம்யூனிஸ்டுகள், எங்கெல்லாம் சேர முடியுமோ அங்கெல்லாம் சேர்ந்து-குட்டையைக் குழப்பி—கலங்கிய நீரில் மீன் பிடிப்பது அவர்கள் அரசியல் கோட்பாடு!

ஆனல் கொள்கை தவருக்குணுளர்கள் தாங்கள் என்று கூறித் திரிந்த சமசமாஜிஸ்டுகளின், நிலை என்ன? சமசமாஜிஸ்டுகள் தங்கள் கொள்கையிலே "பல்டி" அடித்துவிட்டார்கள் என்று நாம் எத்தனையோ முறை கூறியிருந்தும் கூட வட இலங்கைத் "தோழர்கள்" சிலர் நம்ப மறுத்தார்கள். ஆனல் இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் நடத்திய மேதினக் கூட்டமும் நமது கூற்றை உறுதிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

#### ஒதுக்கப்பட்ட தமிழ்

இடதுசாரி ஐக்கிய முன்னணி மேதினக்கொண்டாட்டத்திலே பங்குபற்றிய சமசமாஜ, கொம்யூனிஸ்ட், எம். ஈ. பி. ஆகிய கட்சிகளின் சுலோக அட்டைகளில் சமசமாஜ, கொம்யூனிஸ்டு கட்சிகளின் அட்டைகளிலே ஒப்புக்குச் சிலவற்றில் தமிழ் பொறிக்கப்பட்டிருந்தது. யூ. என். பீ. யின் சிங்கக் கொடியிலே கோடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததைப் போல தமிழும் சில அட்டைகளில் ஒதுக்கப்பட்டிருந்தது என்று கூறுவது பொருத்தம்! எம். ஈ. பி. யின் அட்டைகளிலே தமிழ் அறவே கிடையாது.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த மூன்று தலைவர்களில் எவரும் தமிழினத்துக்கு அரசாங்கம் இழைத்துவரும் தீங்குகளைப் பற்றியோ, அரசாங் சாங்கத்தின் வகுப்புவாதக் கொள்கைகள் பற்றியோ ஒரு வார்த்தை தானும் கூறவில்லை. மூன்று பேரின் தலைமையுரையிலும் இப்பிரச்சினை சம்பந்தயான பேச்சு இடம் பெருத அளவுக்கு முக்கியத்துவம் இல்லாத பிரச்சினையா இது? டாக்டர் கொல்வின் ஆர். டீ சில்வாவும், திரு. பீட்டர் கெனமனும் சிறுபான்மையினர் உரிமை பற்றிப் பேசினுர்கள். திரு. பீட்டர் கெனமனின் பேச்சு ஆங்கிலப் பத்திரிகைகள்எவற்றிலும்வெளிவரவில்லை. எனவே மேலெழுந்தவாரியாக ஒப்புக்காக ஏதோ கூறினுர் என்பது வெளிப்படை.

#### தமிழ் பற்றி ஒன்றும் இல்லை

மே தினக் கூட்டத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்தான் மிக முக்கியமானவை. நாட்டின் இன்றைய அவல நிலைக்குப் பல்வேறு காரணங்களையும் காட்டியிருந்த தீர்மானங்களில் அரசாங்கத்தின் வகுப்புவாதக் கொள்கை நாட்டை எவ்வளவோ பாழ்படுத்திச் சீர்கெடுத்திருந்த பொழுதிலும் அதை ஒரு காரணமாகக் காட்டவில்லை. திட்டமிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியை நோக்காகக் கொள்ளாமல் வகுப்பு வெறியும் தமிழின ஒழிப்பு வேட்கையும் உந்தித் தள்ள எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றி பொருளாதாரத்தைச் சீர்குலைத்து நாட்டைக் குட்டிச் சுவராக்கியதற்கு முழு முதற்காரணமே அரசாங்கத்தின் வகுப்பு வெறிதான். ஆனுலும் இடதுசாரிகளின் தீர்மானங்கள் எதுவும் இதைப்பற்றிக் கூறவில்லை.

ஒரு தீர்மானத்திலே அரசாங்கத்தின் சில ஓரவஞ்சனைச் செயல்களினுல் சிறுபான்மையோர் தேசிய வாழ்வில் பங்கு கொள்ளவில்லையென்றும், சிறுபான்மையினரை ஓரவஞ்சகமாக நடத்தாமல் தேசீய வாழ்வில் பங்கு கொள்ள வைப்பதென்றும் இன்னேர் தீர்மானம் நறைவேற்றப்பட்டது. இடதுசாரிகளைப் பொறுத்த மட்டில் அரசாங்கம் நிறைவேற்றிய சட்டங்கள் சரியானவையாகவும் செயல் முறையில்தான் சில ஓரவஞ்சனைகளை அரசாங்கம் காட்டுகிறது என்பதும்தான் அவர்கள் வாதமா? இல்லையெனில் ஏன் ஓரவஞ்சனைச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கூறவில்லை. ஓரவஞ்சனைச் செயல்கள் மட்டும்தானே நீக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது!

#### பண்பாட்டுச் சின்னங்கள்

மற்றுமோர் தீர்மானம் தேசியப் பண்பாட்டின் வளர்ச்சியைப் பேண வலியுறுத்துகிறது. இத் தீர்மானத்துடன் இணைத்துப் பார்க்கவேண்டியவை கூட்டத்திலே வைக்கப்பட்டி

(9-ம் பக்கம் பார்க்க)


# கண்கவர் அழகிற்கும்; கனநாட் சேவைக்கும்;

# லதா மணிப்புரி சாரிகளே!!!



**லதா மணிப்புரி சாரிகள்;**

முற்றிலும் புதிய பிளேன்;அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலினுலான கிழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப்பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானெலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

**எலைட் சுப்பர்லோன்**

வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

**குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,**

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,

சில்லறை விற்பனைப் பகுதி: 110&114, மெயின் வீதி,

**கொழும்பு.**


# சந்திக்கு வந்தவை

**காலகண்டன்**

காக்காய் பிடித்தான் ஊர் சந்தை மைதானத்தில் சறுக்கி விழுந்தவர்களின் மாபெரும் மாநாடு கூடியது. செயலாளர் தலைப்பாரம் ஐயாப்பிள்ளை எழுந்து தமது ஆண்டறிக்கையை வாசித்தார்.

மூலையில் முடங்கிக் கிடந்த முருகண்ணரையும், பொழுது போக்குச் சங்கத்தின் தலைவர் பொன்னனையும் சந்தித்து, மொழிப் பிரச்சினையைத் தீர்க்க ஆவன செய்வதென்று முடிவெடுத்த வரலாற்றை விபரித்தார்.

சந்தையில் கூடியிருந்த மக்கள் ஆரவாரம் செய்து 'தலைப்பாரத்தை' கையமர்த்தினர். அடுத்த நாள் வெளியான 'பந்தம் பிடித்தான்' பத்திரிகையின் முதல் பக்கத்தில் இல்லாததும் பொல்லாததுமாக மாநாட்டின் சிறப்புக்கள் கொட்டை எழுத்தில் பிரசுரமாயிருந்தன.

தலைப்பாரம் ஐயாப்பிள்ளையைப் பற்றி அடிக்கடி செய்திகள் 'பந்தம் பிடித்தான்' பத்திரிகையில் வெளி வந்து கொண்டேயிருந்தன. இதற்குக் காரணமில்லாமலில்லை. 'பந்தம் பிடித்தான்' பத்திரிகையில் பலபேர் தலையீடு. ஆண்டு கொண்டு திண்டாடும் சிலருக்கு ஆதரவாக இருக்கும் ஒருவருக்கு ஒருவர் கையாளாகவிருந்து சலுகைகள் பெறுவதுண்டு. அதே போக்கைத் தானும் கைப்பற்றிவிடத் துடித்தார் வேறொருவர். போட்டார் குல்லாவை தலைப் பாரத்தாருக்கு. இதன் காரணமாக எண்ணை வியாபாரி எட்டப்பன் சாமிக்கும், தலைப்பாரம் ஐயாப்பிள்ளைக்கும் கிடைக்கிறது 'ஓசி' விளம்பரம்.

★

"தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்" என்று தமிழ்க் கவிஞன் ஒருவன் பாடினுன். 'தாயைக் கொன்ருவது தமிழைப் பழிப்பேன், இழிவு படுத்துவேன்' என்று சவால் விட்டெழுந்துள்ளார் ஒரு தான் தோன்றித் தம்பிரான்.

சைவத் தமிழ்க் குடும்பத்திலே பிறந்து மதத்துக்கும் மொழிக்கும் மாசு தேடும் மரபுக்கு முன்னேடியாகத் திகழும் இந்தத் தீரரைப் பற்றிப் பலமுறை நாம் குறிப்பிட்டுள்ளோம். கொஞ்சமாவது சொரணையிருந்தாற் தானே திருந்தமுடியும்? மனிதாபிமானம் இருந்தால் தான் மனிதனுக முடியும். இந்த ஜென்மம் மனிதஜென்மம் தானே என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

போதுமான அளவு பந்தம் பிடித்ததனுல் முடிவடைய வேண்டியிருந்த பதவிக்காலமும் ஓரளவு நீடித்துவிட்டது. அது போதாமல் இன்னும் கேவலமான இழி தொழிலில் இறங்குகின்றதே இந்த ஜன்மம்.

பாடப்புத்தகத் தெரிவுக் குழுவினர்க்கு இந்த பிரகஸ்பதி ஒரு சிபார்சு செய்துள்ளாராம். பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு சமய பாடத்தில் திருவாசகமும் சேர்க்கப்பட்டுள்ளதல்லவா? அப்பாடத்திலே சைவர்கள் புத்தரை விவாதித்து வென்ற பகுதியும் இருக்கிறது. இந்த நாட்டு புத்த மதத்தவர்களை இழிவு

(9-ம் பக்கம் பார்க்க)

### சிங்களத்தில் முகவரி

**ஆங்கிலத்திலும் தமிழிலும் அஞ்சல் எழுதி முகவரியை மட்டும் சிங்களத்தில் எழுதி யாழ்ப்பாணத்திலுள்ள தமது குடும்பத்தாருக்கு ஒரு தமிழ் ஆசிரியர் அஞ்சல் அட்டைகள் அனுப்பியுள்ளார். அந்த அஞ்சலட்டைகள் எங்கு சென்றனவோ என்பது தெரியாமல் திண்டாடுகிருர்—பாவம். அவருடைய சம்பவங்கள் அடுத்தவாரம் சந்திக்கு வருகின்றன.**

### தலைப்பாரம் ஐயாபிள்ளை தவிப்பதேனே?

### தமிழை விற்போர் குரைப்பதேனே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை நீக்க அறிவித்தல் வாபஸ் பெறப்பட்டது




## குழைந்து பேசும் தலைவர்களுக்கு கும்பிடு போட்டது போதும்

### கொள்கை கண்டறிந்து வாழ மலையக மக்கள் பழகட்டும்

—வீ. தர்மலிங்கம், கொட்டகலை—

கூடல் கடந்து வந்த தமிழினமாய், கன்னித் தமிழ் நாட்டவராம் உடல் நோக, உள்ளம் நோக, உயர்ந்த இம் மலையகத்தை செழிக்க வைத்து சிந்தை நொந்திருக்கும் இவ்வேளையிலே தான். இழந்த நம் உரிமைகளுக்கு, இல்லை, இழக்க இருக்கும் இன்னும் சில உரிமைகளுக்கேனும் இறுதி முடிவுகாண, இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரையும், எமக்காக, அன்றும் இனி என்றும் போராடவிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின், இலங்கைத் தொழிலாளர் கழகம் அழைக்கிறது.

கவலைக்கு மருந்தில்லை அது மன நோய், கன்னித் தமிழனுக்கு வாழ்வில்லை அது இன நோய், இப் பெரு நோய், இப் புற்றுநோய் எம்மை விட்டு அகல எது வழி என யாரும் வினவ வேண்டியதில்லை ஒரே வழி, உத்தமமான வழி, உயர்ந்த வழி, ஒன்று படுவது தமிழரசுக் கட்சியின் தலைமையின் கீழ்!

தோட்டத்தில் முல்லை மலர்ந்திருக்கும் காட்சி, தொலைவிலிருந்து பார்ப்பவனுக்குக் கூட இன்பம் உண்டாகிறது, ஆனால் மலையகத் தோட்டங்களில் தொல்லைகள் மலிந்திருக்கின்றன, தொலைவிலிருந்து தூரதிருட்டிக் கண்ணுடி வைத்துப் பார்ப்பவனுக்கும் துன்பம் நிறைகிறது. இத் தொல்லை, துயரங்களுக்கு என்ன காரணம், யார் காரணம்?

தொண்டு செய்ய முன் வந்த இலங்கை இந்திய காங்கிரசா, ஆமாம்! இருபத்திநான்கு ஆண்டுகளாக இலங்கைத் தொழிலாளருக்காக, அல்லும் பகலும் அறுபது நாழிகையும் பாடுபட்டு உரிமை பெற்று உயர்வோம் என்றுதான் உரக்கக் கூறி வருகின்றனர், உருப்படியான திட்டங்கள் வைத்து செயல்பட்டிருந்தால் இந்த, 'உரிமைப்' பிரச்சினைக்கு இன்று இடமே இருக்க முடியாது.

ஒன்றுக்கும் உதவாத திட்டங்களில் எதுவுமறியா ஏழைத் தொழிலாளரை இயக்கிவிட்டு சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு சுதந்திர இலங்கை வாசி என்று சொல்லிச் சொல்லி, சொகுசு காட்டுகின்றனர்.

எத்தனை ஆண்டுகள் இந்த ஏமாற்றம், ஏற்றம் பெற்று இன்ப வாழ்வு காண வேண்டிய இலங்கைத் தமிழ்த் தொழிலாளி இவர்களால் இன்னும் ஏமாந்து கொண்டுதான் இருக்க வேண்டுமா?

தலைவர் முதல் தொண்டர் வரை தமிழினத்திற்கு செய்து வந்த, செய்துவரும் செய்யப் போகும் தொண்டு என்ன? இன்னுமிருப்பவரையும் பிரித்துவிட்டு பெருமை பேசி வருவதா? இனத்தின் நன்மை மறந்துவிட்டு இங்கிதமாய்ப் பேசி இன்பம் காண்பதா?

அன்று அவர்கள் ஆரம்பித்த, இ. இ. கா. முதல் இன்றைய இ. தொ. கா. வரை என்ன, என்ன நன்மைகளை நம் இனத்தவருக்குச் செய்திருக்கின்றன? எண்ணிப் பார்த்துப் பதில் கூறுங்கள்!

குழைந்து, குழைந்து பேசும் தலைவர்களுக்கு கும்பிடு போட்டு வாழும் முறை மாறி, குடிவாழ்வு உயர. ஒன்று கூட வேண்டாமா? குடியுரிமை பெற்று குலப் பெருமை உலகெலாம் பரவக்கூட வேண்டாமா?

அடுக்காத செயல் பல புரியும் அழுக்கு நெஞ்சத்தார், அன்னை மொழிக்கும், கன்னித் தமிழ்க் குலத்தவருக்கும் செய்து வரும் இன்னல்கள வளரத்தான் வேண்டுமா? இனம் இனத்தோடு சேர வேண்டாமா? இன்ப வாழ்வு காண வேண்டாமா?

ஏமாற்றி ஏற்றம் பெற்றவர்கள், எத்தர்கள் எல்லாம் இணைந்து இனம் வாழ, மொழி வாழ பாடுபடாமல் போவதில்லை. எனவே இலங்கைத் தொழிலாளர் கழகம் இன்னலுற்றிருக்கும் எல்லாத் தமிழ்த் தொழிலாளர்களையும் அழைக்கிறது. இணைந்து நின்று, அகிம்சை வழி நின்று, சாத்வீகப் போராட்டங்களை மேற்கொண்டு, இழந்துவிட்ட, பறிக்கப்பட்ட எல்லா உரிமைகளையும் பெற்று இவ்வுலகம் வாழுமட்டும் எம் இனமும் எம் மொழியும் வாழப் போராடத் தயாராக வேண்டும்.

காட்டிக் கொடுத்தவர்கள் களிப்போடு வாழ்ந்ததாகச் சரித்திரம் கூறவில்லை, நீதிக்காகப் போராடி நிர்க்கதியாய் ஆனவர்கள் யாருமில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (அரசியல்) தலைமையின் கீழ் இலங்கைத் தொழிலாளர் கழகம் சொல்

(9-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தொழிலாளர் கழகம் அவித்தல்

கழகப் பொதுச் செயலாளர் திரு. பெ. மா. கிருஷ்ணசாமி அவர்கள் சொந்தக் காரணங்களை முன்னிட்டு தனது பதவியிலிருந்து 1-5-1963-ல் ராஜிநாமா செய்துவிட்டார்.

அவரது சேவைக்கு நன்றி தெரிவித்து, அவரது ராஜிநாமாவைக் கழகத்தின் செயற் குழு ஏற்றுக் கொண்டுவிட்டது.

கழக உறுப்பினரும் மற்றையோரும் ஹட்டனிலிருக்கும் கழக அலுவலகத்துடன் கடித மூலம் தொடர்புகொள்ள விரும்பினுல், பொதுச் செயலாளர், இலங்கைத் தொழிலாளர் கழகம் 117 1/8 டிம்புள்ள வீதி அட்டன் என்ற முகவரிக்கே எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சகல கழக உறுப்பினர்களின் முறையீடுகளையும் கவனிப்பதற்கு திரு. செ. களியப் பெருமாள் மாவட்டப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிருர். இவர் அட்டன் அலுவலகத்திலிருந்து தற்போதைக்குப் பணியாற்றுவார்.

இ. மு. வி. நாகநாதன்,
தலைவர்,
2-5-63.

16, அல்பிறெட் ஹவுஸ் தோட்டம்,
கொழும்பு—3.

## இலங்கைத் தொழிலாளர் கழக நடவடிக்கையின் விளைவு

பொகவந்தலா ராணிகாடு தோட்டத்தில் முத்துசாமி என்ற தொழிலாளிக்கும் அவரின் மனைவி திருமலைக்கும் தோட்ட நிர்வாகம் கடந்த 10-4-63 திகதியில் வேலை நீக்க அறிவித்தல் கொடுத்திருந்தது.

முத்துசாமி துரைமார் சங்கத்திற்குச் சொந்தமான ஆற்றில் அனுமதியின்றி மீன் பிடித்தார் என்றும் தோட்டத்து மரம் ஒன்றின் கிளையை சொந்தப் பாவனைக்கு அனுமதியின்றி வெட்டினுர் என்றுமே தோட்ட நிர்வாகம் இந்த நடவடிக்கையை எடுத்திருந்தது.

முத்துசாமியும் அவரின் மனைவி திருமலையும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் அங்கத்தினர்களாய் இருப்பவர்கள். எனவே இது சம்பந்தமாகக் கழகத்தின் அட்டன் அலுவலகம் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் பலனுக் 14-5-63 திகதியில் பொகவந்தலாவையில் துரைமார் சங்க கிளப்பில் தோட்ட நிர்வாகத்திற்கும் தொழிலாளர் கழகத்திற்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இத் தகராறு சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

இருவருக்கும் கொடுக்கப்பட்ட வேலை நீக்க அறிவித்தலை வாபஸ் பெறுவதற்கும், முத்துசாமிக்கு ஐந்து மாதத்திற்குப் பிறகு வேலை கொடுப்பதற்கும், முத்துசாமியின் மனைவி திருமலைக்கு உடனடியாகத் தொடர்ந்து வேலை கொடுப்பதற்கும் தோட்ட நிர்வாகத்தின் சார்பில் தோட்டத் துரை இணக்கம் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையில், கழகத்தின் சார்பில் இணைப் பொருளாளர் க. சிவானந்த சுந்தரம், துணைச் செயலாளர் மு. எல்லாளன், மாவட்டப் பிரதிநிதி செ. கலியபெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வளர்ச்சிப் பாதையிலே. இலங்கைத் தொழிலாளர் கழகம்

### துணைத் தலைவர் அறிக்கை

இலங்கைத் தொழிலாளர் கழகத்திற்கு மலையகமெங்கும் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலே செல்வாக்கு மல்கிப் பெருகிவருகிறதென்றும் இதற்கேற்றவாறு தொழிற்சங்கத்தை விரிவு படுத்துவதற்குக் கழகம் ஏற்பாடு செய்து வருகிறதென்றும் கழகத்துணைத் தலைவர் திரு. ராமையா விடுத்துள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிடுகிருர்.

அவர் மேலும் கூறுவதாவது:-

"நுவரெலியா, பண்டாரவளை, ரத்தொட்டை, வத்துகாமம், தெரணியகலை ஆகிய பகுதி தோட்டங்களிலிருந்தும தொழிலாளர்கள் அட்டன் அலுவலகத்துடன் தொடர்புகொண்டுள்ளனர்.

கழகத்தின் தொழிற் சங்க அலுவல்களைப் பதுளை மாவட்டத்திற்கும் விரிவு படுத்துவதற்கு கழகத்தின் செயறகுழு முடிவு செய்துள்ளது. இதற்கான ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்வதற்காக கழகத் துணைத் தலைவர் கே. ஏ. ராமனும், கழகச் செயற்குழு உறுப்பினர் திரு. எம். எஸ். துரைசாமியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கழகத்தில் பெருவாரியான அங்கத்தினர்கள் சேர்ந்துள்ள சாமிமலை கல்தோணி, மஸ்கெலியா லெட்சுமி, லக்சபானை, தலவாக்கலை, சின்ன மட்டுகலை ஆகிய தோட்டங்களில் தோட்டக் குழுவை தெரிவு செய்வதற்காகத் தேர்தல் கூட்டங்கள் நடத்துவதற்கு மாவட்டப் பிரதிநிதி திரு. செ. கலிய பெருமாள் நடவடிக்கை எடுத்து வருகிருர்.


அதோடு தலவாக்கலைப் பகுதியில் தொழிலாளர்கள் நிறைந்த அகரபத்தனையில் ஓர் பிரசாரக் கூட்டம் நடத்துவதற்கும் கழகத்தின் செயற்குழு தீர்மானித்துள்ளது.'


## மனக் கவலையா?

வியாதியா? முன்னேற்றம் குறைவா? குடும்பப் பிரச்சனையா? சத்துரு கரைச்சலா? ஆண் பெண் வசியமா? அப்படியானுல் அவைகளை நிவிர்த்திக் கொள்வதற்கு இனமாக பதில் அனுப்பப்படும்.

பீ. எம். திசாநாயக்க
கம்பளை.






ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளி வர்க்கம் தலைசாய்ந்துவிட்டது

## மேதின விழாவில் திருமலை தமிழரசுக் கிளைத் தலைவர்

முதலாளி தொழிலாளியைச் சுரண்டவோ அடிமைப்படுத்தவோ முடியாது. முதலாளி வர்க்கம் இன்று தலைசாய்ந்து விட்டது என்று சொல்லலாம். தொழிலாளர்களது கட்டுப்பாடும், சுதந்திர வெறியும் எவ்வளவுக்கெவ்வளவு வளருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு வெற்றியும்—மகிழ்ச்சியும் கிடைக்கும்.

இவ்வாறு திருக்கோணமலை முத்துக்குமாரசாமி ஆலய முன்றலில் நடைபெற்ற கட்சிச் சார்பற்ற தொழிலாளர்களின் மே தின விழாவில் உரை நிகழ்த்திய திருமலைத் தொகுதி தமிழரசுக்கட்சிக் கிளைத் தலைவர் திரு. இ. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

விழாவினை திருமலைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந. இ. இராஜவரோதயம் ஆரம்பித்துப் பேசுகையில், சில கட்சிகள் தொழிலாளர்களைத் தங்கள் கைப் பொம்மையாக வைத்துக்கொண்டு, உதவி செய்வதாகச் சொல்லி எதையும் செய்ததாகக் காணோம்.

பிரஜா உரிமை விஷயத்தில் தொழிலாளர்கள் பெரியதொரு போராட்டம் செய்ய வேண்டி வந்தாலும் தயாராக இருக்க வேண்டும். இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆவன செய்த தொழிலாளருக்கு, அரசாங்கம் இழைக்கும் அநீதி காரணமாக இலங்கை பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து கொண்டிருக்கிறது. கடவுள் நின்றுதான் அறுப்பார்—இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தவர்களே இப்பொழுது எதிர்க்கிறார்கள், ஐக்கிய முன்னணி என்று மீண்டும் வேடமிட்டு வருகிறார்கள். இவர்களது சோசலிசம் தொழிலாளரைச் சுரண்டி ஆட்சிக்கு வருவதாகும் என்றார் அவர்.

தலைமை வகித்துப் பேசிய திரு. செல்லத்துரை அவர்கள் குறிப்பிட்டதாவது: 'தமிழ் பேசும் தொழிலாளர்களே உழைப்பின் தன்மையைக் காட்டிக் கொடுத்தவர்கள்—அது மட்டும் அல்ல, சட்டம் செய்யவும், ஆட்சி புரியவும் கற்றுக்கொடுத்தவர்கள். நன்றி மறந்த அரசாங்கம் எதுவும் நெடுநாட்கள் ஆட்சி செய்ய முடியாது'.

அடுத்ததாக திருமலைத்தமிழரசுக் கட்சியின் தலைவரும் நகரசபை உறுப்பினருமான திரு. இ. சோமசுந்தரம் பேசுகையில் மே தின விழா மே தினியெங்கும் இன்று கொண்டாடப்படும் பெருவிழாவாகும். 1886ம் ஆண்டு முதலாக சிக்காக்கோ நகரில் எட்டு மணி நேர வேலை கேட்டு ஆரம்பித்த இயக்கம் வெற்றியளித்ததன் பின்னதாக, எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக மே தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

முதலாளிவர்க்கம், இன்று தலைசாய்ந்து விட்டது என்று சொல்லலாம். தொழிலாளிகளது கட்டுப்பாடும் சுதந்திர வெறியும் எவ்வளவுக்கெவ்வளவு வளருகிறதோ அவ்வளவுக் கவ்வளவு வெற்றியும்-மகிழ்ச்சியும் கிடைக்கும்.

அத்தோடு ஒன்றை நாம் மிக கவனத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

நமது கடமைகளை செய்யவும், விசுவாசமாக சேவை செய்யவும் தயாராக இருந்த பின்தான் உரிமைகளுக்காக நாம் போராட முடியும்—பொய், களவு, சோம்பல், இவைகளை வளர்த்தால் நமது தொழிலாள சமுதாயத்தில் முன்னேற்றத்தைக் காண முடியாது. கடந்த கூட்டங்களில் அரசாங்கத்தை ஆதரித்தவர்கள்

(13 ம் பக்கம் பார்க்க)

திருமலை

## நகர விஸ்தரிப்புத் திட்டம்

### கட்டுப்பாடற்ற காணி விநியோகத்திற்கு திருமலை எம். பி. எதிர்ப்பு

திருமலை நகர விஸ்தரிப்புப் பற்றி திருமலை மாவட்ட அதிபர் வெளியிட்டிருக்கும் திட்டத்தை, திருமலைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந. இ. இராஜவரோதயம் வன்மையாக எதிர்த்துள்ளார்.

திருமலை நகர விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் திருமலையில் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் குடியிருந்தோருக்குக் குடியிருப்பு நிலம் வழங்குமுகமாக திருமலை மாவட்ட அதிபர் வெளியிட்டிருக்கும் காணிக் கச்சேரி அறிவித்தலுக்கு திருமலைப் பிரதிநிதி திரு. ந. இ. இராஜவரோதயம் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

திரு. இராஜவரோதயம் மாவட்ட அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் நகர விஸ்தரிப்புத் திட்டம், கிராம விஸ்தரிப்புத் திட்டம் போன்றதேயாதலால் நகர விஸ்தரிப்புத் திட்டத்தில் நகரத்தின் நிரந்தர குடிமக்களுக்கே காணி வழங்கப்பட வேண்டுமென்று கூறியுள்ளார்.

நகர அல்லது கிராம விஸ்தரிப்புத் திட்டத்துக்குரிய காணிகள் வேறு எங்கும், எப்பொழுதும் தற்காலிக குடி வாசிகளுக்குக் கொடுபடவில்லை யென்றும், அரசாங்க அதிபர் இப்பொழுது வெளியிட்டிருக்கும் காணிக் கச்சேரி அறிவித்தலை உடனடியாக ரத்துச் செய்து புதிய அறிவித்தலை வெளியிடுமாறும் திரு. இராஜவரோதயம் தமது கடிதத்தில் மேலும் கூறியுள்ளார்.

## கவிதைப் பூங்கா

### அறப்போருக்கு அறை கூவல்

—ப. இராசகுரு—

முத்தமிழைப் போற்றியிங்கு மெய்ம்புறநாம் வாழ்ந்து
முழுதுலகும் பரவிடவே சத்தியத்தை நாட்டி
எத்தனையோ ஆண்டுகளா யித்தரணி யாண்ட
எம்புகழைக் காப்பதற்கு ஏற்றதொரு போராம்
சத்தியத்தின் வழிச்செல்லும் சான்றோர்கள் சேரும்
தரணியோர் ஏத்துமொரு தகைசான்ற போராம்
கத்தியின்றி இரத்தமின்றிச் செய்திடுமிப் போரே
கருத்தினிய நம்தமிழைக் காப்பதற்கு வழியாம்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிக்
காலத்தா லழியாத தமிழ்காக்க வாரீர்
வில்போன்ற நுதலுடைய மங்கையரும் முன்னாள்
வீரங்கள் நிலைகாட்டி மாய்ந்தனரே யன்று
சொல்லோரும் புலவர்கள் தூயதமி ழதனைச்
சுதந்திர நன்நிலைநின்றே ஆராய்ந்தார் கண்டீர்
கல்லோரும் புயமுடைய காளையரே வாரீர்
கன்னியிளம் தமிழ்காக்கக் காதலுடன் வாரீர்

இமயத்தில் புலிக்கொடியும் எங்கள்குல வீரம்
எடுத்தியம்பி நின்றதுவே இவ்வுலகி லென்றும்
குமரியினை யொருசேரக் குவலயத்தி லாண்டோம்
கூடாத அரசர்தமைக் குதியடியில் சேர்த்தோம்
சமயத்தாற் பிரியோமே சதி செய்வோராட்சி
சற்றேனு மோங்காது தலைகுனியச் செய்வோம்
கமலங் கொள்முகத்தோரின் கண்ணீரைத் துடைப்போம்
காரிகையை யேற்றிடுவோம் சிங்காசனத்தில்

செந்தமிழே யெம்முயிரென் றெடுத்தியம்ப வாரீர்
செழுமையுறு மிலக்கியங்கள் தீட்டிடவே வாரீர்
முந்தையரின் போர்வீரம் முழங்கிடவே வாரீர்
மெய்ம்புடனே தம்புகழை யிவ்வுலகில் நாட்டி
அந்தமிலா இறைபாதம் அடைந்தோரைப் போன்று
ஆண்மையுடன் எம்வீரம் காட்டிடவே வாரீர்
கந்தனையும் வழிப்பட்டோர் காதலுடன் வீரம்
களித்திடவே வாழ்ந்தோரின் வாழ்வினையும் பாரீர்

ஆழங்கொள் கடல்மீது கப்பலினை யோட்டி
அயராது பொருள்சேர்த்த எம்மவரின் வீரம்
வேழங்கொள் போர்மீது விரும்பியுடன் சென்று
வேருகப் பகைவரினை கண்டது நம்வீரம்
கேழலெனி லதைவிலக்கி எதிர்த்து வரும்வீரர்
கேடுறவே போர்செய்யு மெம்மவரின் வீரம்
வேழத்தை யெறிந்திடவோர் வேல் தேடிநெஞ்சில்
வேல் கண்டு நகைத்திட்ட வீரனையும் பாரீர்

## இளைஞர்களின் ஏற்றம் கண்டு இதயம் குமுறும் எத்தர்கள்

### விஷமிகளுக்கு திருமலைஎம்.பி. விடுத்திருக்கும் எச்சரிக்கை

திருகோணமலை இளைஞர்கள் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியையும், சேவைமனப்பான்மையையும், ஒற்றுமையையும் கண்டு ஒருசில சுயநல நோக்கங்கொண்ட, சுரண்டல் பேர்வழிகளுக்குப் பொறாமை எழுந்துள்ளது. இப்பொறாமையின் காரணமாக அர்த்தமற்ற வதந்திகளைப் பரப்பி வருகின்றனர். இவ்வாறு திருமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந. இ. இராசவரோதயம் நமது நிருபரிடம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: தமிழ் பேசும் மக்கள் தமது சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், சில தமிழர்களே, தங்கள் சுயநல நோக்கோடும், தனிப்பட்ட குரோதத்தோடும் பொய்ப் பிரசாரங்களைச் செய்து வருகிறார்கள். இந்த அடிப்படையிலேதான் திருக்கோணமலை தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. இ. சோமசுந்தரம் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானம் வர இருப்பதாக ஒரு பிரசாரத்தை பரப்புகின்றனர்.

நமது கட்சிக் கிளையைத் தகர்க்கவும், கட்சியின் நல்ல பெயரைக்கெடுக்கவும் எடுக்கும் ஒரு முயற்சியாகும். திருமலைக் கட்சியின் தலைவர் மீது யாரும் நம்பிக்கை இழக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர்மீது பூரண நம்பிக்கை கட்சி வைத்திருக்கிறது என்பதை தமிழ் பேசும் மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழரசுக் கட்சியின் இவ்வருட ஊழியர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தீரம் மிக்க, நெஞ்சில் உரங்கொண்ட இளைஞர்களே. நேர்மையும் கண்ணியமும், கட்டுப்பாடுமுடைய அவ்விளைஞர்களின் ஒற்றுமையைக் கண்டு, பொறாமையினால் பொருமும் சிலர் [illegible] பரப்பி வருகின்றனர். இதற்காக நாம் வருந்தவில்லை, நகைக்கிறோம்.


## காணி விற்பனைக்கு

ஏழாலை கிழக்கு சிகரெட் பாக்டரிக் கருகாமையில் 28 பரப்புத் தோட்டக் காணி தனிக் கிணற்றுடன் விற்பனைக்கிருக்கிறது, விண்ணப்பிக்கவும்.

ஏ. சண்மு[illegible]
புகையிரத [illegible],
சிலாபம்.


## கவிதை நெஞ்சம்

யூ. எல். தாவூத்

வாக்குறுதி காக்காத நும தரசை
வார்த்தையால் சாடியே அவர் செயலை
தாக்குவதே பெருங்குற்ற மதற்காக நான்
தண்டனை யடைகுவே னென்றீர்; என்க்கு
நோக்குபதி எல்லாமே சிறப்பு; இன்றே
நும்நாடு துறப்பேனென் கவிஞர் கூற
சீக்கிரமே சென்றிடுக நாடு விட்டு
செல்லாவிடில் தண்டனையே என்று ரமைச்சர்.

ஒப்பரிய காவியத்தை மன்னர் மஹ்மூத்
ஒப்பிடவே விதிசெய்வே னுறுதி இஃது
எப்போது மென்வாக்குக் காத்து; மன்னர்
என்கவிதை பெருமையினை உணரச் செய்வேன்
தப்பாது அரசுக் கிவைக ளெல்லாம்
சாற்றுக அமைச்சரே! என்றார் கவிஞர்
இப்போதே உம்கூற்றை அரச ருக்கு
இயம்புவேன் கவிஞரே என்று ரைத்து

மெதுவாக நடைபோட்டா ரமைச்ச ரஹ்மத்
விரைவாக மற்றோருந் தொடர்ந்தார்; கவிஞர்
ஒதுக்கியே விட்டிட்ட பரிசில் பையை
உடனேயே தம்மோ டேந்திச் சென்றார்
இதைஎல்லாம் நோக்கிட்ட கவியின் மகளார்
எண்ணில்லாற் றுயரோடு தாதை நோக்கி
மதியாத இந்நாட்டை விட்டு நாங்கள்
வாழவே வேறெங்கு செல்வோ மென்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தைக் காணத் துடித்தவர் தூக்கிலிடப்பட்டார்

### அரங்கம் 3

சேர் றொஜர் கேஸ்மன்ற்றுக் கெதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டன. அக்குற்றச்சாட்டுக்களை உறுதிப் படுத்தக் கூடிய ஆதாரங்கள் இருப்பதைக் கண்ட அவரது நண்பர்கள் சிலர், ஜேர்மனியிலிருந்து அவர் 21-4-1916ல் அயர்நாட்டிற்கு நீர்மூழ்கியில் வந்து சேர்ந்தது ஈஸ்ரர் வாரப் புரட்சியை நிறுத்துவதற்காகவே ஒழிய அப்புரட்சியில் பங்குபற்றுவதற்காகவல்ல என்று கூறித் தண்டனையைக் குறைத்துக் கொள்

றொஜர் கேஸ்மன்ற் லண்டனிலுள்ள பென்ரன்வில் சிறைச்சாலையில் 3-8-1916ல் தூக்கிலிடப்பட்டார். ஈஸ்ரர் வாரப் புரட்சியில் ஈடுபட்டு மரணதண்டனை அனுபவித்த பதினறுவது மாவீரன் அவர். அன்றைய தினம் அயர் மக்கள் அனைவரும் துக்கம் அனுட்டித்தனர். கூட்டங்கள், விரிவுரைகள், விளையாட்டுக்கள் முதலியவற்றை ரத்துச் செய்தனர்; தமக்காகத் தங்கள் வாழ்வையே அர்ப்ப

கடமாகிவிட்டது. அதனுல் கைதிகள் அனைவரையும் விசாரணை சபைக்கு முன் கூட்டிச் சென்றனர். ஆனுல் முன்னர் மனுப்பண்ணியிருந்த ஒரு சிலரைத் தவிர்ந்த எவருமே மன்னிப்புக் கேட்க மறுத்தனர். இது ஆங்கில ஆட்சியை இன்னும் சங்க

**‘கோமகன்’**
**‘மாமல்லன்’**

டத்துக்குள்ளாக்கியது. செய்வதென்ன என்பதை அறியாத அரசாங்கம், ஏதாவது சில காரணங்களைத் தாமாகவே கண்டுபிடித்து ஏறத்தாழ 600 புறொங்கொக் கைதிகளை விடுதலை செய்தனர்.

1916ம் ஆண்டு ஜனவரி மாதம் அமுலில் கொண்டு வரப்பட்ட படைக்காக நெருக்கும் சட்டத்தின் பிரகாரம் திடகாத்திரமான புரட்சிக் கைதிகளை ஆங்கில இராணுவத்தில் சேர்க்க ஆட்சியினர் முற்பட்டனர்.

சாங்கம் அவ்வாலிபர்களை விடுதலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

### அரங்கம் 4

புறொங்கொக்கிலுள்ள வடக்கு முகாமில் அடைத்து வைத்திருந்த கைதிகளைத் தரமற்ற வேலைகளைச் செய்யுமாறு சிறைச்சாலை அதிகாரிகள் பணித்தனர். அவர்களோ அவ்வாறு செய்ய முடியாதென ஒரெயிலி தலைமையில் மறுத்தனர். அதன்

தற்குப் புகையிலையும் படிப்பதற்குப் பத்திரிகைகளும் இரகசியமாக எடுத்துச் சென்று இரண்டு முகாம்களுக்கிடையேயும் தொடர்பு ஏற்படுத்தினர். இந்தத் திட்டத்தை வகுத்தவர் இளைஞரான மைக்கேல் கொலின்ஸ்.

பலவந்தமாகக் கைதிகளை ஆங்கில இராணுவத்தில் சேர்க்கும் பொருட்டு அதிகாரிகள் சிறைச்சாலைக்கு வந்து கைதிகள் அனைவரையும் ஒன்றுகூடி நிற்குமாறு கட்டளையிட்டனர். தோண்ரன் என்பவரின் பெயரை

## விடுதலைக் கைதிகள் சித்திரவதைப்பட்டனர்

ளுமாறு கேஸ்மன்ற்றை வற்புறுத்தினர். அவரோ சிரித்த முகத்துடன் அவர்களுடைய நட்பின் பெருமைக்கு நன்றி தெரிவித்து விட்டுத் தான் அவ்வாறு கூற முடியாது என்று மறுத்தார். தனது உயிரிலும் பார்க்கத் தனது நாட்டினது மானமும் விடுதலையும் பெரிதென மதித்தார் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த பெருந்தகையாளர் றொஜர் கேஸ்மன்ற்!

இராணுவ நீதிமன்றத்தார் அவரைக் குற்றவாளியாகக் கண்டு மரண தண்டனை விதித்தனர். மரண தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு கேஸ்மன்ற் கூறுகிறார்:—

“என்னைப் பற்றியோ எனது விதியைப் பற்றியோ அல்லது முயற்சி செய்து தோல்வியடைந்த அயர் மகன் ஒருவனின் விதியைப் பற்றியோ பேசுவதை விடுத்து, மிகவும் அவசியமான விடயத்தை—தோல்வியையே கண்டறியாத எனது நாட்டின் கோரிக்கைகளையும் விதியையும் பற்றிச் சிறிது ஆராய்வோம். தனது நம்பிக்கைகள் தரைமட்டமாவதைக் கண்டும் அயர்நாடு வாழ்ந்து வந்திருக்கின்றது, சளையாது இன்னும் நம்பிக்கை கொள்கின்றது. சந்ததி சந்ததியாகத் தனது புதல்வர்களும், ஏன், புதல்வியர்களும் கூட ஒரே குறிக்கோளுக்காகப் போராடி, ஒரே வல்லரசின் கைகளிலேயே சிக்குண்டு இன்னல் அனுபவித்து, தோல்வி என்ற ஒரே முடிவை அடைந்ததை அயர் அன்னை கண்டிருக்கின்றுள்; ஒவ்வொரு முறையும் அந்த அடக்குதலை எதிர்ப்பதற்காகப் புதிய சந்ததியொன்று முளைத்து வருவதையும் அவள் கண்டுதான் இருக்கின்றுள். திருவாளர் கிளாட்ஸ்ரன் கூறியது போல அகிலத்தின் அந்தத்தையே தொடும் சர்வ வல்லமை பொருந்திய மண்டலமாக ஆங்கில அதிகாரம் இருக்குமானுல், அந்த மண்டலத்தின் அளவுக்கும் அப்பாற்பட்டது, அந்த அதிகாரத்தையும் விஞ்சுவது அயர் மக்களது நம்பிக்கை. இழந்த சுதந்திரத்தைப் பல நூற்றுண்டுக

ணித்த தலைவர்களை நினைந்து நினைந்து கண்ணீர் விட்டனர். புரட்சிக் கைதிகள் அனைவரும் அந்நாளைப் பிரார்த்தனையிலும் விடுதலைப் பாடல்களைப் பாடுவதிலும் கழித்தனர்.

றொஜர் கேஸ்மன்ற்றின் கொலையைக் கேள்வியுற்ற மக்கள் ஆவேசம் அடைந்தனர். இரகசியமாகப் பிரசாரம் செய்ய ஆரம்

## சிறைச்சாலைக்குள் உண்ணுவிரதம்

காரணமாக ஒரெயிலி றீடிங் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

ஆட்சியினர் இன்னும் 600 புறொங்கொக் கைதிகளை விடுதலை செய்தனர். எஞ்சியிருந்த கைதிகளைத் தெற்கு முகாமுக்கு மாற்றினர். அவ்வாறு மாற்றப்பட்ட அனைவரிடமும் பெயர்களையும்

யும் இலக்கத்தையும் உரக்கமாகக் கூறி அவனை அழைத்தனர். இதற்கு எவருமே செவி சாய்க்கவில்லை. நோஞ்சலான ஒருவரைத் தோண்ரன் என்று அனுப்பி அரசாங்கத்திற்குச் சங்கடத்தை உண்டாக்கக் கைதிகள் சிலர் எண்ணினர். ஆனுல் மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்த விரும்பாத தோண்ரன், சிறிது நேரம் கழித்துத் தாமாகவே அதிகாரிகளிடம் சென்றுர். ஆயினும் இராணுவத்தில் சேர மறுத்தார். அதனுல் அவருக்கு இரண்டு ஆண்டுக் காலக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

புறொங்கொக் கைதிகளிடையே செல்வாக்குடைய தலைவர்களுள் ஆதர் கிரிபித், தெரன்ஸ் மக்ஸ்வினி ஆகிய இருவரும் ஆபத்தான பேர்வழிகள் எனக் கருதப்பட்டு றீடிங் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். மைக்கேல் கொளின்ஸ் செய்த ஏற்பாடுகள் எல்லாம் இரகசியமாகவே நடைபெறறதால் அவரை ஆட்சியாளர் சந்தேகிக்கவில்லை. அதனுல் கொளின்ஸ், கைதிகள் முகாமிலேயே விட்டு வைக்கப்பட்டார்!

இதுவரையும் 100க்கு மேற்பட்ட கைதிகள் தண்டனைக்காக வடக்கு முகாமுக்கு அனுப்பப்பட்டிருந்தனர். கைதிகள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். ஈற்றில் அவர்களுக்கு வெற்றி கிட்டியது. இனிமேல் எவ்வித தோட்டி வேலையையும் ‘அகதிகள்’ என அழைக்கப்பட்ட புறொங்கொக் கைதிகளைக் கொண்டு செய்விக்க வேண்டாமென ஆட்சியினர் சிறைச்சாலை அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டனர். தண்டனை பெற்ற அகதிகள் யாவரும் தெற்கு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சிறை அதிகாரிகள் கைதிகளின் பெயர்களையும் இலக்கங்களையும் கண்டு பிடித்துப் பலவந்தமாக அவர்களை இராணுவத்தில் சேர்ப்பதற்குப் பலவிதமான உபாயங்களைக் கையாண்டனர். அணி

## இனத் துரோகிகள் பகிரங்கமாக மானபங்கப்படுத்தப்பட்டனர்

பித்தனர். ஆங்கில ஆட்சிக்கு சாவுமணி அடிப்பதாக இளைஞர்கள் சபதம் எடுத்தனர். ஆட்சிக்கு ஆலவட்டம் பிடிப்பவர்களினதும் ஒற்றுச் சொன்னவர்களினதும் உடைமைகளை நாசமாக்கினர். இனத் துரோகிகளின் பெயர்களையும் முகவரிகளையும் தெருக்களிலும் சுவர்களிலும் அனைவருக்கும் தெரியக் கூடியதாகச் சிவப்பு மசியால் எழுதி வைத்தனர். கண்ட இடங்களிலெல்லாம் அவர்களைக் கேலி

கைதாவதற்கு முன் இங்கிலாந்தில் வாழ்ந்த மூன்று அயர் இளைஞர்களைப் பட்டாளத்தில் சேருமாறு பணித்தனர். ஆனுல் அவர்களோ மறுத்தனர்; தம்மால் இயன்றவரை மனத் திடத்துடன் எதிர்த்தனர். மறுத்ததற்குத் தண்டனையாக அதிகாரிகள் அவர்களைத் தனி அறைகளில் அடைத்துக் கைகளையும் கால்களையும் இரும்புச் சங்

முகவரிகளையும் மற்ற விபரங்களையும் ஆட்சியினர் கேட்டனர். ஆனுல், எதுவரினும் வரட்டும், நாம் எந்த விபரமுமே கொடுக்க மாட்டோம் என்று சபதம் எடுத்தனர் கைதிகள்!

தாமிருக்கும் இடத்தைத் துப்பரவாக வைத்திருக்க வேண்டிய எட்டுக் கைதிகளை முகாமைக் காவல் புரியும் இராணுவத்தினரின் மலகூடங்களைத் தோட்டிகள்




செய்து மானபங்கப்படுத்தினர். இளைஞர்களிடையே, ஏன், மகளிர்களிடையேயும் கூட உணர்ச்சி பொங்கி வழிந்தது. ஆலயங்களையும் மலைச்சாரல்களையும் புரட்சி நிலையங்களாக்கினர். தூக்குத் தண்டனையாலும் சிறைச்சாலையாலும் சித்திரவதை செய்வதாலும் பொருளாதார நிர்ப்பந்தத்தாலும் விடுதலைத் தாகத்தை அடக்க முடியாதென்பதை அயர் மக்கள் உணர்த்தினர்.

இந்த நிலையையும் வெளிநாடுகளின் கண்டனங்களையும் அவதானித்த ஆங்கில

கிலியால் பிணைத்தனர்; உண்பதற்கு வெறும் பாண் துண்டு ஒன்றும் குடிப்பதற்கு ஒரு கோப்பை தண்ணீரும் கொடுத்தனர். பல மாத காலமாக அடியும் உதையும் கொடுத்து இராணுவத்தில்

போல் துப்பரவு செய்யுமாறு சிறைச்சாலை அதிகாரிகள் பணித்தனர். அந்த எட்டுப் பேரும் மறுக்கவே, தண்டனைக்காக அவர்கள் வடக்கு முகாமுக்கு அனுப்பப்பட்டனர். படிப்பதற்குப் பத்திரிகைகளும் புத்தகங்களும் புகைப்பதற்குச் சுருட்டுகளும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை; உற்றுர், உறவினர் வந்து பார்ப்பதும் அவர்களுடன் கடிதத் தொடர்பு கொள்வதும் தடை செயயப்பட்டது.

## நாடெங்கும் புரட்சி நிலையங்கள்

ளாக இன்னல்களுக்கிடையே நினைவில் நிறுத்தும் தன்மை—எமது நியாயமான கோரிக்கைகளினின்று உதித்த அடக்க முடியாத வேட்கை, இதற்காகத்தான், நிச்சயமாக, மனிதன் போராடியிருக்கின்றுன், வாழ்ந்திருக்கின்றுன், மரணத்தை ஏற்றிருக்கின்றுன். அந்தக் காரணத்திற்காகத் தான் இன்று, இங்கு, நான் குற்றஞ் சுமத்தப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்டு நிற்கின்றேன் என்றுல், நான் நல்ல சூழலில் நிற்கின்றேன், மேன்மை பொருந்திய சுதந்திர வீரர்களின் வாரிசாக நிற்கின்றேன்.”

அரசாங்கம், மன்னிப்புக் கேட்கும் கைதிகளை அழைத்து விசாரணை செய்து, அதன்பின் அவர்களை விடுதலை செய்வதற்காக ஒரு விசாரணை சபையை நியமித்தது. தவறுதலாகக் கைதான பலர் கைதிகள் மத்தியில் இருந்தும், அவர்களில் ஒரு சிலரே தமது விடுதலை பரிசீலனை செய்யப்படவேண்டும் என்று கோரினர். அரசாங்கத்திற்கு மிகவும் சங்

### அடுத்த வாரம்

- ★ பிரதமர் இராஜினுமா
- ★ ‘நான் ஒரு சின் பீன் வாதி’
- ★ கைதிகள் கிளர்ச்சி
- ★ வட்ட மேசை மாநாடு!

சேரும்படி அடிக்கடி வற்புறுத்தினர். ஆனுல் அம்மூன்று இளைஞர்களோ உயிர் போவதானுலும் தாங்கள் கொண்ட கொள்கையிலிருந்து இம்மியளவும் விலகத் தயாராக இல்லை என்று முழங்கினர்.

பொது மக்கள் கண்டனம் உச்ச நிலையை அடைந்தது. அதனுல், பலவந்தப்படுத்திக் களைத்துப்போன அர

## ஆட்சியாளரின் முயற்சி அனைத்தும் படு தோல்வி

தினமும் 8 பேர் தோட்டி வேலை செய்ய மறுத்தனர். அவர்கள் அனைவரும் தண்டனை அனுபவிப்பதற்காக வடக்கு முகாமுக்கு அனுப்பப்பட்டனர். இறுதியில், தாம் தோட்டி வேலை செய்ய விரும்புவதாக 8 பேர் முன் வந்தனர். தோட்டி வேலை செய்யும் போர்வையில் வடக்கு முகாமில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த தமது தோழர்களுக்கு ருசியான உணவும் புகைப்ப

வதற்குச் சில கைதிகளுக்கு உடை கொடுப்பதாகக் கூறி அவர்களை வரும்படி அழைத்தனர். அக்கைதிகள் சிறை அதிகாரிகளின் வார்த்தைகளை நம்பி உடைகளை எடுப்பதற்காக அவர்களிடம் சென்றனர். கபடர்களான அதிகாரிகள் அவர்களைக் கைது செய்து கட்டாய இராணுவ சேவைக்கு அனுப்பி வைத்தனர். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அகதிகள் மிகவும் கவனமாக இருந்தனர்.

இன்னும் இரண்டு கைதிகளைக் கண்டுபிடிப்பதற்காக அதிகாரிகள் அகதிகள் மத்தியில் வந்து, ஒருவரின் மனை

(15-ம் பக்கம் பார்க்க)

## ஆட்சியாளருக்கு ஆலவட்டம் பிடித்தோரின் உடைமைகள் நாசமாக்கப்பட்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1963 மே மாதம் 19-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் :3411 த. பெ. 1183


# சிங்களம் மட்டும் சட்டத்தை தமிழ்க் காங்கிரஸ் ஏற்கிறது?

## ஓர் எச்சரிக்கை

காதும் காதும் வைத்தாற்போல் மொழிப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அந்தரங்கக் கூட்டங்கள் நடைபெறுகின்றனவாம். நடக்குமிடம் அலரி மாளிகை. கலந்துகொள்பவர்கள் பிரதமரும் மற்றும் சில "ஏகாந்தவாதிகளும்."

தனக்கெனத் தனித்தனி சுயநலக் கொள்கைகளை வகுத்துக்கொண்டு மக்களிடமிருந்து பிரிந்து தனித்து நிற்பவர்களே இந்த "ஏகாந்தவாதிகள்".

மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று கூசாமல் கூறிக்கொண்டிருந்தவர் பிரதமர். மீண்டும் நேரடி நடவடிக்கை தொடங்கும் என்று அறிவித்த பிறகுதான் மொழிப் பிரச்சினை இன்னும் தீரவில்லை என்பதை அவர் உணர முடிந்தது. உடனே பிரச்சினையைத் தீர்க்க "பேச்சுவார்த்தை" நடத்தத் தொடங்கி விட்டாராம்.

மொழிச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் பேசும் மக்களே. அச்சட்டத்தைக் கொண்டு அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் கொஞ்சமன்று. எனவே அவர்கள் தங்கள் சார்பில் வாதாட தமிழரசுப் பிரதிநிதிகளை ஒரு கோஷ்டியாகப் பாராளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளனர். அவர்களின் உரிமை உணர்ச்சியையும் உள்ளத்தின் வேதனையையும் அறிந்தவர்கள் அந்தப் பிரதிநிதிகளே! மொழிச் சட்டத்தால் எந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனரோ, அந்த மக்களுடன் பேசினால்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அந்த மக்கள் சார்பில் பேசத் தகுதியுடையவர்கள் அவர்களின் பிரதிநிதிகளே. அப்பிரதிநிதிகளுக்கே மக்கள் அதிகாரமளித்துள்ளனர்.

இந்த உண்மையைத் தெளிவாக உணர்ந்திருந்தார் காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா. மொழிப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது, அவர் பேச்சுவார்த்தை நடத்தியது தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளுடன் மட்டுமே. அதன் விளைவே பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தம். மொழிப்பிரச்சினை பற்றி எந்த உதிரியுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்தவில்லை.

ஆனால் அப்படிச் செய்யவில்லை அவரது மனைவி. கணவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாகப் பறைசாற்றுகிறார் தற்போதைய பிரதமர். ஆனால் இவர் செய்வதெல்லாம் கணவனின் வழிக்கு நேர்மாறானவைதான்.

மக்கள் பிரதிநிதிகளை ஒதுக்கிவிட்டு, மக்கள் தொடர்பற்ற ஒரு நடேசன், தேர்தலில் மக்களால் மண் கவ்வச் செய்த ஒரு குமாரசாமி, இன்னும் சில சுய—இச்சைகள் ஆகியோருடன் அந்தரங்கமாகப் பேசினாராம்—இன்னும் பேசுகிறாராம். இனியும் பேசப் போகிறாராம்.

மக்களிடையே அவர்களுக்கு ஆதரவு கிடையாது என்பது பிரதமருக்குத் தெரியும். ஆனால் அவர்கள் அரசாங்க ஆதரவாளர்கள். பிரதமர் கிழித்த கோட்டைத் தாண்டாதவர்கள். தனிச் சிங்களச் சட்டத்தைப் பூரணமாக ஏற்றுக்கொண்டவர்கள்.

இந்த நபர்களுடன் பேசுவதால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதும் அரசாங்கத்துக்குத் தெரிந்ததே. இதிலிருந்து இப்பேச்சுவார்த்தைகள் ஒரு நடிப்பு — பாசாங்கு என்பது புலனாகிறது. அந்த நபர்களும் நடிக்கின்றனர், மக்கள் பிரதிநிதிகளைப் போல!

தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளைப் புறக்கணித்து நடத்தும் இப்பேச்சுவார்த்தைகள் அந்த மக்களை அவமதிப்பதாகும். அவர்களின் கருத்தை நிந்திப்பதாகும். மக்களைக் காட்டிக்கொடுக்கும் பதவிப் பித்தர்களுக்குப் பதிலாக, உரிமைப் போர் நடத்தும் நேர்மையான தியாகிகளைப் பாராளுமன்றத்துக்கு அவர்கள் அனுப்பியது ஒரு தவறு என்பதைச் சுட்டிக் காட்டுவதைப் போலுள்ளது இந்தப் பேச்சுவார்த்தைகள்.

புதிய செனட்டர் திரு. சு. நடேசனுக்கே இந்தக் "குசுகுசு"ப் பேச்சில் முதல் இடமாம். 'அவர் பழுத்த அரசியல் மேதை. தமிழ்ப் பண்பின் சின்னம், தமிழ் அறிஞர், பெரியார்' என்றெல்லாம் சதா அவர் தம் புகழ் பாடுகிறது ஒரு தமிழ்த் தினசரி. ஏன் அப்புகழ்ச்சி என்பது பகிரங்க ரகசியம்.

உண்மையில் அவர் ஓர் அரசியல் அறிஞராயின், மொழிப் பிரச்சினைபற்றி அவருடன் பேச பிரதமர் முன்வந்த போது, அவர் என்ன கூறியிருக்கவேண்டும்?

"தமிழ் பேசும் மக்கள் தங்களின் பிரதிநிதிகளாகத் தமிழரசுவாதிகளை ஏகோபித்த ஆதரவுடன் தெரிவு செய்துவிட்டனர். அந்தப் பிரதிநிதிகளுடன் பேசவேண்டிய பிரச்சினை இது. அவர்களுடன் பேசுவதையே மக்கள் ஏற்றுக்கொள்வர். அவர்களே மக்களிடமிருந்து அதிகாரம் பெற்றவர்கள்" என்றல்லவா அவர் கூறியிருக்க வேண்டும்! அப்படிக்கூற அரசியல் மேதாவிலாசம் ஒன்றும் அவசியமன்று. சாதாரண அரசியல் அறிவே போதுமானது.

தனிச் சிங்களச் சட்டத்தைப் பூரணமாக ஏற்றுக்கொண்டுள்ள திரு. நடேசன் தன் மனச்சாட்சிக்கு மாறாக மக்கள் பிரதிநிதியைப்போல ஏன் நடிக்கவேண்டும்? பதவி ஆசை தவிர அதற்கு வேறு காரணம் இருக்க முடியாது. அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவருமல்ல—மக்களிடமிருந்து அதிகாரம் பெற்றவருமல்ல.

திரு. நடேசன் பிரதமரைச் சந்தித்த கையோடு திரு. பொன்னம்பலத்துடனும் ஏதோ பேசினாராம். மக்களால் நிராகரிக்கப்பட்ட மற்றொரு "வங்கரோத்து" அரசியல் வாதியே அவர். இனி இந்த "ஏகாந்தவாதிகள்" அனைவரும் கூடி பிரதமருடன் ஒரு "வட்டமேசை" நடத்துவார்கள் போலும், மொழிச் சட்டத்தைத் திருத்தாமல் ஏதேனும் சலுகைகள் கொடுக்கிறீர்களா என்று கெஞ்சிக் கேட்க.

அலரிமாளிகையில் நடைபெறும் அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளால் அவர்கள் பதவிகளைப் பெற முடியுமானால் தாராளமாகப் பெற்றுக்கொள்ளட்டும், ஆனால் அதனால் தமிழ் பேசும் மக்களை மீண்டும் படுகுழியில் தள்ள முடியாதென்பதை மட்டும் அவர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு மக்கள் இன்று விழிப்படைந்துள்ளனர்.

இப்பேச்சுவார்த்தைகளை நடத்துபவர்கள் அனைவரும் (பிரதமர் உட்பட) தமிழரசுக் கட்சியை எதிர்ப்பவர்களே. அவர்களின் இப்பேச்சுவார்த்தைகளின் [illegible] கட்சியைச் செல்வாக்கு இழக்கச் செய்வதாயின், அது பகற்கனவாகவே முடியுமென்று இன்றே எச்சரிக்கின்றோம்.

## மாதர் தம் மாண்பினை உணர இத்தனை ஆண்டுகளா?

சில பிராணிகள் காலத்துக்குக் காலம் தங்கள் உடல் போர்வையை மாற்றுவதுண்டு. தமிழ்க் காங்கிரசும் தனது முன்னைய கொள்கைகளை விடுத்து காலத்துக்கேற்ற வகையில் மாற்றம் தேடுவதுடன் இரட்டை வேடமும் போட்டு வருகிறது என்பதற்கு அண்மையில் கொழும்பில் அமைக்கப்பட்ட மாதர் முன்னணியே சாட்சி பகருகிறது. யூ. என். பிக்கு வால் பிடிப்பவர்களே மாதர் முன்னணியில் பிரதம பாகம் வகிக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலோ இடது சாரிகளுடன் கூடிக் குலாவி மகிழ முனைகிறது காங்கிரஸ்.

"கிளிப்பிள்ளைகளை வளர்த்து பூனைக்குப் பலியாக அனுப்பியிருக்கிறார்கள் இந்தத் தமிழரசுக் கட்சியினர், ஏன் இவர்களுக்கு வீட்டில் ஆண்கள் இல்லையோ?" என்று கூறியவர்கள் வேறு யாருமல்ல; "தமிழ்ப் பெண்களுக்கு அரசியல் அறிவு ஓரளவு அவசியம் என்பதாலேயே இம் மாதர் முன்னணியை அங்குராப்பணம் செய்திருக்கிறேன்," என்று இம் மாதம் 13-ம் திகதி கொழும்பு மாநகரில் திருவாய் மலர்ந்தருளிய திரு. பொன்னம்பலத்தின் கோஷ்டியினரே அன்று, 1957-ம் ஆண்டு பெப்பிரவரி நாலாம் திகதி யாழ்ப்பாணத்தில் அப்படிக் கூறினார்கள், தமிழரசு மாதர் முன்னணி உறுப்பினர்களைப் பார்த்து.

### இத்தனை ஆண்டுகளா?

திரு. பொன்னம்பலத்திற்கும் அவரது கோஷ்டியினருக்கும் மாதரின் முக்கியத்துவத்தை உணர இத்தனை ஆண்டுகள் ஆகியதே என்பதை எண்ணும் பொழுது, தமிழ்க் காங்கிரஸின் அரசியல் ஞானம் எத்தகையது என்பது புலனாகிறது.

அறம் காக்கும் பெண்டிருக்கு தமிழ் காக்கும் பணியும் உண்டு என்பதைத் தமிழரசுக் கட்சி என்றோ உணர்ந்து விட்டது. உலக நாடுகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களில் மாதர்களும் குறிப்பிடக் கூடியளவு பங்கை வகித்துள்ளார்கள் என்பதை நமக்குக் கடந்த கால வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆனால் 1943-ல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்க் காங்கிரஸ் இயக்கம் இத்தனை ஆண்டுகள் கழித்து, தனது அந்திமக் காலத்தில்தான் பெண்களின் பெருமையை உணர்ந்திருக்கிறது. அந்த வரையில் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு நமது பாராட்டு.

### ஐ. தே. க. மாதர் முன்னணியா?

தமிழ் காங்கிரஸ் மாதர் முன்னணி, உண்மையில் ஒரு மாதர்களின் முன்னணியா என்பது கேள்விக்குரிய விடயம். இதன் முக்கிய பதவிகளை வகிப்பவர்கள் யார்? கடந்த பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகரான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் தேர்தல் அபேட்சகர் மனுவை வழி மொழிந்த திரு. ஈ. பி. செல்லையாவின் குடும்பமே தமிழ்க் காங்கிரஸ் மாதர் முன்னணி என்று கூறினால், அது மிகையாகாது.

அடுத்து, இந்த இயக்கம் உண்மையில் தமிழ்க் காங்கிரஸ் மாதர் முன்னணியாக இருந்தால் பரந்த வடகிழக்குப் பிரதேசத்தில் அல்லவா தனது முதல் கூட்டத்தை நடாத்தியிருக்க வேண்டும்? பின்னர் படிப்படியாக கொழும்புக்கு வந்திருந்தால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை (தமிழ் பிரதேசத்தில் பெயருக்குக் கூட ஒரு மாதரும் கிடைக்கவில்லைப் போலும்). மேலும் மாதர் முன்னணி முக்கிய உறுப்பினர்களையும், பதவியாளர்களையும் பார்க்கையில் இது ஒரு ஐ. தே. கட்சியின் மாதர் முன்னணியேதான் என்று கூறினால் தவறாகாது போல தெரிகிறது.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

### சுயநலக் கும்பல்

ஒருபுறத்தில் திரு. பொன்னம்பலம் ஐ. தே. கட்சி முக்கியஸ்தர்களுடன் உறவாட, மறுபுறத்தில் 'தமிழ்க் காங்கிரஸ் யாழ் மாவட்டக் கிளைத் தலைவர்' என்ற அடைமொழியைத் தாங்கியிருக்கும் ஒருவர் பத்திரிகைகளுக்கு வேறு அறிக்கை விட்டிருக்கிறார்.

அந்த அறிக்கையிலிருந்து தமிழ்க் காங்கிரஸின் நோக்கம் என்ன என்பது புலனாகிறது. தமிழ் பேசும் மக்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அவர்கள் இழந்த பதவிகளைத் திரும்பிப் பெறலாமா? புதிதாக வந்து சேர்ந்தவர்கள் மக்கள் அரங்கில் தலை காட்ட முடியுமா? என்று அங்கலாய்க்கிறார்கள்.

### தனிச் சிங்களம் ஏற்றுக்கொள்ளப்பட்டது

அடுத்து, பெரிய அரசியல் இயக்கங்கள் தேர்தல் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொள்வது போல, இவர்களும் வேறு, வெறும் வாய் அசைக்கிறார்கள். மேலும் வடமுனையிலிருந்து தென்முனைவரை தமிழ் மொழிக்குச் சமத்துவம் பெற்றுக் கொடுப்போம் என்று கூறிய திரு. பொன்னம்பலம் கோஷ்டியினர் இந்த அறிக்கை மூலம், தங்களின் சுயரூபத்தையும் காட்டிவிட்டார்கள். 'இடதுசாரி ஒற்றுமை முன்னணியினர் மொழிப் பிரச்சினையையிட்டுத் தற்போது கடைப்பிடிக்கும் கொள்கையை நாங்கள் வரவேற்கிறோம்,' என்றும் அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

எனவே திரு. பொன்னம்பலம் கோஷ்டியினர் சிங்களம் மட்டும் கொள்கையை மனப்பூர்வமாக ஏற்று விட்டார்கள். இதை மனதில் கொண்டுதான் போலும் திரு. பொன்னம்பலம் வட்டமேசை மாநாட்டுக் கருத்தை முன்னர் தெரிவித்துள்ளார்.

### உண்மை உருவம்

தமிழ்க் காங்கிரஸ் என்று கூறிக்கொண்டு திரு. பொன்னம்பலமும் அவரின் திருக்கூட்டமும் இயங்கும் முறைகள் முன்னுக்குப்பின் முரணாக உள்ளன. ஒருபுறத்தில் ஐ. தே. கட்சியுடன் கூடிக் குலாவுகிறார்கள், மறுபுறத்தில் இடதுசாரி முன்னணியினரின் போக்கை வரவேற்கிறார்கள்.

அவர்களுக்கு வேண்டியது பதவி. பதவிக்காக எதையும் செய்வார்கள். இனம், மொழி அனைத்தையும் துறப்பார்கள். திரு. பொன்னம்பலம், புதிய மேல்சபை உறுப்பினர் நடேசன் போன்றோரின் கடந்த கால அரசியல் வாழ்வு இதை நமக்கு மேலும் வலியுறுத்துகிறது.

## 'சர்வாதிகார' பிக்குவுக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரிகள் முதலானோர் மேடையில் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களுடன் ஞானசீக தேரோவும் சரியாசனத்தில் அமர்த்தப்பட்டிருந்தார். பாராளுமன்றக் குழு தீர்மானம் நிறைவேற்றிய பின்னரே இந்தப் பொதுக் கூட்டம் நிகழ்ந்ததனால் அரசாங்கக் கட்சி ஞானசீக தேரோ உறவு பற்றி சந்தேகப்பட இடமிருக்கிறது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

தேரோவின் அறிக்கை அரசாங்க எம். பி.கள் சிலரிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளதென்றும், முப்படைகளினதும், பொலிஸினதும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ள இரு பெரும் நபர்களுடன் இந்த பிக்கு நெருங்கிய தொடர்பு கொண்டிப்பதே இதற்குக் காரணமென்றும் அரசாங்க வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

பிரதமரின் சர்வாதிகாரம் ஏற்பட்டால், 1953ல் ஏற்பட்டதைப் போன்ற ஒரு "ஹர்த்தால்" போராட்டம் நிச்சயமாகக் கிளம்பக் கூடுமென்றும், அதனை அடக்க இராணுவத்தை அழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றலாமென்றும், அதனால் இராணுவ சர்வாதிகாரம் ஏற்படவழி ஏற்படுமென்றும், அப்படி ஏற்பட்டால், பிரதமருக்கே கெடுதியென்றும் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி வெறியைச் சாடும் சகோதரர்கள்

# மானிப்பாயில் தேநீர்க் கடைப் பிரவேசம்

## கதிரவேற்பிள்ளை, நல்லையா முன்னின்று நடாத்தினர்

தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பது சாதிக் கொடுமையேயாகும். இக்கொடிய விஷப்பூண்டை வேரோடு அழிப்பதைச் சிரமேற்கொண்டு பணியாற்ற முற்பட்டுழைக்கும் உத்தமர்கள் போற்றுதற்குரியவர்களே.

மானிப்பாயில் கடந்த 5-5-63ல் தேநீர்க்கடைப் பிரவேசம் நடைபெற்றது. தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு. கதிரவேற்பிள்ளையும் செனட்டர் நல்லையாவும் உடுவில் முன்னேற்ற மன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து இந்த வைபவத்தை நடாத்தி முடித்தனர்.

சாதி ஒழிப்புக் குழுத் தலைவர் திரு. சி. கதிரவேற்பிள்ளை, செனட்டர் ஞா. நல்லையா ஆகியோர் தலைமையில் உடுவில் தொகுதி மக்கள் முன்னேற்ற மன்ற உறுப்பினர்கள், தென்மராட்சி மக்கள் முன்னேற்ற மன்றச் செயலாளர் உட்பட மானிப்பாய், உடுவில் பகுதிகளில் வசிக்கும் சிறுபான்மைத் தமிழர்கள் தேநீர்க் கடைகளுக்குச் சென்று சமத்துவம் தரும்படி வேண்டினர். எதிர்பார்த்ததற்கு மாறாக தேநீர்க்கடைச் சொந்தக்காரர்கள் பலர் சமத்துவமாக தேநீர் சிற்றுண்டிகள் வழங்கியதோடு நன்கு உபசரித்தனர். அப்பகுதியில் உள்ள 3 கடைச் சிப்பந்திகள் முதலாளிமார் இல்லாததைச் சாட்டாகச் சொல்லி முடியாதென மறுத்துவிட்டனர்.

மக்கள் முன்னேற்ற மன்றத்தின் முயற்சியால் இன்று இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஏறக்குறைய 9 தேநீர்க்கடைகளில் 6 கடைகள் மனப்பூர்வமாகத் திறந்து விடப்பட்டது பெரிய வெற்றியாகும்.

## தொகுதிப் பண்ணைக்கு மனுச் செய்யும்படி

### தமிழரசுத் தந்தை வேண்டுகோள்

தொகுதிக்கொரு பண்ணை என்ற முறையில் விவசாய அபிவிருத்தி செயல்பட்டு வருகிறது. இதில் அநேக தொகுதிகளுக்கான திட்டங்கள் ஏற்கனவே அமுலாகி வருகின்றன.

காங்கேசன்துறைக் குரிய தொகுதிப் பண்ணைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அநேகர் விண்ணப்பங்கள் செய்துள்ளனர். என்றாலும் மேலும் பல இடங்கள் நிரப்ப உள்ளன.

தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் காங்கேசன்துறைத்தொகுதி மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில், மிகுதியாக உள்ள இடங்களுக்கு உடனடியாக விண்ணப்பிக்கும்படி' வேண்டியுள்ளார். எனவே காங்கேசன்துறைத் தொகுதிக்கு உட்பட்ட மக்கள் உடனடியாக இவ்விடங்களை நிரப்புவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

## குழைந்து பேசும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வது வெறும் பொழுதுபோக்கிற்கல்ல. இரைப்பையை நிரப்புவதற்கான தொழிலுமல்ல! கண்டவர்களின் பேச்சிலே கவனஞ் செலுத்தாது, கொண்டவர்களின் பேச்சிலே கொள்கைகளைக் கண்டறிந்து வாழ வழி காண இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இலங்கைத் தொழிலாளர் கழகம் அழைக்கிறது. மலையகத்துப் பெருங்குடி மக்களே! மாசற்ற நெஞ்சோடு வாருங்கள், மாற்றார்கள் அழுக்கு நெஞ்சத்தோடு பேசும் வார்த்தைகளை நம்பி அழிந்து படாதீர்!

இனம் இனத்தோடு
சேர்ந்து இன்புற்று வாழ்
வதே அல்லால்
இப்புவியில் வேறொன்
றில்லை என்று
எண்ணியே வாழ்க!!

## தேநீர்க்கடை திறப்புக்கு தமிழ் மறைக் கழகம் பாராட்டு

மானிப்பாயிலுள்ள தேநீர்க் கடைகளில் தீண்டாமை ஒழிப்பினை நிறைவேற்றிச் சிறுபான்மைத் தமிழருக்குச் சமத்துவம் நல்கிய பெரும் பணியினைச் செய்த உடுவில் மக்கள் முன்னேற்ற மன்றத்தினருக்கும் அப்பணியினை முன்னின்று நடத்திய திரு. சி. கதிரவேற்பிள்ளை, செனேற்றர் நல்லையா ஆகிய பெருமக்களுக்கும் தமிழ் பேசும் மக்கள் பெரிதும் கடமைப்பட்டுளர். இப்பெருந் தொண்டர்களுக்கு எமது தமிழ் மறைக் கழகத்தின் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இவ்வாறு தீண்டாமை ஒழிப்பில் ஈடுபட்டுழைக்கும் தொண்டர்களைப் பாராட்டி ஓர் தீர்மானத்தை தமிழ் மறைக் கழகம் நிறைவேற்றியுள்ளது.

எமது தமிழ்மறைக் கழகத்தின் குறிக்கோள்களுள் ஒன்று தீண்டாமை பாராட்டுதலை ஒழித்தலாகும். இதுவே தலையான குறிக்கோள் எனவும் கூறலாம். நம்மக்கள் அறியாமையாலும், ஆணவத்தாலும், அதிகார ஆசையாலும் சாதி வேற்றுமைகளைப் பாராட்டித் தீண்டாமையைப் போற்றி நம் இனத்தின் வாழ்வைப் பாழாக்கி வந்தமையைக் கண்டு துடிதுடித்தே இச்சமுதாயக் கொடுமைகளை நீக்குதற்குத் திருக்குறளின் கருத்துக்களை மக்கள் உள்ளத்திற் பதிக்க எண்ணிப் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன் தமிழ் மறைக் கழகத்தை நிறுவினோம்; ஒல்லும் வகையால் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரஞ் செய்தோம். இப்பொழுது மக்களிடையே நல்லுணர்வும் நற்பண்பும் மலர்ந்து பொலிந்து விளங்குகின்றன என்பதற்கு மானிப்பாயிலுள்ள பல தேநீர்க் கடைகள் சிறுபான்மைத் தமிழருக்குச் சமத்துவம் கொடுக்க முன்வந்தமையே சான்றாகும். இக்கடைகளின் உரிமையாளருக்கும் எங்கள் கழகத்தின் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## திரு. நடேசனுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும், வெளியார்களுக்குப் பதவிகளை வழங்கக் கூடாதென சில எம். பிகள் பிரதமரிடம் திட்டவட்டமாகத் தெரிவிப்பார்களென்றும் கூறப்படுகிறது.

கட்சியில் உறுப்பினரல்லாதோருக்கு மந்திரிப் பதவி வழங்குவதை உதவி மந்திரி திரு. டி. பி. தென்னகோன் அண்மையில் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

ஆகவே திரு. ஏ. பி. பெரேராவுக்கும், திரு. நடேசனுக்கும் மந்திரி சபையில் பதவி கிடைக்கும் சந்தர்ப்பம் மிகவும் குறைந்துவிட்டதென்று அவ்தானிகள் கூறுகின்றனர்.

அடுத்த வாரம் நடைபெறும் அரசாங்கப் பாராளுமன்றக் குழுவின் கூட்டத்தில் அடுத்த பட்ஜெட்பற்றியும் சிம்மாசனப் பிரசங்கம் பற்றியும் கடுமையான விவாதம் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தபால்கார்டு, முத்திரைக் கட்டணம் உயர்த்தப்பட விருப்பதையும், உப உணவுப் பொருட்களின் விலைவாசிகளை உயர்த்த இருப்பதையும் [illegible] மையாக எதிர்க்கக் கூடுமெனவும் அறியப்படுகிறது.

## செல்வாக்குத் தேடிப்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த சின்னங்கள். தேசியப் பண்பாட்டின் வளர்ச்சியிலே அக்கறை காட்டப் புறப்பட்ட மார்க்சீய "தோழர்களின்" கூட்டத்திலே வைக்கப்பட்டிருந்தவை பௌத்த ஆலவட்டங்கள், கொடிகள், மற்றும் தென்னங்கீற்றினாலான பௌத்த சின்னங்கள்! தேசியப் பண்பாடு என்பது பௌத்த பண்பாடா? இந்த நாட்டின் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஏனைய சிறுபான்மையினர் தமது பங்கைச் செலுத்தவில்லையா?

அமெரிக்கத் தொழிலாளர் உலகத் தொழிலாளருக்கு அளித்த பெருநாளான மே நாள் குறிப்பிட்ட இனத்துக்கோ கட்சிக்கோ தனியுடமையானது அல்ல. தொழிலாளர் பேரணி அமைத்து விழாக் கொண்டாடப் புறப்பட்ட தோழர்கள் இந்நாட்டின் தொழிலாளர்களில் பெரும் பகுதியினரான மலை நாட்டுத் தொழிலாளரைத் தங்கள் விழாவுக்கு அழைக்க மறுத்தனர். சரியாகவோ பிழையாகவோ மிகப் பெரும்பான்மையான மலைநாட்டுத் தொழிலாளர்கள் வெவ்வேறு முகாம்களிலே இருக்கின்றனர். ஆனாலும் தங்கள் மே விழாவிலே கலந்துகொள்ள இவர்களை அழைக்க மறுத்தனர், இந்தப் பாட்டாளிகளின் கூட்டாளிகள். இந்த நிகழ்ச்சி காங்கிரஸ் சார்பான மலைநாட்டுத் தொழிலாளருக்கு ஒரு உண்மையை விளக்கும் என்றே நம்புகிறோம். எந்தச் சிங்களத் தலைவரும் அவர்களை மதிக்க மாட்டார்கள். இன அடிப்படையிலே ஒன்று திரண்டு உரிமைப் போரிட்டாலன்றி அவர்களுக்கு விடிவு இல்லை.

சமீபத்தில் "டைம்ஸ் ஒப் சிலோன்" பத்திரிகையில் ஜனநாயக கட்சிகளின் கூட்டணி வேண்டும் என்ற தலைப்பில் ஒரு தொடர் கட்டுரையை காலஞ் சென்ற திரு. பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் நிதி அமைச்சராகவிருந்த திரு. ஸ்டான்லி டீ சொய்சா எழுதியிருந்தார். பண்டா — செல்வா ஒப்பந்தம் உருவாவதற்கு இவர் முயற்சியே பெரும் காரணம். அவர் இப்பொழுது எழுதியிருக்கும் கட்டுரையில் தமது மந்திரி சகா திரு. பிலிப், பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைக்கு வராது தடுக்க எடுத்த முயற்சிகளை விளக்கியுள்ளார். இப்பேர்ப்பட்ட வகுப்பு வெறியரான திரு. பிலிப் குணவர்த்தனவின் தலைமையில் தான்—அவருக்கு வேண்டுமளவு விட்டுக்கொடுத்து, இடதுசாரி ஐக்கிய முன்னணி உருவாக்கியுள்ளார்கள் "தோழர்கள்". அவர்கள் மொழிப்பிரச்சினையிலும், இதர சிறுபான்மையோர் பிரச்சினையிலும் மௌனம் சாதித்துக் கொண்டும் திரு. பிலிப் குணவர்த்தனவின் வெறியாட்டத்துக்கு விட்டுக் கொடுத்துக் கொண்டும் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றி விடலாம் என்று நினைத்தால் முடிவில் ஏமாறப் போவது அவர்களேயன்றி தமிழ் பேசும் மக்கள் அல்லர் என்பதை நினைவில் நிறுத்தி வைத்தால் பயனுண்டு.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் நடைபெற்ற ஐக்கிய மே தின விழாக்களின் விமர்சனம் அடுத்த வாரம் வெளிவரும்.

## சந்திக்கு வந்தவை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தும் வகையில் அந்த[illegible] படலமிருப்பதால், அப்ப[illegible]லத்தை அகற்றிவிட வேண்[illegible]மென்று தான் சிபார்சு செ[illegible]துள்ளாராம்.

கல்வியிலாகாவில் இருந்[illegible] கொண்டு கயமைத்தன[illegible] புரியும் கண்ணியமற்ற க[illegible]மையாளர்கள் நீடித்தா[illegible] மாணவர்களின் மாண்[illegible] கெட்டுவிடும். இனிமேல[illegible]வது இத்தகைய தன்னல[illegible]துக்காகத் தாயையே பழி[illegible]க்கத்தயங்காதவர்களை பொ[illegible] நிகழ்ச்சிகளெதற்கு[illegible] அழைக்காதிருக்கும்ப[illegible] கோருகிறோம்.


ப்ரம்மீ கேசரஞ்சன தைலம்



கண்ரூடு, கண் எரிச்சல், தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, தும்மல், முடி விழுதல், நரையுண்டாகுதல், முதலிய வியாதிகளை நீக்கி தலைமயிர் அழகான கருநிறத்தில் இடநெருக்கமாக வளரச்செய்கிறது. அகாலத்திலுண்டாகும் நரை மயிரை முன்போல் கறுப்பு நிறமாக மாற்றுகிறது இந்தத் தைலம் தொடர்ந்து பாவித்து வந்தால் 100வயதானாலும் "நரையும்" "வழுக்கையும்" உண்டாகாது நாரீமணிகள் செயற்கை முடிகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது.

A 6 அவுன்ஸ் போ 3-50

அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்
இந்த விசேஷத் தயாரிப்பிலும், மேலே சொன்ன எல்லாக் குணங்களும் அதேபடி அமைந்திருக்கிறது கூடுதலான நரைமயிரை விரைவில் கருநிறமாக்கி வளரச்செய்யும்படி, சக்திவாய்ந்த திவ்விய மூலிகைகளை பிரத்தியேகம் சோத்திருப்பதே இதன் முக்கியத்துவம்.

B 6 அவுன்ஸ் போ: [illegible]

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்.

1. ஸி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.

எஸ். என். குரு மெடிக்கல் ஹோல்
80 புதுச் செட்டித் தெரு
கொழும்பு 13.



கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்பரேசன்,
14, டாம் வீதி, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர் பத்து
## ஒருத்தி இன்னொருத்தி

சொற்கள் வெறும் ஒலிக் கூட்டமென்று இலக்கண ஆசிரியர்களும், ஒலியியல் அறிஞர்களும் விளக்கம் தருவது தர்க்கரீதியாக சரியானதாக இருக்கலாம். ஆனல் உண்மையில் யதார்த்த பூர்வமக நோக்குகையில் சொற்களின் வலிமையோ மிகப் பெரியது. சொற்கள் ஒலிக் கூட்டமாயினும் அதன் ஒவ்வொரு அலேயிலும் ஒவ்வொரு உணர்ச்சிச் சுழிப்புகள்...ஜீவநாதம்... வீணையின் சுருதிலயம் எல்லாமே கலந்திருக்கின்றன. இதனுற்ருன் சொல் ஒவ்வொன்றும் உயிர் பெறுகையில், இன்னேர் உயிரின் உயிரையும் உணர்ச்சியையும் சுண்டி இழுக்கிறது...இல்லாவிட்டால் ராஜகோபாலின் · ஒலியின்முன் எப்படி அவர்களால் ஸ்தம்பித்துப் போய், அமைதியாக நிற்க முடியும்...

அவன் குரல் கூடத்தை நிறைக்கிறது! எல்லாரும் சப்த நாடிகளும் அடங்கியவர்களாக...

'நீ கட்டாயம் கல்யாணம் செய்யத்தான் வேண்டும்!'

—நடராசா திரும்பித் தம்பியைப்பார்க்கிருன். அந்தப் பார்வையில்தான் எத்தனை உணர்வலேகள் மோதுகின்றன...

அங்கு நிலவும் அமைதி, ராஜாவை திணறடிப்பதோடு, பயங்காட்டுகிறது!

'என்ன காரியம் செய்துவிட்'டேன்...அண்ணன் முன் நின்று அவன் கல்யாணத்தைப் பற்றியே பேசி 'கல்யாண்ம் செய்' என்று ஆணையிட எனக்கு இவ்வளவு துணிச்சல் எங்கிருந்து வந்தது?...என் மரியாதை எல்லாவற்றையும் காற்றிலே பறக்கவிட்டு விட்டேனு?...'

'தம்பி! ஏன் பேசாம நிக்கிருய்...நான் ஏன்...என்ர கல்யாணத்துக்கு என்ன இப்ப அவசரம்...' — வைரத்தைக் கொண்டே வைரத்தை வெட்டுதல் போல, அமைதியாக ஒலித்து, அமைதியைக் கீறிக் கிழிக்கிறது அவன் குரல்!

'...வந்து என்னே மன்னிச்சுடு அண்ணே!...என்னபேசுவதெண்டு தெரியாமப் பேசிவிட்டேன்!...'

'...ம்... பரவாயில்லேயடா, தம்பி!...இதில் உனக்கில்லாத அக்கறையா?...நீ தாராளமாக உன்ர அபிப்பிராயத்தைச்சொல்...இதில் எல்லாம் அண்ணன் தம்பி; மகன் தந்தை; என்றெல்லாம் ஒளிக்கக் கூடாது... இது வாழ்க்கைப் பிரச்சினே பார்...நாளேக்கு இந்த விசயம் என்னே மட்டும் பாதிக்கப் போவதில்லே...உன்னே... ஆச்சியை......எங்கட குடும்பத்தையே பாதிக்கிற விசயம்...நீ பயப்படாம சொல்லடா!...'



தொடர் கதை

# நிழல்கள்

செங்கைஆழியான்-செம்பியன்செல்வன் கூட்டாக எழுதும் தொடர் கதை

—ராஜா அண்ணனே வியப்புடன் பார்க்கிருன். 'அண்ணு இப்படியெல்லாம் வாழ்வின் பிரச்சினேயை— சிக்கலான நூல்கண்டு அம்சத்தை அழகாக சிக்கெடுக்கிருன்?...

'இல்லேயண்ணு...நீ கட்டாயம் கல்யாணம் செய்யிறதுதான் எனக்கு நல்லதாப் படுது!...'

'ஏன்ரா!...இப்போது கல்யாணத்துக்கு என்ன அவசரம் வந்திட்டுது?'

'உந்தக் கேள்வியை நானும் திருப்பிக் கேக்கலாமண்ணு! இப்ப நீ ஏன் கல்யாணம் செய்யக் கூடாது... செய்யிறதில உனக்கென்ன வந்திட்டுது? என்ன சின்னரம்மான் நீங்க சும்மா இருக்கிறீங்க பேசாம'...என்று, வெளியே வெற்றிலேயைத் துப்பிவிட்டு வந்த சின்னரை துணேக்கழைக்கிருன் ராஜா.

'ஓமோம்! தம்பி சொல்லறதும் ஞாயம் தானே' இப்ப நீயேன் கல்யாணம் வேண்டாமெங்கிருய்?...'—சின்னர் வெற்றிலேத் தட்டத்தை அருகிழுத்து, மீண்டும் வெற்றிலே போட ஆரம்பிக்கிருர்...

'எணே இதென்ன கச்சப் போயிலேயாக்கிடக்கு...வேற நல்ல போயிலேயா இருந்தா தாணே!'—என்கிருர் ஆச்சியைப் பாத்து சின்னர். ஆச்சி உள்ளே புகையிலே எடுக்கச் செல்கிருள்...

'அதுதான் நான் சொன்னனே முதலில...நான் போராட்டத்தில பங்கு கொள்ளப் போறனெண்டு!'

'அதுக்கு மிதுக்கும் என்ன தம்பி சம்மந்தம்...நீ கல்யாணத்தைப் பண்ணிப் போட்டு... போராட்டத்தில் பங்குபற்றன் யார் வேண்டாமெண்டிச்சினம்!'

'இல்லேயம்மான்! கல்யாணம் பண்ணிணு முழுமனதோட பங்குபற்றேலாது அதுதான் ...!'—அப்போது தான் வீட்டுக்குள்ளிருந்து வரும் ஆச்சியின் காதில் 'போராட்டத்தில பங்கு பற்றப் போறன்!' என்ற நடராசாவின் குரல் விழுகிறது...

## செம்பியன்செல்வன்

'என்னபோராட்டமோ?... ஏண்டா உனக்கு இந்தக் கஷ்டமெல்லாம்... முந்தியும் இப்படித்தானே ஏதோ சத்தியாக்கிரகம் எண்டு சொல்லிக் கொண்டு போன கந்தசாமி வாத்தியார் உதைபட்டு கால், கை யெல்லாம் முறிச்சுக்கொண்டு வந்தவர் அவரைப்போல நீயும் அடி, உதைபட்டு சாகப் போறியே...அவங்களுக்கெண்டாலும் ஏதும் நடந்துட்டுதெண்டா, இனம் சனமெண்டு நாலு பேர் பாக்க இருக்கினம்...உனக்கு யாரிருக்கினம்...? நான்தானே எல்லாம் பாக்கோணும்... இந்தத் தள்ளாத வயதிலே ஏண்டா என்னேச் சித்திரவதை செய்யிருய்?...' என்று கூறும் ஆச்சியின் கண்களில் திரண்டு, வற்றிச் சுருங்கிய கன்னங்களில் வாய்க்கால் கிழிப்பது என்ன?...

'என்னுச்சி இப்படிச் சொல்லுருய்?...கந்தசாமி வாத்தியாருக்கு இப்ப எவ்வளவு மரியாதை தெரியுமா? தெருவில எல்லாரும் ... அவருக்கு கனம் பண்ணுத ஆக்களில்லே. அவரைப்போல ஒராளிருந்தா மட்டும் போதாதணே ... அவரைப் போல எல்லாரும் இருக்கோணும்!...அப்படி இருந்திட்டா...நாங்க எப்பவோ எங்கட போராட்டத்தில வெற்றி பெற்றிருப்போம்!... ஆச்சி!நான் என்ரைஉயிரைக் கொடுத்தாவது......நாட்டுக்காக...எங்கட இனத்துக்காக பாடுபடுவன் ஆச்சி!' என்கிருன் நடராசா!

ஆச்சி பிரமையடைந்தவளாக...

'என்ன தம்பி, நடராசா! என்னமோ கதைக்கப்போய் ...என்னமோ கதைக்கிருயே?' என்று சின்னர் சமாளிக்க...

ராஜா உணர்வின் விளிம்பிலே நிற்கிருன்:

'அண்ணு!...அண்ணு உனக்கிப்படி ஒரு தேசாபிமானம் ...நாட்டுப் பற்று...மொழிப் பற்று...சுதந்திர வேட்கை இருக்குமென நான் நினேக்கவேயில்லேயண்ணு!... உண்மையிலே உன் நெஞ்சம் மிக உயர்ந்தது. அது வாழட்டும். நீ வீட்டிலே செய்யும் தியாகம் கொஞ்ச நெஞ்சமா?... எனக்காக ஆச்சிக்காக உன் உடலேயே உருக்குலேக்கிருய். இப்போ நாட்டுக்காக இனத்துக்காக உயிரையும் விட தயாராக முன்நிற்கிருய்... நீ தியாகி அண்ணு! உன்னே அண்ணுகப்பெறநான் எவ்வளவு பாக்கியம் செய்திருக்க வேண்டும்!

'அண்ணனே இப்படியே விட்டு விடுவதா?......அவன் புகழ் சந்ததி மங்காது காப்பாற்ற ஒரு வம்ச விளக்கு வேண்டாமா?...ஒருவன் எவ்வளவுதான் சிறந்து விளங்கினுலும் அவன் மணமானவனுகாவிட்டால் அவன் வாழ்வு பூரணத்துவமடைவதேயில்லேயே! அப்படி அவன் பூரணத்துவமடைந்தாலும் உலகம் அந்த பூரணத்துவத்தை ஏற்றுக் கொள்வதில்லேயே!'

ராஜா அண்ணனின் உணர்ச்சி நிலேயை மாற்ற எண்ணி பேச்சின் பாதையை மாற்றுகிருன்!

'அண்ணு!'

'என்ன?''

'ஆச்சியை நீ கவனிச்சியா?'

'என்னடா, ஆச்சிக்கு?... என்ன நடந்தது?' — என்று பதறிப்போய்க் கேட்கிருன்.

'இப்ப ஒண்டும் ஆச்சிக்கு நடக்கேல்ல ... ஆனு... ஆச்சியின்ற தள்ளாமையைக் கவனித்தாயா? வரவர அவ வேலேயால தேய்ஞ்சு போருஒரு பொருளே ஒருடத்தில வைச்செடுக்க எவ்வளவு கஷ்டப்படுரு!அவ எவ்வளவு நாளேக்கெண்டுதான் எங்களுக்காக இப்படி உழைக்கிறது...அவவுக்கு ஓய்வு வேண்டாமா? இதோ பாரன் நீ எவ்வளவு நேரம் கழித்து வந்து நிக்கிருய்...கூட்டம், அது...இது எண்டு சாட்டுச் சொல்லுருய்......சில நேரம் நீ வர நடுச்சாமமாகி விடுகிறது!...அதுவரைக்கும் ஆச்சி படுக்கையில நித்திரை கொள்ளாமல்...அடிக்கடி விளக்கேற்றி உன்னேயே பார்த்துக் கொண்டு விழிச்சிருக்கிரு... இதை யெல்லாம் நீ உணர்ந்தியா? இதுக்கெல்லாம் நீ ஒரு கலியாணத்தை கட்டிக் கொண்டியெண்டா எப்பவேண்டு மெண்டாலும் வீட்டுக்கும் வரலாம்.'

நடராசா'கடகட'வென்று சிரிக்கிருன்.

'ஆச்சிக்கு வேலே கஷ்டமா இருந்தா ஒரு 'வேலேக்காரப் பொடிச்சி'யை வேலேக்கு கொண்டு வந்தாப்போய்ச்சு நாளேக்கே நான் ஒரு வேலேக்காரப் பொடிச்சியை கொண்டு வாரேனே!...இதுக்குத்தானு இவ்வளவு ஆர்ப்பாட்டமெல்லாம்'.

'போதும் அண்ணு! வேலேக்கு வார பொடிச்சியளேப் பற்றி எனக்குத் தெரியாததாக்கும்...எல்லாத்துக்கும் திருட்டுக் குணம்...அதுவும் ரெண்டு நாளில வீட்டுச் சாப்பாடு பிடிபட்டுப்போனு ...அந்தத் திமிரில ஏதேதோ செய்ய முற்பட்டு விடுதுகள் ...அதுசரி பொடிச்சி வந்தாப் போல ஆச்சியின்ர ஆசை நிறைவேறிடுமா என்ன?'

'ஆச்சிக்கு ஆசையாடா, என்னடா அது?...எனக்குத் தெரியாதே!' என்கிருன் நடராசா ஆச்சரியத்துடன்!

ஆச்சிக்கு ஆசை, ஒரு சொந்த விருப்பம் இருந்ததாக இருவரும் என்றுமே உணர்ந்ததில்லே. ஆச்சி ஒன்றை விரும்பியதாக காட்டியதேயில்லே. அவள் விரும்பியதெல்லாம் அவ்விருவரின் நல்வாழ்வு ஒன்றுதான். அவள் அந்த இரு ஜீவன்களுக்காக உழைத்துவரும் 'கர்ம ஜீவன்' தியாகஸ்தம்பம். அதுதான் ஆச்சிக்கு ஆசை யென்றதும் அவனுல் ஆச்சரியப்படாமலிருக்க முடியவில்லே.

'உன்னேக் கல்யாணக் கோலத்தல பாக்க ஆசைப்படுரு அண்ணு! அதோட நானும் எனக்கொரு அண்ணி வரவேண்டும். நானும் வாய் நிறைய 'அண்ணி, அண்ணி யெண்டு அழைக்க வேண்டும்...என்ர அண்ணியை என் நண்பர்களேயெல்லாம் கூட்டிவந்து 'இவதான் என் அண்ணி!' என்று காட்டி மகிழவேண்டும்! என்றெல்லாம் விரும்புகிறேன் அண்ணு!' என்று உணர்ச்சி வழியப் பேசுகிருன் ராஜா!

அவன் ஆசையில், நடராசாவின் மனம் கனிந்து உருகுகிறது.

'தம்பி உன் ஆசைக்கா... ஆச்சியின் ஆவலுக்காக வாவது நான் திருமணம் செய்யத்தான் விரும்புகிறனடா ஆனல்...'

'தம்பி! நான் என்ன செய்வேனடா எனக்குக் கல்யாண ஆசையே இல்லாது போய்விட்டதடா! எப்ப எனக்கு கனகம் துரோகமிழைத்தாளோ அப்பவே எனக்கு ஆசையே செத்துவிட்டதடா! இப்ப எனக்கு பெண்களேக் காணவே வெறுப்பாக இருக்குதடா!... எல்லாருமே துரோகச் சின்னங்களாக... விஷப் பாம்புகளாகத் தானடா எனக்கு காட்சியளிக்கிருர்கள்......இந் நிலேயில் நான் கல்யாணம் செய்து சுகம் காணுவேனுடா! சொல்லடா தம்பி சொல்!'—நடராசா ஆவேசமாகப் பேசுகிருன்.

ராஜாவுக்கு யாரோ பயங்கரமாக முகத்திலறைந்தாற் போலிருக்கிறது.

கனகம்!


துரோகம்!

புவனம்!

நான்!

'அண்ணு!...அண்ணு...! ஒரு பெண் அப்படியெண்டால் எல்லாப் பெண்ணுமே அப்படியெண்டா நாம் கருதுவது?... அப்படிப் பார்க்கப் போனல்...எங்கட ஆச்சியும் ஒரு பெண்தான் அண்ணு! பெண்தான்!... நீ உன் தவருன எண்ணத்தை மாற்றிக் கொள்!... கனகம் உனக்கு செய்த துரோகத்தின் கறையைப் போக்கவாவது நீ கல்யாணம் செய்துதான் தீர வேண்டும்!......இல்லாவிட்டால் நீ செய்யும் தியாகம் எல்லாமே அப்பட்டமான சுயநலத்திலிருந்துதான்

(13-ம் பக்கம் பார்க்க)

பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தந்தி தாமரை

3597—6522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருவி நங்கை சொன்ன கதை

## மாவெட்டவான் குளத்தின் மாண்பு கண்டோம்

### வடமுனைப் பாதையிலே வண்டிகளில் பவனி

அதிகாலையில் ஒன்றுக்குப் பின்னால் ஒன்றாக அரசாங்கத்துக்குச் சொந்தமான பல 'ஜீப்' வண்டிகள் செங்கலடியிலுள்ள திரு. மாணிக்கவாசகர் அவர்களுடைய வீட்டிலிருந்து புறப்பட்டு திருமலை வீதியிலே பறந்து சென்று கொண்டிருந்தன. ஏறுவூர் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. செல்வராஜா செலுத்திக் கொண்டு சென்ற 'ஜீப்' வண்டிக்குள் பொலீஸ் உதவி அதிகாரி ஜனாப் அஸீஸ் அவர்களுடன் திரு. மாணிக்கவாசகரும் அமர்ந்திருந்தார்.

தெருக்களில் நின்று கொண்டிருந்த கல்குடாத் தொகுதி மக்கள், தங்கள் நன்மதிப்புக்குப் பாத்திரமான தங்கள் பிரதிநிதியை பொலீசாரும், வேறு அரசாங்க அதிகாரிகளும் மீண்டும் தடுப்புக் காவலுக்குக் கொண்டு செல்லுகின்றார்களோ என்று பயந்திருக்கலாம். அவர்களுடைய முகங்களில் ஏற்பட்ட கவலைக் குறிகள் இதை வெளியிட்டன.

(அப்பொழுதுதான் கல்குடாத் தொகுதியிலும் தமிழியக்கம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆகவே அப்பாவி மக்களான அவர்கள் இப்படி எண்ணியிருந்திருக்கலாமல்லவா?).

கிரான்துறை வரை ஓரளவு பாதை நன்றாகவிருந்தது. சுமார் 2 பர்லாங் அகலமான வாவியைக் கடப்பதற்கு 'பாதை' இருந்தது. ஒரே தடவையில் 2 'ஜீப்' வண்டிகள் மட்டும்தான் பாதையில் ஏற்ற முடியும். ஆமை வேகத்தில் இப்பாதை நகர்ந்து ஒன்றரை மணி நேரத்தில் 'ஜீப்' வண்டிகளை அக்கரை கொண்டு போய்ச் சேர்த்தது.

செல்லுகின்ற பாதையின் விபரங்களை விபரிப்பதற்காக அரசாங்க அதிபர் திரு. லுடுக்கின்ஸ் திரு. மாணிக்கவாசகரைத் தமது வண்டிக்குள் அழைத்துக் கொண்டார். அப்பகுதி விவசாயிகள் அனுபவிக்கும் துன்பங்களை ஒவ்வொன்றாக விளக்கிக் கொண்டே சென்றார். மேடும் பள்ளமும்சேறும் சகதியும், புழுதியும் நிறைந்த பாதையினூடாக வண்டிகள் சென்றுகொண்டிருந்தன. இரு மருங்கும் அடர்ந்த காடுகள். சித்திரை மாத வெய்யிலிருந்தும் காட்டினூடாகச் சென்றுகொண்டிருந்த பாதை இருள் சூழ்ந்திருந்தது.

துறையைக் கடந்து இரண்டு மைல் சென்றதும் சில குடிசைகள் தென்பட்டன. புலி பாய்ந்த கல் என்னும் அந்த இடத்திலிருந்து எங்கள் பாதை இடது பக்கமாகத் திரும்பியது. பாதையில் இதுவரை அடிக்கடி மக்களைக் காணமுடிந்தது. இப்பொழுது பாதையில் சன நடமாட்டமே தென்படவில்லை. ஆங்காங்கே சிறு சிறு *வாடிகள் மட்டும் தென்பட்டன.

#### கரவையில் காலை உணவு

புலிபாய்ந்த கல்லிலிருந்து 6வது மைலில் எங்களை எதிர்கொண்டழைக்கப் பலர் காத்துக்கொண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது. 'ஜீப்' வண்டிகள் நிறுத்தப்பட்டன. யாவரும் இறங்கிக் கொண்டு

* வாடி:- குடி மக்கள் அதிகமில்லாத பகுதிகளிலே விவசாயம் செய்வோர் வயல்களிலே தங்குவதற்காக அமைத்துக் கொள்ளும் தற்காலிக இடம்.



திரு பொ. மாணிக்கவாசகர்

கால்நடையாக அரை மைல் தூரம் காட்டிற்குள் சென்றோம். கல்குடாத் தொகுதியைச் சேர்ந்த முறக்கொட்டாஞ்சேனை கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அங்கு குழுமியிருந்தனர். அருகே கரவைக்குளம் தென்பட்டது. இக்குளமும் சிறிது காலத்

### காடு வெட்டுவோம் கழனி சமைப்போம்

துக்கு முன்னர்தான் இரண்டு லட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டதாம். குளத்திற்குள் தென்பட்ட மரங்கள் இன்னும் அழியவில்லை.

இக்குளத்தின் அணைக்கட்டு போதுமான அகலமுடையதாக இல்லாதிருப்பதனால் நீர்த்தேக்கம் திருப்திகரமாகவில்லை. மேற்கொண்டும் வேலைகள் நடைபெறவுள்ளன. 400 ஏக்கர் காணி பெற்ற முறக்கொட்டாஞ்சேனை வாசிகள் பலர், முதன் முதலாக முன் மாரி போகம் செய்து நல்ல பலனும் கண்டுள்ளனர். கரவைக் குளத்தருகில் பசுமைச் சூழலில் அழகான வாடி ஒன்றினை அமைத்திருந்தார்கள். அங்குதான் காலை உணவு எங்கள் அனைவருக்கும் பரிமாறப்பட்டது. வசதிகளற்ற பகுதியில் அத்தகைய சுவையான உணவுகளை எப்படித்தான் தயாரித்தார்களோ என்று வியந்தோம். அங்கு குடியேறி விவசாயம் செய்யும் மக்களுக்கு வன விலங்குகளான யானை, சிறுத்தை, பன்றி முதலியவற்றால் ஏற்படும் துன்பங்களையும், வேறு பல காரணங்களினால் உண்டாகும் தீமைகளையும் அரசாங்க அதிபரிடமும், அதிகாரிகளிடமும் விபரித்தார்கள். தங்களது தேவைகளை இட்டும் கூறினார்கள்.

கரவைக்குளத்தடியில் கிடைத்த காலை உணவு காய்ந்திருந்த எங்கள் வயிறுகளை நிரப்பி உற்சாகத்தையும் தென்பையும் அளித்தது. உணவளித்த உத்தமர்க்கு நன்றி கூறிவிட்டு, புறப்பட்டோம்.

#### அளவுக்கு மிஞ்சினால்...

கல்குடா தொகுதிக்கான தொகுதிப் பண்ணையும் அங்கேதான் இருந்தது. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்' என்று ஒரு பழமொழி உண்டல்லவா? இம்மொழி பொய்யாதிருக்க இந்தத் தொகுதிப் பண்ணை உதவுகிறது போலும். கரவைக் குளத்திலிருந்தும், தம்பியர் குளத்திலிருந்தும் இப்பகுதிக்கு தேவைக்கு அதிகமான நீர் கிடைப்பதனால்தான் பயிர் பச்சை ஊற்றுப் பிடித்து அழுகிவிடுவதாகப் பண்ணையாளர்கள் முறையிட்டனர். அருகேயுள்ள மேட்டுப் பூமியைக் குடியிருப்பு நிலமாக ஆக்குவதென்றும், பண்ணைக்கு உசிதமான வேறோர் இடத்தை ஏற்பாடு செய்வதென்றும் ஸ்தலத்திலேயே முடிவுசெய்ததும் விவசாயிகளின் முகங்கள் மலர்ந்ததை அவதானிக்க முடிந்தது.

காட்டாறுகள், மேட்டுப் பூறைகள் பலவற்றைத் தாண்டி வண்டிகள் சென்று கொண்டேயிருந்தன. தாகத்தைத் தணிக்க உதவும் பொருட்டு கொறளைப்பற்று காரியாதிகாரி திரு. பேட்றம் காசிநாதர் கொண்டுவந்திருந்த தண்ணீர் போத்தலும் காலியாகி விட்டதனால் தாகம் மேலிட ஆரம்பித்தது. உச்சி வெய்யில் கொளுத்தியது.

புதிய பாதையில் மேலும் 6 மைல் சென்றதும் கிழக்கே ஒரு சிறிய ஒற்றையடிப் பாதை செல்கிறது. இரண்டரை மைல் சென்றதும் 5000 ஏக்கருக்கு பாசன வசதி செய்யக் கூடிய புராதனக் குளமான மெய்யன் கல்லுக்குளம் இருக்கிறது. இதன் விபரம் பின்னர் கூறுவோம்.

பூமியைக் குடைந்து செல்லும் நோக்கோடு செல்வது போல் எங்கள் ஜீப் வண்டிகள் கீழிறங்கிச் சென்றன. திடீரென திரு. மாணிக்கவாசகர் வண்டிகளை நிறுத்தும்படி கூறிக்கொண்டு இறங்கி காடுகளுக்குள் புகுந்து மறைந்தார். அவரைத் தொடர்ந்து நீர்ப்பாசன அதிகாரி திரு. வேலாயுதம்பிள்ளையும் சென்றார். காரணம் தெரியாமல் அரசாங்க அதிபரும் ஏனையோரும் விழித்துக் கொண்டிருக்கும்போது, "எல்லோரும் இங்கே வாருங்கள்" என்று திரு. மாணிக்கவாசகரின் குரல் கேட்டது. குரல் வந்த திசையை நோக்கி காடுகளுக்கூடாக நாங்கள் சென்றோம்.

சல சல வென்ற ஒலி எழுப்பிக் கொண்டு, குளிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு எழிலாக ஓடி வந்தாள் சிற்றருவி நங்கை ஒருத்தி. 'வேகா வெய்யிலிருந்தும், வெந்தணலாய் நிலமிருந்தும், வெண் மதியின் தண்மை அங்கு தோன்றக் காரணம்தான் என்ன?' என்று நாங்கள் எண்ணித் திகைத்திருந்தோம். அப்பொழுது அந்நங்கையே தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

#### அருவி நங்கை சொன்ன கதை

சுதந்திரமாகச் சுற்றித் திரிந்த என்னை, பல ஆயிரம்

(13-ம் பக்கம் பார்க்க)



(1) கரவைக் குளத்தை அடுத்து விவசாயம் செய்வோர் காலை உணவளித்தார்கள். உணவளித்த உத்தமர்களுடன் திரு. மாணிக்கவாசகரும் அரசாங்க அதிகாரிகளும் காணப்படுகின்றனர்.

(2) வடமுனைக் குடியேற்றம் எப்படி அமையும் என்பதை நீர்ப்பாசன அதிகாரி திரு. வேலாயுதம் பிள்ளை அதிகாரிகளுக்கு படம் மூலம் விளக்குகிறார்.

(3) காடு வெட்டுவதற்காக தாளவாத்தியங்களை ஒலித்துக் கொண்டும், பாடல்களைப் பாடிக்கொண்டும் உற்சாகத்தோடு விவசாயப் பெரு மக்கள் முன்னேறுகின்றனர்.

(4) கோறளைப்பற்று காரியாதிகாரி திரு. காசிநாதன், திரு. வேலாயுதம்பிள்ளை, (தோளில் கோடரியுடன்),திரு. மாணிக்கவாசகர் (பின்புறமாக நிற்பவர்), அரசாங்க அதிபர் ஆகியோர் காடு வெட்டப் புறப்பட்டுள்ளனர்.

(5) வடமுனைக் குளக்கட்டில் விரைந்தோடி ஏறுகின்றனர் மக்கள்.

(6) அரசாங்க அதிபர் முதலாவது காட்டை வெட்டுகிறார்.

(7) நீர் தேங்கிநிற்கும் வடமுனைக் குளத்தை கையுயர்த்திக் காண்பிக்கிறார், திரு. மாணிக்கவாசகர். பட்டுப்போகும் நிலையிலுள்ள மரங்களையும் பார்க்கலாம்.

ஆசியாவின் ஆகச் சிறந்த சிமிந்தி

ஓனோடா

தான்




விநியோகஸ்தர்கள்:

சென்ற் அந்தனீஸ்

ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,

516, ஸ்கின்னர்ஸ் ரேட் தெற்கு,

கொழும்பு-10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதகை மண்டலத்தில் நட்சத்திரக் குவியல்

## தமிழ்நாட்டு ஸ்டுடியோக்கள் தூங்கி வழிகின்றன

தமிழ் நாட்டில் வெய்யில் கொடுமை தாங்க முடியாத காரணத்தினால் சினிமா உலகப் பிரமுகர்களும், நட்சத்திரங்களும் குளிர்ச்சி தேடிப் புறப்பட்டுவிட்டதனால் சென்னை ஸ்டுடியோக்கள் களை இழந்திருக்கின்றன. ஊட்டியிலே எல்லோரும் சென்று முகாமிட்டுவிட்டார்கள்.

முன்புள்ள காலங்களில் ஒரு சிலர் மட்டும்தான் கோடை காலத்தில் ஊட்டி செல்வது வழக்கம். இம்முறை பெரிய சிறிய நட்சத்திரங்கள் யாவருமே கோடைக்குப் பயந்து குடி பெயர்ந்துவிட்டார்கள்.

இந்த வேளையை நன்கு பயன்படுத்த ஒருசில படாதிபதிகள் தயங்கவில்லை. தங்கள் படங்களுக்கான வெளிப்புறக் காட்சிகளை ஊட்டி, மைசூர் ஆகிய பகுதிகளில் படமாக்கத் திட்டமிட்டு அவற்றுக்கான முன்னேற்பாடுகளை முன்கூட்டியே பூர்த்தி செய்துகொண்டனர்.

சிவாஜிகணேசன் டைரக்ட் செய்யும் சிவாஜி பிலிம்சாரின் 'புதிய பறவை' என்ற படத்தை ஈஸ்ட்மென் கலரில் தயாரிக்கின்றனர். இப்படத்தில் நடிகர் திலகத்துடன் சரோஜாதேவியும் நடிக்கிறார். வெளிப்புறக் காட்சிகளை உதகை மண்டலத்தின் குளிர்ச்சி பொருந்திய அழகிய சோலைகளுள் படமாக்க முனைந்துள்ளனர்.

### சென்னை நிருபர்

கவிஞர் கண்ணதாசன் கதை வசனம் பாடல்கள் எழுதிய 'ரத்ததிலகம்' படத்தின் வெளிப்புறக் காட்சிகளும் உதகையில் படமாக்கப்படுகின்றன. சிவாஜிகணேசனும் சாவித்திரியும் தோன்றும் காட்சிகள் இடம்பெறுகின்றன.

சீனத் துருப்புக்கள்

இந்திய சீன எல்லைப்பிரதேசத்தில் இந்திய ராணுவ வீரன் ஒருவனைச் சீனத் துருப்புக்கள் கைது செய்வதைப் போன்ற காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. சீனத் துருப்புகளாக நடிக்க 'கூர்க்கா' இனத்தைச் சேர்ந்தவர்கள் (சீனர்களின் முகச்சாயலை உடைய 'கூர்க்' என்ற வடநாட்டைச் சேர்ந்தவர்கள்) பலர் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஜூலை மாத இறுதிவரை சென்னையில் சினிமாப்படப் பிடிப்பில் மந்த நிலை இருக்குமென்றே நம்பப்படுகிறது.

### இசை நடனக் கல்லூரி ஆரம்பக் கூட்டம்

'கலையரங்கம்' என்ற பெயரில் புதிதாக ஒரு இசை நடனக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த பல கலை அன்பர்கள் சேர்ந்து இக் கல்லூரியைத் தோற்றுவித்துள்ளனர். கல்லூரியை இயக்குவதற்கு ஒரு செயற்குழுவையும் அமைத்துள்ளனர்.

இச்சங்கத்தின் தலைவராக திரு. எஸ். செல்வத்துரை தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக டாக்டர் (செல்வி) அ. கணேசாள், பொருளாளராகத் திரு.எஸ். வீரகத்திப்பிள்ளை, பொறுப்பாளராக திரு. வி. எஸ். இரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர். திரு. அ. விஸ்வநாதன், செல்வி கௌரீஸ்வரி கனகரத்தினம், திருமதி அம்மணி காளிமுத்து ஆகியோர் செயற் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.




'நெஞ்சில் ஓர் ஆலய'த்தில் நெஞ்சையள்ளும் நடிப்பால் பரவசமூட்டும் தேவிகா.

### ராஜசுலோசனாவின் மறுமணம்

நமது சென்னை நிருபர் ராஜசுலோசனாவின் மறுமணம் பற்றிய விபரங்களை அடுத்த வாரம் தருகிறார்.

### சத்தியதேவியின் இசைக் கச்சேரி

கடந்த ஞாயிற்றுக்கிழமை 12-5-63 மாலை இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பில் திருமதி சத்தியதேவி மகேந்திரனின் இசைக் கச்சேரி நடைபெற்றது. பக்திப் பாடல்கள் பாடி வந்தவர் முழு நேரக் கச்சேரி செய்ய ஆரம்பித்துள்ளார். இசைத் துறையில் நல்ல எதிர்காலமிருக்கிறது என்பதில் ஐயமில்லை.



'தகூஷயக்ஞம்' என்ற படத்தில் ராமராவும் புஷ்பலதாவும் இப்படி சோடி சேர்ந்து சிரிப்பூட்டப் போகிறார்கள் என்று எதிர் பார்க்கலாம்.



இலாபம் லீபோன் நாடக மன்றத்தினர் 'சத்திய சோதனை' என்ற சிறந்த நாடகத்தினை அண்மையில் அரங்கேற்றினர். பாலஸ்தீன வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட இந்நாடகம் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் விரைவில் காண்பிக்கப்படுமென்றும், தொடர்ந்து இலங்கையின் பல பாகங்களுக்கும் கொண்டு செல்லப்படும் என்றும் தெரிகிறது. இந்நாடகத்தில் வரும் ஒரு காட்சியை இங்கே பார்க்கலாம்.

## கலைப் போர்வையில் இன ஒதுக்கல்

## செய்திப் படத்திலும் புறக்கணிப்பு

**தமிழ் சிங்களக் கலை கலாச்சாரத் தொடர்புகளை வைத்துக் கொண்டே இன வேற்றுமைகளைக் களைந்துவிடலாம் என்று பலர் மனப்பால் குடிக்கின்றனர். பெரும்பான்மை இனத்தவர்கள் சிறுபான்மை இனத்தவர்களைக் கலைத் துறையிலும் புறக்கணிக்கவே செய்வர் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் அநேகமாகக் கிடைக்கின்றன.**

இலங்கைக் கலைக் கழக சங்கீத மண்டலத்தின் ஆதரவில் அண்மையில் ஹவ்லக் நகர உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் ஒரு கலை நிகழ்ச்சி நடந்தது. செல்வி பாலசுந்தரி கனகசபையின் பரதநாட்டியமே இந்நிகழ்ச்சியில் பிரதான இடம் வகுத்தது. அவ்வண்ணமே பிரசாரம் செய்யப்பட்டதனால் பார்வையாளராகச் சென்றவர்கள் தொண்ணூறு சத விகிதமானோர் தமிழர்களே!

பரதநாட்டியக் கச்சேரியுடன் சில சிங்கள நிகழ்ச்சிகளையும் சேர்த்திருந்தனர். ஆனால் பரதநாட்டியத்தைக் காணச் சென்றவர்களே அதிகம் என்று கூறினால் மிகையாகாது.

தலைமைதாங்கிய திரு. பத்திரான என்பவர் தமது உரையை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் நிகழ்த்தினார். 'தமிழ்க்கலைகளையும், சிங்களக் கலைகளையும் வளர்க்கும் இரு கலைஞர்களையும் ஒரே மேடையிலேற்றுவதனால் பாகுபாடுகள் நீங்கிவிடும், ஒற்றுமை நிலவ வழி கிடைக்கும்' என்றெல்லாம் பேசினார்.

அவருடைய பேச்சை செவி மடுக்க மிகக் குறைந்த தொகையினரே இருந்தமையினால் விளக்கமறியாது ரசிகர்களில் பெரும்பான்மையினர் ஏமாற்றமடைந்ததுடன். பேச்சாளரே ஏமாற வேண்டியிருந்தது.

சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் சங்கீத நாட்டிய சங்கத்தின் சார்பில் திருமதி எம்.எல். வசந்தகுமாரியின் கச்சேரி நடந்தது. இதற்கு நூற்றுக்கு நூறு வீதம் தமிழர்களே சென்றிருந்தும் தலைமையுரை நிகழ்த்திய தலைவர் திரு. கணேசராசா ஆங்கிலத்தில் பேசினார். இதைப் புரியாமல் சபையோர் திண்டாட வேண்டியிருந்தது. 'சுதந்திரன்' இந் நிகழ்ச்சியைக் கண்டித்து எழுதியிருந்தது.

அப்போது சங்கீத நாட்டிய சங்கத்தின் [illegible] ராகக் கடமையாற்றிய திரு. மகாலிங்கமே தான் கலைக் கழக சங்கீத மண்டலத்தின் செயலாளராகவிருக்கிறார். தமிழராகவிருந்தும், தமிழ் மொழியைப் புறக்கணிப்பதன் மூலம், தமிழ் மக்களுக்கு ஏற்படும் அதிருப்தியையும் அவமானத்தையும் உணராதிருப்பது ஏனோ தெரியவில்லை.

### செய்திப் படம்

அண்மையில் தகவல் இலாகாவினர் இலங்கையின் கிராமிய நடனங்களையும், பாடல்களையும் தொகுத்து ஒரு செய்திப் படத்தை வர்ணப் படமாகத் தயாரித்து வெளியிட்டுள்ளனர்.

இப்படம் அனேகமாக வெளி நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படலாம். அதைப் பார்ப்பவர்கள் நிச்சயமாக இலங்கையில் பௌத்த சிங்களவர்கள் மட்டுமே குடியிருப்பதாகக் கருத இடமுண்டு. இங்கு வாழும் தமிழ் பேசும் மக்களிடம் பல்லாண்டுகளாக வளர்ந்துவரும் கிராமியக் கலைகள் இருக்கின்றன — இசையிலும், தாளத்திலும் ஈடு இணையற்றவையாகத் திகழுகின்றன என்பதை மூடி மறைத்துவிட்டார்கள். முஸ்லிம் மக்கள் பெருவாரியாக வாழும் கிழக்கு மாகாணத்தில் வழக்கிலிருந்து வரும் கிராமியக் கவிதைகளையும், நாட்டுக் கூத்துப் போன்றவற்றின் சிறு பகுதிகளையும் சேர்த்திருந்தால் செய்திப் படம் பூர்த்தியாகியிருக்கலாம். பூரணமற்றதும் ஒரே இனத்திற்கு மட்டும் சொந்தமானதுமான கலைகளை வெளிப்படுத்தத்தக்க செய்திப் படத்தை வெளியிடுவதன் மூலம் சிறுபான்மையினத்தவரை மேலும் அமுக்கி விடுகிறார்கள் என்றே கருத இடமிருக்கிறது.

கலையுணர்ச்சியினால் பேதங்களை மறந்துவிடலாம் என்று வீண்பசப்பு வார்த்தைகளைக் கூறிப் பிதற்றுபவர்கள், கலைகளிலும் இன ஒதுக்கல் நடைபெறுகின்றது என்ற உண்மையை மேற்கூறிய நிகழ்ச்சிகளினாலாவது ஒப்புக்கொள்வார்களாக.

### ஸ்ரீதர்



### மேல்நாடு செல்கிறார்

இவ் வருடம் ஜூலைமாதத்தில் சுவிட்சர்லாந்தில் சர்வதேசப் படவிழா நடைபெறுகிறது. இவ்விழாவில் திரையிடப்படுவதற்காக சென்னை சித்திராலயா ஸ்தாபனத்தின் உரிமையாளர் டைரக்டர் ஸ்ரீதர் தயாரித்த 'நெஞ்சில் ஓர் ஆலயம்' தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

தமது படம் காண்பிக்கப்படும்போது தாமும் சமுகமளிக்க வேண்டுமென்பதனால், டைரக்டர் ஸ்ரீதர் சுவிட்சர்லாந்து செல்லவிருக்கிறார். தமது தயாரிப்புப் பொறுப்பிலுள்ள படங்களின் வேலைகளைத் துரிதமாக முடித்து விட்டுப் புறப்படுவதற்காகச் சகல ஆயத்தங்களையும் ஸ்ரீதர் செய்துவருகிறார்.

### அண்ணாவின் புதிய கதை

ஒய்வொழிச்சல் இல்லாத அரசியல் சூழ் நிலையிலிருந்தாலும் அறிஞர் அண்ணாத்துரை தமது சினிமாக் கலைத் தொண்டினை மறந்து விடவில்லை. இந்திப் போராட்டத்துக்காக மும்முரமாக ஆயத்தம் செய்துகொண்டிருக்கும் போதே ஒரு படத்துக்கான முழுத்திரைக்கதை வசனங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளாராம்.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி சொந்தமாக ஒரு படத்தைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். அதற்காகவே அறிஞர் அண்ணா தமது கதையை எழுதியிருக்கிறார். மேல் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளச் சென்ற அண்ணாதுரை, டெல்லியில் வைத்தே கதை வசனத்தைப் பூர்த்தி செய்து கொண்டுவந்து திரு. இராமசாமியிடம் கொடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தோன்றியது என்று பொருளாகிவிடும்!... அண்ணு’

‘தம்பி!... நீ என்னதான் சொல்லுகிருய்?...’

‘நீ கல்யாணம் செய்ய மறுத்தால்... உன் சுயநலத்தால் ஆச்சிக்கு நீ மிகுந்த மனக்கஷ்டத்தையும்...உடல் கஷ்டத்தையும் கொடுக்கிருய் என்பதை நீ அறிவாயா?... தியாகம் ஒரு அப்பட்டமான சுயநலம் என்பதை நீ நிரூபிக்காதே அண்ணு...! நிரூபிக்காதே...!’

‘தம்பி!......என் கசந்து போன வாழ்வு ... இப்படிப்பட்ட தியாக வாழ்வில்தான் பூரணத்துவம் பெற வேண்டும்...நிறைவு காண வேண்டும்...என்னைத் தொந்தரவு செய்யாதே!... இதை விட வேறு என்னவெண்டாலும் என்னைக் கேள். நான் மறுக்கவில்லை....’

‘அண்ணு!... உன் வாழ்வு இப்படிப்பட்ட தியாக வாழ்வில்தான் பூரணத்துவம் பெறும்... நிறைவு காணும் என்று யார் உனக்கு கூறினுர்கள்?...ஒருவனுக்கு திருமணமாகும் அன்றுதான் அவன் வாழ்வு பூரணமடைகின்றது என்பது உனக்குத் தெரியுமா?...என்னதான் ஒருவன் உயர்ந்தாலும், மணமாகாவிட்டால் அது ஒரு குறைதான் அண்ணு!...’

‘தம்பி!... உன் விருப்பப்படி நான் நடக்கிறேனடா!... நீயே போய்ப் பெண்ணைப் பார்... உனக்குப் பிடித்ததென்ருல் வந்து சொல்லு!... நான் தாலி கட்டுறேன்!... உனக்கொரு அண்ணி வருவாள்!...... ஆச்சிக்கும் ஒரு பேத்தி வருவாள் ...... சரிதானே!...’ —நடராசா வேதனை உள்ளடக்கி நீறு பூத்த நெருப்பாக பேசுகிருன்.

ராஜா வேதனைச் சிரிப்பு சிரிக்கிருன்.

‘அண்ணு!......மணவாழ்வு என்பது வெறும் தாலியோடு முடிந்துவிடுவதில்லை. அது தாலியோடுதான் ஆரம்பமாகின்றது. அதற்கு அப்பால் தான் வாழ்வே ஆரம்பமாகின்றது! மண வாழ்வு மன வாழ்வில்தான் தங்கியுள்ளது. நீ தாலி கட்டி வாழும் பெண்ணேடு மனமொத்த வாழ்வு வாழ வேண்டும்... தாலி கட்டுவதோடு உன் கடமை பூர்த்தியடைகின்றது என்று நீ நினைத்தால் அது தவறு. அப்புறம் வாற பெண் கண்ணீரும் கம்பலையுடன் நடைப்பிணமாகத் திரிந்தால் அது வீட்டைச் சிறப்பிக்கும் அழகாகாது அண்ணு! குடியை நிர்மூலமாக்கும் பெருந் தீயாகிவிடும், அண்ணு!...வாழ்க்கையில் எவ்வளவோ கசப்பு, இனிப்பு நிகழ்ச்சிகள் நடக்கலாம் ... எல்லாவற்றையும் நாம் மனதிலிருத்தி சங்கடப்படக்கூடாது. கடல் நுரை போல் சிலவற்றை நாம் மறந்து விட வேண்டும்...... மறக்கமுடியாமல் வேதனைப்படுவது அறிவீனம்...பலவீனம்...வாழவேண்டிய வாழ்க்கையை நாம் விரக்தி நிலையில் கழிக்கலாமா?...’

சின்னர் வாயின் கடவாயில் துளிர்த்துவரும் வெற்றிலை எச்சிலை புறங்கையில் தடவித் துடைத்துக் கொண்டு, என்ன நடராசா!... இன்னுமென்ன யோசனை ...... தம்பியின்ர சொல்படி நடக்கிறது தான் எல்லாருக்கும் நல்லது...... ராசாவைப்போல ஒரு தம்பி கிடைக்க தவமெல்லே செய்திருக்கோணும்!... அப்ப என்ன நாம் அருளம்பலத்தாற்ர தங்கச்சியின்ரை அது தான் நம்மோடை சுத்துற அம்பலவாணற்றைமோளைப் போய்ப் பார்ப்பமே ஒரு நாளைக்கு!...’—என்கிருர்.

நடராசனுக்கு ஒரு நாள் தன்னை அம்பலவாணர் தன்ர வீட்டுக்கு வலிந்து இழுத்துப் போனதும், அங்க அவர் மகளைக் கண்டு தான் சலனப்பட்டதும், கனத்தை மனதிலிறுத்தி, அந்நினைவை துடைத் தெறிய தான் அவஸ்தைப்பட்டதும் நினைவுக்கு வருகிறது.

அவன் தலை சம்மதத்துக்கு அறிகுறியாக அசைகிறது!

ஆச்சியின் கண்கள் வெயிலெறிக்கும் போது தூறும் மழையாக பிரகாசிக்கின்றன கண்களைத் துடைத்துக் கொள்கிருள்

* * *

நடராசாவின் வீட்டு வாசலில் கார் ஒன்று காத்துக்கிடக்கிறது... அதனருகே நின்று சின்னர் அட்டகாசமாக, தனது நண்பர் ஒருவருடன் அளவளாவாகிக் கொண்டிருக்கிருர்...

‘என்ன நடராசா இன்னுமே தயாராகவில்லை... ராகு காலம் வாரதுக்கு முந்திப் போயிட்டு வர வேண்டாமே!... கெதியா வாவன்’

—நடராசா இயற்கையிலேயே நல்ல அழகன். அவன் வழக்கமாக உடையைப் பற்றிக் கவலைப்படாதவன். ஆனல் இன்றைக்கு நாஷனலும், வேட்டியும் கட்டிக் கொண்டு, கழுத்தில் பட்டுச் சால்வையுமாக வெளிவர...

ஆச்சியின் மனம் பெருமிதத்தில் விம்முகிறது.

நடராசாவும், ராஜாவும் ஆச்சியிடம் விடைபெற்றுக் கொண்டு வருகிருர்கள்...

தெருவிலே உள்ள வேலிகளுக்கு இதென்ன தலை முளைத்துவிட்டதா என்ன?... வேலி இடுக்குகளிடையே கண்களை புதைத்துவிட்டவர்கள் யார்?... வேலியோரங்களில் ‘கசமுச’ என்று பேச்சுச் சப்தம் எழுகின்றது...தெருவே அவர்களை வேடிக்கை பார்ப்பது...ராஜாவுக்கு கூச்சமாக இருக்கிறது...காரிலே ஏறப்போன ராஜா ஏனே நிமிர்ந்து கந்தையர் வீட்டைப் பார்க்கிருன். அங்கே-

வாசலில் புவனம் நின்று பார்த்துக் கொண்டிருக்கிருள். அவள் விழிகள் ராஜாவின் பார்வையுடன் முட்டி மோதி...

கார் விரைகிறது!

* * *

அம்பலவாணர் வீட்டு வாசலில் போய்க் கார் நிற்கிறது.

‘வாருங்க...வாருங்க...ஏன் இவ்வளவு நேரம் நாங்க அப்ப பிடிச்சு உங்களுக்காக காத்துக்கொண்டிருக்கிறம்..—என்று அம்பலவாணர் வரவேற்கிருர்.

வீட்டினுள்ளே அனைவரும் நுழைகிருர்கள்.

கூடத்து நடுவே ஒரு கம்பளம் ஒன்று விரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கும்பம்... பழம் பாக்கு, வெற்றிலைகளுடன் ‘எவர்சில்வர்’ தட்டம் மின்னுகிறது...

எளிமையின் அமைதி ராஜாவுக்கு பிடித்து விடுகிறது. கம்பளத்தில் எல்லாரும் அமர்கிருர்கள்...

‘இஞ்ச பாருங்க!...எங்கட பிள்ளையொண்டும் மற்ற இந்தக் காலப் பிள்ளையளைப் போலில்லை...அதுகள் வீட்டுக்கை கிடந்து வளந்ததுகள்... பள்ளிக் கூடத்துக்கு கூட நான்தான் கூட்டிக் கொண்டு போய் விட்டுட்டு கூட்டியாறனுன்... அதுவும் பெரிய பிள்ளையாஞேடை பள்ளிக்குப் போவேண்டாம் எண்டு நிறுத்திவிட்டன்... வேலை வெட்டியொண்டிலும் பிள்ளை சோடையில்லை... அவள் கைப்பட்டா எல்லாம் தங்கம்தான்!...என்ன சின்னர்! ......உங்களுக்குத் தெரியாதே!...’ —அம்பலவாணர் தன் பிள்ளைகளின் பெருமையை எடுத்துக் கூறுகிருர.

—வாய்க்குள் சீவலை அடைத்துக்கொண்டு, வெற்றிலையின் நரம்பைக் கிள்ளி, சுண்ணும்பு பூசிக்கொண்டிருக்கும் சின்னர்...’ ஓ!...ஓ!... எங்களுக்குத் தெரியாதே!... உதையெல்லாம் எங்களுக்கு ஏன் சொல்லுறீங்க!... எங்களுக்குப் பிடிச்சுத்தானே வந்திருக்கிறம்!...’—என்கிருர்.

‘எண்டாலும் நான் சொல்லவேண்டியதை சொல்லவேண்டாமோ!...’ —என்கிருர் அம்பலவாணர்.

விலைப் பொருளுக்கு விளம்பரம் வேண்டாமா?

பூக்கடைக்கே இக்காலத்தில் விளம்பரம் தேவைப்படுகிறது.

சின்னர் அளவுக்கு மீறி சுண்ணும்பைப் பூசிவிட்டார் அது வாயைப் பதம்பார்த்து விட்டது.

‘எணே பிள்ளை!...இங்க சின்னர் வாய் கொப்புளிக்க கொஞ்சம் தண்ணி கொண்டு வா!... கெதியா!...’ —என்று உள்ளே நோக்கி குரல் கொடுக்கிருர் அம்பலவாணர்.

பட்டுப் பாவாடை சரசரக்க...இரட்டைப் பின்னல் இரண்டும் முன்னே வந்து மார்பில் தவழ்ந்து விளையாட...செம்பும் கையுமாக வரும் அந்தப் பெண்ணைக் கண்டு ராஜா பிரமிக்கிருன். மற்றவர்கள் அர்த்தத்துடன் அம்பலவாணரைப் பார்க்கிருர்கள்.

‘இவதான் என்ர இரண்டாவது...கடைக்குட்டி... ஒரே குறும்பு...இப்ப இப்படி சாந்தமா இருக்கிரு எண்டு நினைக்காதேங்கோ...பள்ளிக் கூடத்தில விளையாட்டிலயெல்லாம் ‘கப்’ பெடுத்துக் கொண்டு வந்திடுவா...படிப்பில பெரிய விண்ணி!...’ —என்று அறிமுகப்படுத்துகிருர்.

அவளின் முகத்தில் ‘சிவப்பு’ எப்படிப் பூத்தது. அந்த எழிலார் கோலத்தில் ...ராஜா மெய்மறந்து அவளை விழுங்கி விடுவது போலப் பார்க்கிருன்...

‘போங்கப்பா!...... உங்களுக்கு எப்பவும் கேலிதான்!’ —என்று செல்லமாக சிணுங்கிக் கொண்டே அவள் உள்ளே ஓடுகிருள். மான் குட்டி ஓடுவது போல ராஜாவுக்கு இருக்கிறது.

‘இனியென்ன... அக்காளுக்கும் முடிஞ்சாப்போல அவளுக்கும் ஒண்டைத் தேடிப் பிடிக்கத்தான் வேண்டும்!...’ —என்கிருர் அம்பலவாணர்.

‘உங்களுக்கென்ன குறை கிளிக் குஞ்சுகளாட்டம் பெண்ணைப் பெத்து வச்சிருக்கிறீங்க...பணமில்லாமலே மாப்பிள்ளை வந்து கொத்திக் கொண்டு போகமாட்டானு என்ன?...’—என்கிருர் சின்னர்.

‘அப்படி இந்தக்காலத்தில சொல்ல முடியாது...ஒவ்வொருத்தனும் ஏராளமாக வல்லே சீதனத்தை எதிர் பார்க்கிருங்க...’

‘நீங்க ஒண்டுக்கும் கவலைப் படாதேங்க!.. அதது காலாகாலத்தில தன்ர பாட்டில நடக்கும்... இஞ்ச பாருங்கள் நடராசாவுக்கு முடிஞ்சா இன்னெருத்தன் ராசாவாட்டம் இருக்கிருனே!...’—என்கிருர் சின்னர்.

—ராஜா திடுக்கிட்டு அவரைப் பார்க்கிருன். அவர் விஷமப் புன்னகை புரிகிருர். அவர் கூற்றின் உட்பொருள் புரிந்தபோது—ராஜா சிலையாகிருன். அவனைக் கதவிடுக்கிலிருந்து இரு விழிகள் ஆர் [illegible] ருக்கின்றன!

(தொடரும்)

# அருவி நங்கை சொன்ன....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்களுக்கு முன்னர் கட்டிப் போட்டு, என் சுதந்திரத்தை அபகரித்துக் கொண்டனர், நாகர்கள என்னும் கொடியவர்கள். ஓய்யாரமாக ஓடித் திரிந்த என்னை எங்குமே செல்லாது தடுத்து அணை போட்டுவிட்டனர். சுதந்திரத்துக்காகப் போராடினேன். பலன் கிடைக்கவில்லை. என்னை ஒத்த சகோதரர்கள் பலரையும் என்னுடன் சேர்த்துக் கொண்டு விடுதலைக்காக ஏகோபித்த ஆயத்தங்களைச் செய்து கொண்டு சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தோம்.

எங்களைப் போல் சுதந்திரத்தைப் பறிகொடுத்துத் தவித்துக் கொண்டிருந்த வேறு பல அருவி நங்கையர்களும், தங்களை அடிமைப் படுத்தியவர்களைப் பழி வாங்க எத்தனங்கள் செய்து வெற்றியும் கண்டிருந்தார்கள். ஆமாப்! விஷக் கிருமிகளை வளர்த்து அவர்களை வேரோடழிக்க வகை செய்தோம். திட்டமும் வெற்றி கண்டது. எங்கள் எதிரிகளிலும் மாண்டவர் போக மீண்டவர் ஓடினர்.

வருணபகவானும், வாயு பகவானும செய்த உதவியின் பயனுக எங்கள் அணைகள் தகர்ந்தன. சுதந்திரமும் கிடைத்தது.

## நினைவு பெற்றேன்

என் தோழர்களில் யாரோ கை வைத்ததும் தான் சுய நினைவு பெற்றேன். திரும்பிப் பார்த்ததும் என்னருகில் சிற்றுண்டியைச் சேர்ந்த திரு சிவலிங்கம் ஆசிரியர் நின்றுகொண்டிருந்தார். குளிர்ச்சி பொருந்திய அழகான அருவிக்குள் காலைப் புதைத்துக்கொண்டு ஒரு கல்லில் மெய் மறந்திருந்தேன். அந்த அருவியின் குளிர்மையே என்னை உண்மையான கற்பனைக்கு அழைத்துச் சென்றது.

கருங்கற்களினுலான வானுயர்ந்த அணைகளை உடைத் தெறிந்து விட்டு ஆனந்தமாக நீர் வெளியேறிக் கொண்டிருந்தது. இருள் சூழ்ந்த காடு அடர்ந்திருந்தது. திரு. வேலாயுதம்பிள்ளையும், திரு. மாணிக்கவாசகரும் விபரத்தை விளக்கிக் கொண்டிருந்தனர்.

### மாவெட்டவான் மாண்பு

நாகர்களின் பாணியில் அமைந்த, கற்பணியுடன் கூடிய சின்னங்களை அங்கே காண முடிந்தது. முன்னை இந்நாட்டில் வாழ்ந்த நாகரிகத்தின் தலை மக்களாகிய தமிழர்களின் விவசாய மேம்பாட்டுக்கான ஆக்க வேலைகள் கால் ஓட்டத்தைக் கடந்தும் கண் முன் தென்பட்டன.

மாவெட்டவான் குளத்தின் அமைப்புத் திறனைப் பார்த்து வியந்துகொண்டு எங்கள் பிரயாணம் தொடர்ந்தது; இக்குளத்தின் படமும் அரசாங்கத்தின் நில அளவைப் படத்தில் கிடையாது.

சகதி நிறைந்த பள்ளங்களுக்குள் எங்கள் வண்டிகள் புதைந்து, மிதந்து சென்று கொண்டேயிருந்தன. ‘கானகத்தில் விருந்திருக்கிறது கடுதியாய்ச் செல்வோம்’ என்று எங்கள் வயிற்றில் பசியையும், வாயில் நீரையும் சுரக்க வைத்துக் கொண்டே திரு. மாணிக்கவாசகர் எங்களை வழி நடத்தினுர். பெரியதொரு பள்ளத்துள் விழுந்து எங்கள் வண்டி மேலெழுந்ததும் காட்டிற்குள்ளிருந்து பெரியதொரு பேரிரைச்சல், கானகத்தையே அதிர வைக்கும் முழக்கத்தை ஒத்த சப்தங்கள் கேட்டன. திடீரென எங்கள் ‘ஜீப்’ வண்டியின் வேகம் தணிந்தது. ஸ்தம்பித்து வண்டிகள் யாவும் நின்றுவிட்டன.

காட்டினுள் கேட்ட வெடி! கல்லிச்சைக் கோலாட்டம், சிவபெருமான் அருச்சுனருடன் செய்த யுத்தம்— ஆகியவை அடுத்த வாரம்...

# முதலாளி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை அரசாங்கத்தைக் கண்டிக்கின்றனர். உண்மை ஒரு நாளும் அழியாது. பசுத்தோல் போர்த்த புலிகள் எவ்வளவு காலம் வாழ முடியும் என்பதைக் காலம்தான் பதில் சொல்லும்.

திரு. வீர சுப்பிரமணியம், ஈழத்துநாதன், இன்னும் பல தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் தமிழ் தொழிலாளிகளது ஒற்றுமையை வலியுறுத்திப் பேசினர்.


**கைவசமுள்ளது**

மிகக் குறைந்த விலையில்

**ருமேனியன் சிமிந்தி**

(B. S. S. 1958க்கு சமதையானது)

திருகோணமலையிலுள்ள பண்டகசாலையிலிருந்து டெலிவரி கொடுக்கப்படும்.

இறக்குமதி செய்யப்பட்ட

**அஸ்பெஸ்டஸ் தகடுகள்**

(சாதாரணத் தகடுகளும், நெளிவுத் தகடுகளும்)

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட

**முட்கம்பிகள் 14 G**

மற்றும்:-

எஸ்லாண்டர் செய்கை முறையுடன்; பூரண செம்புத்தகடு இணைக்கப்பெற்ற புத்தம் புதிய

**மீன்பிடிப் படகுகள்**

விலை ரூ. 8000/-

**“கொன்டெக்ஸ்-10”**

(கையால் இயக்கும் கணக்கிடும் கருவிகள்)

மற்றும் விபரங்களுக்கு

தொடர்பு கொள்ளுங்கள்:-

**ஜபர்ஜி பிரதர்ஸ்,**

161, குமார வீதி, கொழும்பு-11.

தொலைபேசி : 78501.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# தொற்று நோய்கள்

—எம். பி. துரைராஜ், தெனியாய—

மனிதர்களுக்கும் மற்றுஞ் சீவராசிகளுக்கும் பலவிதமான நோய்கள் உண்டாகின்றன. அவற்றுட் சில நோய்கள், ஒருவரிலிருந்து மற்றவர்களுக்குத் தொற்றுகின்றன. இவைகள் தொற்று நோய்கள் எனப்படும்.

வைசூரி, உவாந்திபேதி, பிளேக், நெருப்புக் காய்ச்சல், சின்னமுத்து, கசம் முதலியன தொற்று நோய்களாம். இவற்றுள் வைசூரி, உவாந்திபேதி, பிளேக், நெருப்புக் காய்ச்சல் என்பன காற்று, நீர், உணவு முதலியவற்றின்மூலப் பரவுகின்றன. சின்னமுத்து, பொக்குளிப்பான் முதலியன காற்றினால் விரைவிற் பரவும். கசம் பல காலஞ் சென்ற பின் சிறிது சிறிதாகக் கொல்லுங் கொடிய தொற்றுநோயாகும்.

தொற்று நோய்கள் சுத்தமில்லாத இடங்களிலும் குடிசனம் அதிகமுள்ள இடங்களிலும் அதிகமாகப் பரவுகின்றன. அழுக்கு நிறைந்த இடங்கள், சேரிகள் முதலிய இடங்களில் வசிப்போர் பெரும்பாலுந் தொற்று நோய்களாற் பீடிக்கப்படுவர். பெலவீனர்களையும், முதியோர்களையும், குழந்தைகளையும் தொற்று நோய்கள் மிக விரைவிலே தாக்கும்.

சுத்தமான காற்றைச் சுவாசித்தும், கொதித்து ஆறிய நீரைப் பருகியும், தகுதியான உணவை உண்டும், சுத்தமான உடையை உடுத்தும் நாம் தொற்று நோயிலிருந்து தப்பிக்கொள்ளலாம். கண்ட இடங்களிலெல்லாம் மலங்கழிப்பது தொற்று நோய்கள் பரவுவதற்கு முக்கிய காரணமாகும். அம்மைப் பால் கட்டியும் தடுப்பு ஊசி மருந்துகளை ஏற்றியும் தொற்று நோய்கள் வராமற்றடுக்கலாம்.

குடும்பத்திலே ஒருவருக்குத் தொற்று நோய் ஏற்படின், நாம் அவரை முறையாகப் பராமரித்தல் வேண்டும். அவரை, காற்றோட்டமுள்ள ஒரு தனி அறையிலே படுக்க வைக்க வேண்டும். அவரைப் பராமரிப்பதற்கு, தடுப்பு மருந்து பாய்ச்சப்பட்டவரை நியமிக்க வேண்டும். புறம்பான பாத்திரங்களில் உணவு கொடுக்க வேண்டும், உடைகளையும், படுக்கைகளையும் கொதிக்கும் வெந்நீரிலே துவைக்க வேண்டும். நோயாளர் உபயோகிக்கும் பொருள்களை மற்றையோர் தீண்டுதல் கூடாது. இவ்வாறு தொற்று நோயாளரைப் பாதுகாத்தல் வேண்டும்.

தொற்று நோய்கள் ஒரு நாட்டிலேற்பட்டாற் சில வேளைகளில் ஆயிரக்கணக்கான மக்களை அழித்துவிடுவதும் உண்டு. ஆகையால் நாம் கவனமாக இருந்து தொற்று நோய்கள் நம்மை அணுகாது பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

# ஊரின் பெயர் விளம்புவீர்...

ஜே. ஜெயக்குமார், கரணவாய் தெற்கு

முதல் எழுத்து: உடையிலுண்டு, கடையில் இல்லை.
இரண்டாம் எழுத்து: மடுவில் உண்டு, மலையில் இல்லை.
மூன்றும் எழுத்து: அப்பாவிலுண்டு, அம்மாவில் இல்லை.
நான்காம் எழுத்து: பிள்ளையில் உண்டு, பிதாவில் இல்லை.
ஐந்தாம் எழுத்து: வட்டியில் உண்டு, முதலில் இல்லை.
ஆறும் எழுத்து: அடியில் உண்டு, யாரில் இல்லை.

விடை: உடுப்பிட்டி

# தாகூரின் எண்ணக் கருத்துக்கள்

| செல்வி மும்தாஜ் |

அஹிம்சா மார்க்கம் என்றால் கொடுமைகளையும் அநீதிகளையும் மௌனமாகப் பொறுத்துக் கொள்ளும் பயங்காளித்தனம் அல்ல.

★

சூரியனை விட மேகங்கள் சக்திவாய்ந்தவையும் அல்ல, நீடித்தவையும் அல்ல. மேகங்கள் எவ்வளவு பெரியதாக இருந்த போதிலும் சூரியனை அடியோடு மறைத்து விட முடிவதில்லை. இது போன்றுதான், ஒரு நல்ல மனிதனைத் தலைதூக்கவொட்டாமல் அடக்கும் கயவர் கூட்டத்தினரின் முயற்சியும்.

★

மனிதன் பாடுபட்டு உயிர் வாழ முயல்கிறான். ஆனால் உயிர் என்னவோ தங்காமல் போய்விடுகிறது. அதற்காகவே இந்த அற்ப வாழ்வில் சிலகாலமாவது தெம்பாக இருக்க உயிரிலும் எவ்வளவோ உயர்வான ஒன்றைத் தேடி அலைகிறான்.

★

சுதந்திரம் எனது தேவை. அதை நம்பியிருக்க நான் வெட்கமடைகிறேன்.

★

ஆவணி மாதத்து கருமுகிலிற்குச் சண்டாளன் என்று பெயர் இட்டதனால் அதன் உயர்வு குறைந்து போகுமா? அதன் நீர் சுவையற்றதாகுமா? இழிவாக உன்னையே நீ நினைத்துக் கொள்ளாதே.

★

மனித ஒற்றுமையில்தான் சுதந்திரத்தின் வித்துக்கள் காணப்படுகின்றன. நமக்குள் ஏற்பட்டிருக்கும் பலவித பிளவுகளாலேயே நமது அடிமைத்தனம் பலப்பட்டு வருகிறது.

★

துப்பாக்கிகளோ போர்க் கருவிகளோ மெய்யான உரிமையை ஒருபோதும் அழியா. மக்கள் தங்கள் நேர்மையான கடமைகளை உணரும்போதுதான்—அவற்றைச் செயலில் கையாளும் போதுதான்—உரிமை என்பதைப் பெற உரிமை பெற்றவர் ஆவர். அரசியல் உரிமை [illegible] மனித உரிமை வேறு, மண் உரிமை வேறு

# பாடத்தைப் படித்திடு பாப்பா!

—செ. குணரெத்தினம், மட்டக்களப்பு—

பள்ளிக்கு ஒருமாதம் போகவில்லை—பாப்பா
பாடங்கள் பலநாளாய்ப் படிக்கவில்லை
நல்ல விடுதலை பெற்றாய் பாப்பா—இனி
நாளெல்லாம் பாடம் படித்திடுவாய்.


விளையாட்டை விட்டிட வேணுமடி—பாப்பா
வீண்வார்த்தை எதுவுமே கூடாதடி
சளையாமல்ப் படித்திட வேணுமடி—உன்
சண்டித் தனமெல்லாம் விட்டுடடி.

இரவது வந்ததும் தூங்க வேண்டாம்—இனி
என்னாளும் படித்தபின் தூங்கவேண்டும்
சிரமேற்றுக் கொண்டிதைச் செய்வாயடி—உன்
சிறப்பைத்தான் நான்காண வேண்டாமோடி

இன்னிம் சில நாளில்ப் பாடசாலை—பாப்பா
எல்லாமே எங்கிலும் தொடங்குதடி
என்னடி பார்க்கிறாய் என்னைநீயும்—பார்த்து
ஏங்காதே பாடத்தைப் படித்திடடி.



செல்வி நான்ஸி ரேமி—அமெரிக்காவின் தலை சிறந்த நீச்சல் வீராங்கனை. சங்கீதத்தில் மிகப் பிரியமுள்ளவர். 1956 ஒலிம்பிக் விளையாட்டின் பின், ஹங்கேரியின் நீச்சல் வீராங்கனை சுஸா ஔர்டோக்கைத் தமது 'சகோதரி'யாகத் தம்முடன்வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டார்.




—க. இராணி நவமணி—

அதே கணம் ஆ...என்று அலறியபடி நிலத்தில் சாய்ந்தான், கட்டளையை நிறைவேற்ற வாளை ஓங்கிக்கொண்டு நின்றவன். அவன் மார்பில் ஒரு அம்பு பாய்ச்சப்பட்டிருந்தது. எங்கிருந்தோ ஒரு விசில் சத்தம் கேட்டது. மறுநிமிடம் யாக களம் போர்க்களமாக மாறியது.

சில மணித்தியாலங்கள் வரை கடும்போர் நிகழ்ந்தது. வீரர்கள் சிலர் மடிந்தனர்.

அரசர் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தார். திருடர்கள் முன்னேறிக் கொண்டிருந்தனர். நிலைமை மோசமாவதை அறிந்த அரசரும் போரில் கலந்து கொண்டார். பின் சில நிமிடங்களில் திருடர் தலைவனைத் தவிர மற்ற எல்லோரும் மடிந்தனர். தலைவன் தப்பிச் சென்றுவிட்டான்.

அரசர் அவரவர் பெற்றோரிடம் கன்னியர்களைச் சேர்க்கும்படி வீரர்களுக்குக் கட்டளை இட்டார்.

பல நாட்களாகப் பிரிந்திருந்த தங்கள் கன்னிப் பெண்களைப் பெற்ற பெற்றோர் பெரு மகிழ்ச்சியடைந்தார்கள். அரசருக்கு ஒரு பெரு விழாவையும் நடத்தினார்கள்.

சிறுவனும் அரசரும் சில வீரரும் திருடன் வசிப்பிடத்தைப் பார்க்கப் புறப்பட்டார்கள். சிறுவன் வழிகாட்டி அழைத்துச் சென்றான். அவர்கள் திருடரின் மனையை அடைந்ததும், திருடர் மனைதானா, அன்றி தேவலோகமா என்று சந்தேகித்தனர். முதலிலேயே எல்லாவற்றையும் கேட்டும் பார்த்தும் சென்ற சிறுவன், அவர்களின் ஐயத்தைத் தீர்த்து வைத்தான். கொள்ளை எவ்வளவு உச்ச நிலையில் நடைபெற்றிருக்கிறது என்பதை அரசரால் அப்போதுதான் அறிய முடிந்தது. அரசர் கட்டளைப்படி அங்கிருந்த எல்லாவற்றையும் அரண்மனைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தனர். அத்தோடு திருடர் மனையையும் தரைமட்டமாக்கினர்.

இவற்றை முடித்துக் கொண்டு இவர்கள் மலைக்குகை மாளிகையை அடைவதற்கும், திருடர் தலைவன் அவ்விடத்தை அடையவும் சரியாக இருந்தது. அரசனைக் கண்ட திருடர் தலைவன் அரசன்மீது கட்டாரியை வீசித் தாக்க முயன்றான். உடனே சிறுவன் தன் கையிலிருந்த வேலை அவன் மார்பின்மீது வீசினான். அது அவன் மார்பைப் பிளக்க 'ஐயோ' என்று அலறியபடி அவன் மலைக்குகை மாளிகைக் கதவிலே சாய்ந்தான். மணியும் ஒன்று அடித்தது. அதில் குறிப்பிட்டுள்ளபடி நூறு வீரர்களும் பத்து அரசரும் மடிந்தனர். திருடர் தலைவனையும் சேர்த்துத்தான் நூறு வீரர்கள். ஆகவே, குகைக் கதவும் திறந்தது. இவை எல்லாம் அரசருக்கு ஒரே அதிசயமாக இருந்தது.

(தொடரும்)

# பொன் மொழிகள்

**முயற்சி:—**

முள் நிறைந்த செடியில்தான் அழகும் வாசனையும் பொருந்திய ரோசா மலர்கிறது. அது போலவே சொல்ல முடியாத துன்பத்திற்கும் எதிர்ப்புக்கும் மத்தியிலேதான் உண்மை மலர்கிறது.

—மகாத்மா

**வெற்றி:—**

குறிக்கோள் ஒன்று; ஊக்கம் மிகுதி; நெஞ்சில் உறுதி; உழைப்பில் சளைப்பில்லை; பாதை நேர்மையை அடிப்படையாகக் கொண்டது; வெற்றி கிட்டாமலா போய்விடும்?

—க்ரென்வில் க்ளீஸ்பர்

**நா காத்தல்:—**

கால் இடறிவிட்டால் அதனைச் சரி செய்து கொள்ளலாம். நாவு இடறினால் உன்னால் மீள முடியாது.

—பிராங்க்ளின்

**இன்பம்:—**

மனத்தை ஒருமுகப்படுத்த முடியாதவனுக்கு அறிவும் ஆழ்ந்த சிந்தனையும் கிடையாது. ஆழ்ந்த சிந்தனையற்றவன் அமைதியும் இன்பமும் பெற முடியாது.

—கீதை

**இயற்கை:—**

எரிமலையும் வெள்ளமும் இடியும் உன் கோபத்தின் விளக்கம்: மழையும் தென்றலும் நிலவும் உன் கருணையின் விளக்கம்.

—சுவாமி சுத்தானந்தர்

தொகுத்தவர்:
க. கனகலிங்கம்,
கோண்டாவில்.

# தரணி போற்றும் தாய்மை

கடவுள், தான் எங்கும் இருக்க முடியாது என்பதற்காகவே தாயைப் படைத்தான்.

—யூதப் பழமொழி

அழகியின் சிரிப்பைவிட தாயின் கண்ணீரே வலிமையுடையது.

—ஷேக்ஸ்பியர்

தாயின் அன்பை வெளியிட உலகத்திலுள்ள எந்த மொழிகளிலும் போதிய வார்த்தைகள் இல்லை.

—சோபீன்

தாய்மை என்பதுதான் பெண்களின் மிக முக்கிய அணிகலன்.

—மாட்டீன் லூதர்

# அன்னை

—அக்கரை மாணிக்கம்—

அன்னை எந்தன் அன்னை
அழகுத் தமிழ் அன்னை
என்னைப் பத்து மாதம்
சுமந்து பெற்ற அன்னை.

உண்ண உணவு காட்டுவாள்
உணர்வுந் தமிழு மூட்டுவாள்
கண்ணைப் போல என்னைக்
காக்குந் தெய்வ அன்னை.

என்று மென்னைக் காக்கும்
இனிய தெய்வ மன்னை
தொன்று தொட்டு நெஞ்சிலே
துலங்குங் கோயில் அன்னை.

தமிழைப் போல பெருமையுந்
தரையைப் போல பொறுமையும்
அமிழ்தைப் போல இனிமையும்
அன்புங் கொண்ட அன்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணிக்குப் பாராட்டு

## 'சைவ சித்தாந்த சாகரம்' என கௌரவிக்கப்பட்டார்

"நம்முடைய கொடு நோயையும் பொருட்படுத்தாமல் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றி வருகிறார்கள் நாவலர் பரம்பரையில் வந்தவர்கள். மரபுபேணி வாழ்ந்து வரும் ஓர் அறிஞர் தமது குணாதிசயங்களைத் தம்முடைய மாணவர்கள் மீது அப்படியே பதியச் செய்துவிட்டார். இதுவே அவர்களது தனிச் சிறப்பு." என்று நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய முன்னாள் உப வித்தியாபதி திரு. க. ச. அருள்நந்தி அவர்கள் கூறினார்கள்.

பழநி அங்கப்பா கோஷ்டியாரின் நாதஸ்வர இசை முழக்க பழைய மாணவர்கள் அபிமானிகள் மிகவும் திரளாகக் கூடி சரித்திரப் பிரசித்தி வாய்ந்த வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து பண்டிதமணி அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். வைத்தீஸ்வரவித்தியாலய மண்டபம் மகர தோரணங்களாலும் காட்சிகளாலும் மிக்கு விளங்கியது.

திரு. த. இராசேந்திரம் அவர்களது வரவேற்புரையை அடுத்து தலைமையுரை நிகழ்ந்தது. திரு. கே. பி. ஹரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கும் போது பண்டிதமணி அவர்கள் சைவ சித்தாந்த கருத்துக்களையெல்லாம் தொகுத்து வெளியிட்ட "சமயக் கட்டுரைகள்" என்னும் இந்நூல் எமக்கு ஓர் அரிய கருவூலமாகும். இதனால் நாங்கள் பண்டிதமணி அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். பண்டிதமணியின் பழைய மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டு இந்த அரிய கைங்கரியத்தை யாற்றியுள்ளனர். இந் நூல் எல்லா இடங்களிலும் பரவிப் பெருக வேண்டுமென்று குறிப்பிட்டார். விழாக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம், பௌதிகப்பேராசிரியர் அ. வி. மயில்வாகனம், சமஸ்கிருதப் பேராசிரியர் டாக்டர் கா. கைலாசநாதக் குருக்கள் சிவ ஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் முதலிய பெரியோர்களது வாழ்த்துரைகளை வாசித்து நன்றியும் தெரிவித்தார்.

வைத்திய தாத்தாவாகிய டாக்டர் எஸ், சுப்பிரமணியம் அவர்கள் கூறியதாவது:- 'பண்டிதமணி ஒரு பேரறிஞர். அவர் நாட்டுக்கும் நமக்கும் பிற்கால சந்ததியாருக்கும் பயன்படத்தக்க வகையில் இந்த அரிய நூலைச் செய்து தந்திருக்கின்றார் பண்டிதமணி அவர்கள் நீடூழி வாழ வேண்டும்' என்றுமுதலாவது பிரதியைப் பெற்ற போது உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார்.

பண்டிதமணி அவர்கள் சான்றோர்களாகிய புலவர் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவர் என்று பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களும், பண்டிதமணியின் நூல் கிடைப்பதற்கரிய தொரு சிந்தாந்தக் கருவூலம் என்றும் வித்வான் பொன் முத்துக்குமாரன் அவர்களும் குறிப்பிட்டார்கள்.

நாவலர் பரம்பரையில் வந்து நாவலர் அடியொற்றி வாழும் பண்டிதமணி அவர்களே நாவலர் சரித்திரம் எழுதக்கூடிய ஒரு பெரியார் என்றும், அவர்கள் நாவலர் சரித்திரம் எழுதி சைவ உலகும் தமிழ் உலகும் பயன்படஆவன செய்ய வேண்டுமென்றும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

இறுதியாக விமர்சனம் செய்த திரு. கி. லக்ஷ்மணன் அவர்கள் பண்டிதமணி தமது ஹாஸ்ய உணர்ச்சியினூடே அரிய பெரிய சித்தாந்தக் கருத்துக்களை இந்த நூல் வாயிலாக எமக்குத் தெரிவிக்கிறார்கள் என்றும், "சமயக் கட்டுரைகள்" என்னும் இவ்வரிய நூலை ஹிந்தியில் மொழிபெயர்ப்பது அவசியமாகுமென்றும் குறிப்பிட்டார்கள்.

சபையோர்களின் பலத்த கரகோஷங்களுக்கிடையே பண்டிதமணி அவர்களுக்கு சைவ சித்தாந்தா சாகரம், என்னும் கௌரவப் பட்டத்தை தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

**பண்டிதமணி அவர்கள் நன்றி** தெரிவித்துப் பேசியதாவது "அவ்வப்போது எனது மனக் கருத்துக்களைப் பத்திரிகைகளில் எழுதி வந்தேன். நூல் வடிவில் வரவேண்டுமென்ற நோக்குடன் எழுதியதில்லை. இந்தக் கருத்துககளை ஏதோ சொல்வதற்கு முன்னின்று வழி நடத்திய பெருமை சைவாசிரிய கலாசாலை முன்னாள் உப அதிபர் திரு. பொ. கைலாசபதி அவர்களையே சார்ந்தது. ஒரு காலத்தில் சிறப்புடன் இருந்த திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை பள்ளியெழுச்சி பாடத்தக்க வகையில் துயில் கொள்கிறது. திரு. பொ. கைலாசபதி அவர்கள் ஒரு மகான். கலாயோகி. அவர்களுக்கு சில காட்சிகள் தென்பட்டன. அவர் இந்த உலகத்தில் இருந்து கொண்டே உயர்ந்த இன்னொரு உலகத்திலும் சஞ்சரித்துக்கொண்டிருந்தார். அவர்கள் சிந்தனைகள் நமக்கு எட்டாதவைகள். அவர்கள் வரிசை வேறு.

தேவர்களுக்குப் "புலவர்கள் என்று பெயர்ப் புலமை-அறிவு மனிதப் புலமைக்கு எட்டாத புலமை. அப்படிப்பட்ட புலமையுடைய தேவர்களே அமிர்தமாகிய நிலையான பொருளை அடைவதற்குப்பாற்சமுத்திரத்தைக் கடைந்தார்கள் அமிர்தத்திற்குப் பதிலாக நஞ்சுதான் எழுந்தது. நிலையான பொருளை வேண்டிய தேவர்கள் நில்லாமல் ஓடுவதற்குரிய நஞ்சு தோன்றியது. புலவர்களாகிய தேவர்களுடைய கடைவு நஞ்சைப் பிறப்பிக்குமானல் இக்காலத்து கட்டுரையாளர்கள், பேச்சாளர்கள் நூல் எழுதுபவர்கள் கடைவுகள் எதைத் தான் பிறப்பிக்குமோ" என்று உப அதிபர் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். நான் இட்பொழுது நல்ல கருத்துக்கள் சொல்கிறேன் என்றல் அவைகள் யாவும் அந்த மகானின் வாயில் இருந்து வெளிவந்தவைகளாகவே இருக்கும். ஏனைய பேய்க் கதைகள் யாவும் தான் எனது சொந்தச் சரக்கு" என்று இறுதியில் கூறினார்கள்.

### சைவமகா சபை ஆண்டு விழா

களுவாஞ்சிக்குடி சைவ மகாசபையின் 11-வது ஆண்டு நிறைவு விழா வழமைபோல் இம் முறையும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சபைத் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் பா. உ. அவர்கள் தாமதித்து வந்தமையால் உப தலைவர் திரு. எஸ். அரசரத்தினம் கி. த. அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகி, திரு. கா. கனகசபை அவர்களின் தேவார பாராயணத்துடன், தேவார மனன இசைப் போட்டி நடைபெற்றது.

வல்லுனர்களைத் தெரியும் மத்தியஸ்தர் குழுவில் திரு. கே. மகாதேவா (பிரிவுக்காரியாதிகாரி) திரு. பி. சிவசேகரம் ஆசிரியர், திரு. சா. கந்தப்பன் நொத்தாரிஸ் அவர்கள் இடம் பெற்றனர். மேற்பிரிவில் மூவரும். கீழ்ப்பிரிவில் மூவரும் பரிசுகள் பெற்றனர்.

காரியதரிசியின் பதினோராவது ஆண்டறிக்கையில், சங்கத்தின் நோக்கத்தையும் வளர்ச்சியையும் எடுத்துக் கூறியதுடன், எதிர்கால வேலைத் திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. தனதிகாரி அவர்களின் வரவு செலவு அறிக்கை வாசிக்கப்பட்டதும் பின்வரும் பேச்சாளர்கள் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். திரு. ஐ. குழந்தைவேல் பண்டிதர் அவர்கள் திருக்குறள் ஒரு தமிழ் மறை என்னும் பொருள் பற்றியும், திரு. கே. ஏ. பாக்கியன் ஆசிரியர் ஒரு கதாப்பிரசங்கமும், ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா அவர்கள், திரு. செ. இராசதுரை மட்டக்களப்பு முதல் பாராளுமன்றப் பிரதிநிதி அவர்கள், திரு. சி. மூ, இராசமாணிக்கம் அவர்கள், திருமதி. பூரணம் சதாசிவம் பிள்ளை அவர்கள், செல்வி செ. நல்லம்மா ஆசிரியை அவர்கள், செல்வன் அ. கந்தவேள் அவர்கள், முறையே சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தினர். இடையில் திரு. எஸ். கனகரெத்தினம் அவர்களின் புல்லாங்குழல் விருந்தும், திரு. என். ரீ. செல்வநாயகம், திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை அவர்களின் சங்கீதக் கச்சேரியும் சபையாரின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம் பெற்றதுடன் காரியதரிசி திரு. கோ. பாக்கியராசா அவர்களின் நன்றியுரையுடனும் பூசையுடனும் விழா முடிவுற்றது.

### யாழ்ப்பாணத்துச்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

**பாரதியாரின் சந்திப்பு**

புதுவைக்குச் சென்று அங்கு மரியநாதன் என்பவருடன் தங்கினார். புதுவையிலேயே பாரதியாருக்கும் இவருக்கும் நட்புண்டாயிற்று. சுப்பிரமணிய பாரதியாருக்கு இவர்தான் ஞான குரு. பாரதியாரை அருளம்பளம் முற்றுகத் தன் வயமாக்கிவிட்டார்.

சுவாமியினது திருவுருவப் படத்தையும் பாரதியாரின் படத்தையும் நோக்கினல் இருவர் கண்ணிலும் ஓர் அக்கினிப் பார்வை தென்படும். எதையும் மதியாத-எதையும் நோக்காத ஒரு ஞானப் பார்வை தென்படும். சுவாமி பாரதியாருக்குத் தம்மை நன்ருக உணர்த்தியிருக்கிரூர். சுவாமியைப் பற்றி பாரதியார் பாடியது முற்றிலும் பொருத்தமானதே!

**சமாதி அடைந்தார்**

1929-ம் ஆண்டு இலங்கை திரும்பினார். வதிரியில் வாழ்ந்த தம் சகோதரியுடன் தங்கினார். 1930-ம் ஆண்டு இந்தியா திரும்பினார். நாகப்பட்டினத்தில் சிவப்பிரகாசம் என்பவர் ஒரு மடம் கட்டி அவரை அதில் இருத்தினார்.

1942-ம் ஆண்டு மீண்டும் தாயகம் திரும்பினார். 1942-ம் ஆண்டு டிசம்பர் 3-ம் திகதி அவர் நிஷ்டையில் கூடியிருந்த போது மகா சமாதி அடைந்தார். வியாபாரிமூலை வீரபத்திர சுவாமி கோவிலுக் கருகாமையில் சமாதி உள்ளது. இங்கே சமாதி ஆலயமும் கட்டி நித்திய பூசையும் நடைபெற்று வருகிறது. இதைப் பாலசுப்பிரமணியம் என்பவர் தர்ம பரிபாலனம் செய்து வருகிரூர்.

## சுதந்திரத்தைக் காணத்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்குக் கடுமையான வருத்தம் எனவும், அதனால் அவருக்கு நிபந்தனையுடன் கூடிய மன்னிப்பும் விடுதலையும் அளிக்கப்படுவதாகவும் இரண்டாவது அகதி உண்மையில் குற்றவாளியல்லாததால் விடுதலை அளிக்கப்படுவதாகவும் கூறினர். ஆனல் எவருடைய மனைவிக்குச் சுகவீனம் என்றனரோ அவர் திருமணம் ஆகாதவர்! அதனால் அதிகாரிகளின் சூழ்ச்சி அம்பலமாகியது. தேவையான இருவரும் அகப்படவில்லை.

அதிகாரிகள் ஆத்திரமடைந்தனர். அகதிகளைத் தனிமையாகக் குடிசைகளில் அடைத்து வைத்தனர். உண்ண முடியாத உணவுகளைக் கொடுத்தனர்; ஒருவரோடு ஒருவர் காவல்காரர் இல்லாதபோது பேசுவதைத் தடைசெய்தனர். இதற்கு ஒரு பரிகாரம் தேடுவதற்காகத் திறம் மூளைசாலியான மைக்கேல் கொளின்ஸ் சிந்தனை செய்தார்; கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். தம்மையும் மற்றவர்களையும் ஒன்ருக விடும்பொழுது, சுகம் விசாரிப்பது போல் அவர்களுடன் பேசித் தனது முடிவை அவர்களுக்குத் தெரிவித்தார். அவர்களும் அம்முடிவை ஏற்றுக்கொண்டனர். அம்முடிவின் படி, சடுதியாக 200 அகதிகள் உண்ணுவிரதம் இருக்க ஆரம்பித்தனர். எதுவும் செய்ய முடியாத சிறை அதிகாரிகள் இறுதியில் வழிக்கு வந்தனர்.

டாட்மூர் சிறைச்சாலையில், ஒரு கைதி அதிகாரிகளின் கட்டளைக்குப் பணிய மறுத்தார். அச்சிறு குற்றத்திற்காக அவர் தண்டிக்கப்பட்டார். தமது தோழர் இவ்வாறு தண்டிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என மற்றக் கைதிகள் தளபதி ஏமன் டி வேலராவிடம் கூறினர். கைதிகள் உணவோ நீரோ அருந்த மறுக்க வேண்டும் என டி வேலரா அவர்களுக்குக் கூறினார். அவர் விருப்பப்படி கைதிகள் உண்ணுவிரதம் இருந்தனர். அதன் காரணமாக டி வேலரா மெயிட்ஸ்ரன் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் கைதிகள், ஹரி போலண்ட், ஒஸ்ரின் ஸ்ரக், தோமஸ் முதலியோரின் தலைமையில் அதிகாரிகளுக்குத் தலையிடி கொடுத்துக் கொண்டே வந்தனர்!

(வளரும்)

### மக்கள் குரல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட மதிப்புப் பெருத இவருக்கு எங்களூர் சுயநலமிகள் சிலரும் வால்பிடிப்பதும் ஏனே தெரியவில்லை.

21ம் திகதி நடைபெற்ற தமிழரசுக் கூட்டத்தின் போது ஒரே ஒரு வீட்டிலும், எவருக்குச் சொந்தம் என்று தெரியாத ஒரு பாழ் வளவிலும் கறுப்புக் கொடிகளைக் கட்டியிருக்கின்றனர். தனது சொந்த ஊரான குருக்கள் மடத்தில் இந்தப் போலிப் பட்டதாரியால் ஒரு சிறு எதிர்ப்பும் காட்ட முடியவில்லை எங்கள் ஊரில் வந்து சில அப்பாவிகளை ஏமாற்றி கறுப்புக் கொடி கட்ட ஏவியிருக்கிரூர். அத்துடன், அவர்களின் வயிற்றெரிச்சலை வெளியிட உதவிய முன்கூறப்பட்ட பத்திரிகையில், செட்டி பாளையத்தில் கூட்டமே நடைபெறவில்லை என்று வேறு புளுகியுள்ளனர்.

இத்தகைய பொய்க்கும், புரட்டலுக்கும், புளுகுக்கும், புனைந்துரைக்கும் மக்கள் செவிசாய்த்த காலம் மலையேறிவிட்டது என்பதை இவர்களுக்கு தமிழரசுக் கொள்கையிலே ஊறித் திளைத்த செட்டி பாளையத்து இளைஞர்கள் யாவரும் எடுத்துக்கூற விரும்புகின்றனர்.

—செட்டி நகர்ச் செல்வன்
செட்டி பாளையம்.


## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரூமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரூமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# 6-வது வெற்றி வாரம்!

175 நாட்களுக்குமேல் ஓடிய, இந்திய ஜனதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெற்ற, ஓரே ஒரு தமிழ்ப் படம்.



சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருகோணமலை) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு)

மற்றும் 7 திரைகளில்

ஸ்ரீதரின்

# நெஞ்சில் ஓர் ஆலயம்

* சிறந்த கதை * நிறைந்த கருத்து
* உயர்ந்த நடிப்பு * உணர்ச்சித் துடிப்பு

● காதலுக்கும் கடமைக்கும் இடையில் ஏற்படும் மோதல்.

● குறைந்த காலத்தில் சிறப்புடன் தயாராகித் தென்னகத் திரைவானில் தனிக்கொடி நாட்டியது.

இசை:
விஸ்வநாதன் ராமமூர்த்தி

---


## 4-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மொடர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

சென்னையில் நான்கு படமாளிகைகளில் 100-வது நாள் விழா கொண்டாடிய சிறந்த திரைச் சித்திரம்!

பி. எஸ். வி. பிக்சர்ஸ்

# ஆலயமணி



பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை! ஆசையும், நேசமும், பாசமும் சந்தோஷத்திற்கு பலியாகும்...விந்தை! உள்ளத்தை உருக்கும் காட்சிகளுக்கு உயிராக இருக்கும் இனிய இசை. நாடும், ஏடும் போற்றும் நற்றமிழ் காவியம்!!

நடிகர்கள்:
சிவாஜி கணேசன்—பி. சரோஜாதேவி
எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி
எம். ஆர். ராதா—பி. எஸ். வீரப்பா
எம். வி. ராஜம்மா—வி. நாகையா

இசை:
விஸ்வநாதன் - ராமமூர்த்தி

டைரக்ஷன்:
கே. சங்கர்

---

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால் [கொட்டாஞ்சேனை] ரொக்ஸி [வெள்ளவத்தை] வின்சர் [யாழ்ப்பாணம்]
இம்பீரியல் [மட்டக்களப்பு] ரீகல் [நுவரெலியா]



மனோகர், நரசிம்மபாரதி,
டி. பாலசுப்பிரமணியம்,
அஞ்சலிதேவி, மாதுரிதேவி,
டி. ஏ. மதுரம்,

காலஞ் சென்ற கலைவாணர்
என். எஸ். கிருஷ்ணன்
நடித்த

# தோழன்

பாடல்கள்: மருதகாசி ★ இசை: ஜி. இராமநாதன்

பின்னணி: சிறினிவாஸ், ஜிக்கி, சுசீலா, ரத்னமாலா, பாலசரஸ்வதி.

## சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்கு விரைவில் வருகிறது!

ஜெமினி கணேசன்,
அஞ்சலிதேவி,
எம். ஆர். ராதா,
நாகையா,
கண்ணாம்பா,
தோன்றும்



# மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்

இசை:
ஆதிநாராயணராவ்

பின்னணி:
சுசீலா—ஜானகி—டி. எம். சௌந்தரராஜன்
கண்டசாலா—ஸ்ரீனிவாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் மே மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.